Rev. Clement Duraisingh B.A

உனது எதிர்காலத்தை நினை

ஆக்கியோன் :
வில்லியம் மக்டானல்ட்

பிரசுரிப்பவர் :
சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
158, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-7.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

முதற் பதிப்பு : 1971

© Operation Mobilisation-India

தமிழாக்கம் :

பா. யாபேஸ் சாமுவேல் பி.ஏ., எல்.டி.,

Published by

EVANGELICAL LITERATURE SERVICE,

158, Purasawalkam High Road,

Madras-7.

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
1.	வாழ்க்கையை வாழவைக்கும் பொன் மொழிகள்	5
2.	ஒரே வாழ்க்கை ஒரே வாய்ப்பு	8
3.	குறுகிய நிலையற்ற வாழ்வு	12
4.	ஊழிக்காலம்	15
5.	பொன்னான வாய்ப்பு	18
6.	நித்திய ஜீவனுக்கேற்ற கல்வி	24
7.	உன் எதிர்காலத்தை நீயே தெரிந்து கொள்கிறாய்	29
8.	அடைய விரும்பும் குறிக்கோள்	33
9.	நாம் கடனாளிகள்	40
10.	ஒப்புவிக்கப்பட்ட வாழக்கை	50
11.	தொழில் நடத்தும் முறை	59
12.	நொண்டிச் சாக்கு போக்குகள், மழுப்பல்கள்	68
13.	எரிந்து பிரகாசிக்கும் வாழ்க்கை	74

இயேசுவுக்கென்று என் ஜீவன் எரிந்து பிரகாசித்தால்
சாகும் வேளையில் அதுவே என் ஆனந்தம்.
பாவியொருவன் உம்மை நோக்கிட என்
ஆவி, பொருள், காலம் செலவிட்டதே என் மகிழ்ச்சி.
என் பாதை கரடு முரடானால் என்ன?
உம் அடிச்சுவடுகளில் நடப்பதே என் பாக்கியம்.
உமக்கென்று நான் ஒளி வீசினால்
சாகும் வேளையில் அதுவே எனக்கொளி.

—பொறுக்குமணிகள்

I

வாழ்க்கையை வாழவைக்கும் பொன் மொழிகள்

சிறந்த குறிக்கோள்கள் ஒருவனுடைய வாழ்க்கையைச்சிறக்கச் செய்கின்றது. ஒருவன் பல ஆண்டுகளாக சாதாரண பயனற்ற வாழ்க்கை நடத்தியிருக்கலாம். தற்செயலாக ஒரு பொன்மொழி அவனுக்கெதிரே தோன்றி கிரியை செய்ய ஆரம்பிக்கிறது. அவன் வாழ்க்கையின் இலட்சியம் மாறி அவன் ஒரு புதிய ஆளாகிறுன்.

ஹட்சன் டெய்லர் தன் தந்தையின் நூல் நிலையத்திலுள்ள புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். திடீரென, 'இயேசு கிறிஸ்து செய்து தீர்த்த கிரியை' என்னும் வாசகம் அவரைக் கவர்ந்தது. அப்படியாஞல் தான் இனி அவரை நம்புவதைத் தவிர வேறென்றும் செய்ய வேண்டியதில்லை என்பது புலஞயிற்று. அவர் ஆன்மாவில் ஒளியும் சமாதானமும் பாய்ந்தது. சில ஆண்டுகள் கழித்து அவர் சீஞவின் உள் நாட்டில் நற்செய்தியை அறிவிக்கச் சென்ருர்.

ஜெர்மனி நாட்டில் சின் சின்டார்ப் பிரபு இளைஞஞக இருந்த பொழுது கிறிஸ்துவின் சிலுவைக் காட்சிப் படம் ஒன்றைப் பார்த்தார். அதன் அடியில், "இதோ உனக்காக இப்பாடுகள் பட்டேன்" என்ற வாசகம் எழுதியிருந்தது. அச்சிறந்த தியாகம் அவர் உள்ளத்தை உருக்கியது. இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகரா!!க ஏற்றுக்கொண்டார். அடுத்த

வரியையும் படித்தார். அதில், "நீ எனக்காக என்ன செய்திருக்கிறாய்?" என்ற கேள்வி இருந்தது. அதற்கு விடையாக அவர் தம்மை அன்போடு இயேசுவுக்கு அர்ப்பணித்தார். இன்னும் அவருடைய பெயர் மொரேவிய மிஷனரி இயக்கத்தில் அழியா இடம் பெற்றுள்ளது.

டுவைட் எல். மூடி இங்கிலாந்தில் உயிர் மீட்சிக் கூட்டம் நடத்திவிட்டு விடைபெற்றுக் கொள்ளும் பொழுது, ஆங்கிலப்போதகர் ஹென்றி வார்லி அவரைப் பார்த்து, அறைகூவல் விடுவது போல, "நண்பனே, தெய்வ சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புவித்த ஒரு மனிதனை அவர் ஊக்குவிப்பதை இனிமேல் தான் உலகத்தார் காணப்போகிறார்கள்" என்றார். இவ் வார்த்தைகள் மூடிப் பிரசங்கியாரின் மனதில் பதிந்து விட்டன. ஓயாது இவ்வார்த்தைகள் அவர் செவி களில் ஒலித்துக்கொண்டேயிருந்தன. கடல்பயணத் திலும், நியுயார்க் பட்டணத்தின் தெருக்களில் நடக்கும் பொழுதும், சிக்காகோவிற்கு ரயிலில் போகும் பொழுதும் இவ்வார்த்தைகளே அவர் மனதில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அதனால் அவருடைய வாழ்க்கையே மாறியது. அவரின் நற்செய்தி ஊழியம் இன்றும் நடைபெற்றுவரு கிறது.

இதுபோல் நூற்றுக்கணக்கான சம்பவங்கள் உண்டு. ஞானிகளின் வாக்கியங்கள் அவர்களுக்கு தாற்றுக்கோலைப் போலிருந்து அவர்களை ஊக்கு வித்தது. பழைய வெறுமையான வாழ்க்கை புதிய பயனுள்ள வாழ்வாக மாறியது. உன்னதபெலனினால் இடைகட்டப்பட்டு கடவுளுக்கு தங்களை ஒப்பு

ஜீவப் பிராணிகளில், குட்டிகளாவது குஞ்சுகளாவது சுயாதீன ஸ்திதிக்கு வரும்பரியந்தம் தாய் திரும்பவும் கருத்தரிக்கிறதில்லை. ஒரு தடவை பொரித்த குஞ்சுகளைக் கொத்தித் துரத்தினபின்தான் தாய்க்கோழி மறுபடியும் சேவலிடமேகும். ஒரு கன்று சுயமாய்ப் புல் தின்று வளர்ந்தபின்தான் பசு திரும்ப அடங்கச் சம்மதிக்கும். மானிட இயற்கையோ அவ்வாறல்ல. ஒரு பிள்ளை இன்னும் தன் காரியத்தைப் பார்த்துக்கொள்ள ஏலாத ஸ்திதியிலிருக்கும்போதே, தாய் மற்றப் பிள்ளைகளையும் பெறுகிறாள். தலைப்பிள்ளைக்குப் பதினைந்து வருஷமாகுமுன், வேறு ஐந்தாறு பிள்ளைகளையும் தாய் பெறக் கூடும். ஆகவே, தகப்பனும் தாயும் ஒரே பிள்ளையினிமித்தம் பதினைந்து வருஷமும், ஐந்தாறு பிள்ளைகள் நிமித்தம் முப்பது நாற்பது வருஷமும் கூடி வாழவேண்டியதிருக்கிறது. தாய்க்கும் தகப்பனுக்கும் ஐம்பது அறுபது வயதானபின், வயோதிபரான அவர்களுக்கும் ஒருவர் சகாயம் மற்றவர்க்கவசியம். எனவே, மானிடர் விவாக சம்பந்தம் ஆயுள்காலம் முழுவதும் நிலைக்கும் சம்பந்தம் என்ற விதி ஏற்படுகிறது. சில வருஷம் கூடியிருந்து அப்பால் விலகிக்கொள்ளுவது மிருக வழக்கம், மானிடரின் இயற்கைப் பிரமாணத்துக்கு அது விரோதம்.

மேலும், சுயாதீனப் பிராயத்துக்கு வந்தவுடன் தங்கள் தங்கள் குழந்தைகளைத் துரத்திவிடுவது ஜீவஜந்துக்கள் சுபாவம். இன்னது தன் பிள்ளையென்ற அறிவு அப்பால் பிராணிகளுக்கு இல்லை. பெற்ற பிள்ளைகளோடேயே கூடித் திரும்பவும் கருத்தரிப்பது நாம் அறியாத காரியமல்ல. மனுஷ இயற்கையோ இதற்கு முற்றிலும் விபரீதம். பிள்ளைகள் சுயாதீன நிலைமைக்கு வந்தபின்னுங்கூட, தாய்—தகப்பன், குமாரர்—குமாரத்திகள் என்ற சம்பந்தம் நிலைக்கிறது. ஜீவகாலமெல்லாம் பிள்ளைகள் தாய் தகப்பனைப் 'பெற்றோர்' என்பதும், ஜீவகாலமெல்லாம் பெற்றோர் பிள்ளைகள்மீது பாசங்காட்டுவதும் எப்பேர்ப்பட்ட மிலேச்ச ஜாதிக்கும் இயற்கை. பெற்றோர்—பிள்ளைகள் என்ற சம்பந்தம் ஆயுள்கால பரியந்தம் நிலைத்திருக்கிற சம்பந்தமாகையால், புருஷன்—மனைவி என்ற சம்பந்தமும் ஆயுள்காலம் முழுவதும் நிலைத்திருக்கவேண்டிய சம்பந்தம். குடும்பம் என்ற சாஸ்வத சம்பந்தம் மானிடருக்கிருப்பதினால், விவாகம் என்ற சம்பந்தமும் சாஸ்வத சம்பந்தமாயிருப்பது அவசியம். இதுவும் இயற்கைப் பிரமாணம்.

ஜீவப் பிராணிகளில், குட்டிகளாவது குஞ்சுகளாவது சுயாதீன ஸ்திதிக்கு வரும்பரியந்தம் தாய் திரும்பவும் கருத்தரிக்கிறதில்லை. ஒரு தடவை பொரித்த குஞ்சுகளைக் கொத்தித் துரத்தினபின்தான் தாய்க்கோழி மறுபடியும் சேவலிடமேகும். ஒரு கன்று சுயமாய்ப் புல் தின்று வளர்ந்தபின்தான் பசு திரும்ப அடங்கச் சம்மதிக்கும். மானிட இயற்கையோ அவ்வாறல்ல. ஒரு பிள்ளை இன்னும் தன் காரியத்தைப் பார்த்துக்கொள்ள ஏலாத ஸ்திதியிலிருக்கும்போதே, தாய் மற்றப் பிள்ளைகளையும் பெறுகிறாள். தலைப்பிள்ளைக்குப் பதினைந்து வருஷமாகுமுன், வேறு ஐந்தாறு பிள்ளைகளையும் தாய் பெறக்கூடும். ஆகவே, தகப்பனும் தாயும் ஒரே பிள்ளையினிமித்தம் பதினைந்து வருஷமும், ஐந்தாறு பிள்ளைகள் நிமித்தம் முப்பது நாற்பது வருஷமும் கூடி வாழவேண்டியதிருக்கிறது. தாய்க்கும் தகப்பனுக்கும் ஐம்பது அறுபது வயதானபின், வயோதிபரான அவர்களுக்கும் ஒருவர் சகாயம் மற்றவர்க்கவசியம். எனவே, மானிடர் விவாக சம்பந்தம் ஆயுள்காலம் முழுவதும் நிலைக்கும் சம்பந்தம் என்ற விதி ஏற்படுகிறது. சில வருஷம் கூடியிருந்து அப்பால் விலகிக்கொள்ளுவது மிருக வழக்கம், மானிடரின் இயற்கைப் பிரமாணத்துக்கு அது விரோதம்.

மேலும், சுயாதீனப் பிராயத்துக்கு வந்தவுடன் தங்கள் தங்கள் குழந்தைகளைத் துரத்திவிடுவது ஜீவஜந்துக்கள் சுபாவம். இன்னது தன் பிள்ளையென்ற அறிவு அப்பால் பிராணிகளுக்கு இல்லை. பெற்ற பிள்ளைகளோடேயே கூடித் திரும்பவும் கருத்தரிப்பது நாம் அறியாத காரியமல்ல. மனுஷ இயற்கையோ இதற்கு முற்றிலும் விபரீதம். பிள்ளைகள் சுயாதீன நிலைமைக்கு வந்தபின்னுங்கூட, தாய்—தகப்பன், குமாரர்—குமாரத்திகள் என்ற சம்பந்தம் நிலைக்கிறது. ஜீவகாலமெல்லாம் பிள்ளைகள் தாய் தகப்பனைப் 'பெற்றார்' என்பதும், ஜீவகாலமெல்லாம் பெற்றார் பிள்ளைகள்மீது பாசங்காட்டுவதும் எப்பேர்ப்பட்ட மிலேச்ச ஜாதிக்கும் இயற்கை. பெற்றார்—பிள்ளைகள் என்ற சம்பந்தம் ஆயுள்கால பரியந்தம் நிலைத்திருக்கிற சம்பந்தமாகையால், புருஷன்—மனைவி என்ற சம்பந்தமும் ஆயுள்காலம் முழுவதும் நிலைத்திருக்கவேண்டிய சம்பந்தம். குடும்பம் என்ற சாஸ்வத சம்பந்தம் மானிடருக்கிருப்பதினால், விவாகம் என்ற சம்பந்தமும் சாஸ்வத சம்பந்தமாயிருப்பது அவசியம். இதுவும் இயற்கைப் பிரமாணம்.

3. விவாக சம்பந்தம் சரீரம்—மனம்—ஆத்மம் மூன்றும் சேர்ந்த சம்பந்தம்.

விவாக சம்பந்தம் பிள்ளைகள் நிமித்தம் சாஸ்வத சம்பந்தமாயிருத்தல் அவசியமெனில், பிள்ளைகள் இராவிடில் அச்சம்பந்தம் சாஸ்வத சம்பந்தமாயிருப்பது அவசியமன்று என ஒருவர் ஆக்ஷேபிக்கலாம். ஜீவப்பிராணிகள் திருஷ்டாந்தத்தையே இன்னும் கவனிப்போம்.

ஜீவப்பிராணிகள் சரீரசம்பந்தமுடையவை. மானிடரோ மனோவாக்குக் காயம் என்ற திரிகரண சக்தியுள்ளவர்கள். மனம்—மொழி—சரீரம் மாத்திரமல்ல, ஆத்மமும் பெற்றுள்ளோர் மானிடர். இவ்விதச் சத்துவம் பெற்றுள்ள புருஷனும் ஸ்திரீயும் கூடிவாழவேண்டுமாகில், அவர்கள் சரீரம் மாத்திரமல்ல, மனமும், மொழியும், ஆத்மமும் இசைந்திருக்கவேண்டும். சரீரத்தில் மாத்திரம் இருவர் ஐக்கியப்படுவது மிருக சம்பந்தம். மனமும், வாக்கும், ஆத்மமுங்கூட இசைவதே மானிட வாழ்க்கை. எப்பேர்ப்பட்ட மிலேச்சரும் இவ்வித உன்னத சம்பந்தமுள்ளவர்கள். ஒவ்வோர் தொழில் துறைகளில் இருவரும் மனமிசைந்து பூண்டுகொள்வதும், கல்வியிலும் பாஷையிலும் ஒருமித்திருப்பதும், சுவாமி கும்பிடுவதில் கூடிக்கொள்ளுவதும் இதற்கு அத்தாட்சி.

ஆனதுபற்றி, விவாக சம்பந்தம் சந்தான விருத்தியைக் கருதின சரீர சம்பந்தமாயினும், சரீர ஒற்றுமையோடு முற்றுப்பெறும் சம்பந்தமன்று. இருவரின் மனோவாக்கு ஆத்ம பொருத்தத்தைச் சரீர சம்பந்தம் விருத்தியாக்குவது நிஜம். மனம்—வாக்கு—ஆத்மபொருத்தமோ மானிடரின் உன்னத ஸ்திதியை அடுத்தது. இவ்வித மேலான வரத்தைப் பெற்றிருக்கும் மனுஷன் இந்த உன்னத தன்மையைப் பூரணமாய் விளங்கச்செய்யவேண்டியவன். ஹிந்து ராஜா ஒருவருக்கு ராணியினால் சந்தானமில்லாதபோது, வேறே தாரம் படையாமல், தன் பத்தினிக்கு உண்மையாயிருக்குங்கால், அதை மகா உத்தம பக்தி என்று ஒப்புக்கொள்வோம். அவர்கள் இருவரது மனசு, சிந்தை, ஆத்மமும் ஒன்றுவதால் இச்சம்பந்தம் பூரண சம்பந்தமென்று மனுஷர் பாராட்டுவர்! சந்தான விருத்தியை மாத்திரம் நினைத்து மானிட ஜாதி சந்தான விருத்தியை மாத்திரம் நினைத்து விவாகம் செய்துகொள்ளுவது தகாது. சந்தானமுண்டாகும்

என்று இருவரும் எதிர்பார்ப்பது நியாயம். எனினும், இந்த நோக்கம் நிறைவேறாதேபோனாலும் போகலாம். இருவரின் அன்பும் ஐக்கியமுமோ அழிந்துபோகிறவையன்று. அன்பு நித்யம். ஆத்ம சம்பந்தம் நித்யம், சரீரமோ அநித்யம். விவாக சம்பந்தத்தைச் சரீர சம்பந்தமாக மாத்திரம் எண்ணுவது விவாகத்தின் உன்னத லக்ஷணத்தை அலைக்கழிப்பதாகும். விவாக சம்பந்தம் சரீரம்—மனம்—வாக்கு—ஆத்மம் நான்கும் பொருந்திய சம்பந்தம். இதுவும் இயற்கை விதி.

4. விவாக சம்பந்தம் இருவர் சம்மதமும் அமைந்துள்ள சம்பந்தம்.

மேலே கண்டபடி, விவாக சம்பந்தம் ஆயுள்கால சம்பந்தமாயும், மனம், வாக்கு, காயம், ஆதத்ம்—நான்கும் பொருந்தியதாயுமிருப்பின், இருவரின் மனப்பூர்வ சம்மதம் அவசியம். ஜந்துக்கள் ஸ்திதி உயர உயர, சம்மதம் அவசியமாகிறது. தாவரவர்க்கங்கள் பலுகிப் பெருகுவது ஆண் பூ—பெண் பூ இரண்டும் கூடுவதினாலென்று தாவர சாஸ்திரிகள் சொல்வர். ஆயினும், இவற்றிற்குப் புத்தி சித்தமில்லை, ஆகையால் சம்மதமும் இல்லை. ஜீவப்பிராணிகளுக்கோ சம்மதம் அவசியம். பறவைகளிலும் மிருகங்களிலும் ஆண்—பெண் இரண்டும் சம்மதித்தாலன்றி கூடுவதில்லை. அப்படியிருக்க, ஆயுள்கால முழுவதும் கூடிவாழவேண்டிய இருவருக்கு பரஸ்பர சம்மதம் எவ்வளவு அதிக அவசியம்! விவாகம் ஆயுள்கால சம்பந்தமாயிருப்பதினாலும், விவாகம் புத்தி, சித்தம் ஆத்மமுள்ள மானிடர் இருவருடைய ஏக வாழ்க்கையாயிருப்பதினாலும், இருவரும் மனப்பூர்வமாய்ச் சம்மதித்தாலன்றி விவாகம் செய்வது தப்பிதம். இது இயற்கைப் பிரமாணம். பால்ய விவாகம் வழக்கமாயிருக்கும் தேசங்களில் இவ்வித சம்மதம் பேருக்குமட்டும் சம்மதமாகிறது. பெற்றோர் ஒழுங்குபண்ணுகின்றனர், மங்கிலியத்தைப் புருஷன் தரிப்பிக்க, மனைவி தரித்துக்கொள்ளுகிறாள். அவ்வளவே சம்மதம். இதுவும் கட்டாயத்தினாலும் அறிவீனத்தினாலும் கொடுக்கப்படும் சம்மதமாயிருப்பதினால், சுயாதீனமும் அறிவும் உண்டாகும் காலத்தில், மனப்பொருத்தம் இல்லாவிடில், சண்டையும் பிரிவினையுமே பலிதம். விவாகம் நித்திய சம்பந்தமாயிருப்பதினால், சம்மதம் மனம்பூண்ட சம்மதமாயிருப்பது இன்றியமையா அவசியம். கட்டாய சம்மதம் சம்மதமல்ல, மனப்பூர்வமான சம்மதமில்லாத

விவாகம் மிருக சம்பந்தத்திலும் கேடு, தாவரவர்க்க சம்பந்தமே. இதுவும் மானிட சுபாவத்தினின்று வெளிப்படும் இயற்கைப் பிரமாணம்.

5. விவாகம் சமுதாய சம்மதம் பெற்ற சம்பந்தம்.

விவாகத்தினால் இணைக்கப்பெறும் புருஷன்—ஸ்திரீ இருவரையுமே விவாக சம்பந்தம் பொறுத்ததெனினும், அது அவர்களோடு நின்றுபோகிறதன்று. இருவர் சேர்ந்துள்ள குடும்பங்களுக்கும் புது பந்தத்துவம் ஏற்படுகின்றது. மேலும், விவாகத்தினால் இணைக்கப்படும் இருவரும் தங்கள் சமுதாயத்தில் ஓர் புதுக் குடும்பமாகிறதால், ஊரார், குலத்தார், உடன் மதஸ்தர் யாவரும் ஓர் புது விவாக சம்பந்தத்தில் உரிமை பாராட்டுவது இயற்கை. ஆனதுபற்றி, விவாகஞ் செய்து கொள்ளுவோர் தம் சமுதாய சங்கத்தார் விதிகளை அநுசரித்து, அவர்கள் வாழ்த்துதலைப் பெற்றுக்கொள்ளுவது வழக்கப்பிரமாணம். மற்றப்படி, இவர்கள் அச்சமுதாயத்தாரின் சிலாக்கியங்களுக்கு அருகாராகார். அவ்விதிகளெவை?

(i) இன்னாரை விவாகஞ்செய்யலாம், இன்னாரை விவாகஞ் செய்யலாகாது என்ற பொதுஜன விதி உண்டு.

ஜீவப்பிராணிகளுக்கு இனவழி இல்லை. கன்று அதற்குத் தந்தையாயிருந்த எருதின் மூலமாய் அடங்கலாம். ஒரு சேவலால் உண்டான குஞ்சுகள் முட்டையிட அதே சேவல் காரணமாயிருக்கலாம். தன் தாயையோ அல்லது மகளையோ அல்லது கூடப்பிறந்த சகோதரி சகோதரனையோ விவாகஞ் செய்ய, தீவு தீவாந்தரங்களில் வசிக்கும் மிலேச்சரும் சம்மதியார். இவ்வாறு, இனவழி விதி விலக்குகள் ஏற்பட்டுள. அவ்விதி விலக்குகளுக்கு இசைந்து ஒழுகுவது சமுதாய சகவாசத்துக்கு இன்றியமையா அவசியம், மானிடர்க்கு இயற்கை விதி.

(ii) விவாக நிலைமையில் இருவர் பிரவேசிப்பதற்கு அவசிய சடங்கு ஏதோ அதைப்பற்றியும் பொது விதி உண்டு.

விவாகச் சடங்கை நிறைவேற்ற அதிகாரம் பெற்றோர் உளர். பிராமணப் புரோஹிதனோ, இதர குலப் பூசாரியோ, இஸ்லாமிய மோல்வியோ சடங்கு முடிக்கவேண்டுமென்பது சகலரும் ஒப்புக்கொள்ளும் பிரமாணம். பத்துப்பேர் ஒன்று

கூடி, தேவர்கள் சாட்சி, பிறர் சாட்சி, சபை சாட்சி வைத்து, இருவரை ஓர் நிலையான சம்பந்தத்தில் பிரவேசிக்கச்செய்வது விவாகமேயன்றி, இரகசியமாய் இருவர் கூடிக்கொள்ளுவது விவாகமல்ல. இதனால், சமுதாய அறிக்கை, பகிரங்கச்சடங்கு என்பவை விவாக விதிகளாயின.

(iii) ஏதாமோரு சமுதாயத்தில் அங்கீகாரம் பெற்ற விவாகம், மற்றெல்லாச் சமுதாயங்களாலும் அங்கீகாரம் பெறவேண்டுமென் பதும் பொதுஜன விதி.

விவாகமானது ஏதேன் தோட்டத்தில் நியமிக்கப்பட்டது என்றால், அது சமய வரை தேச வரை கடந்தது என்றர்த்தம். ஒரு தேசத்தின் விவாகம் இன்னொரு தேசத்திலும் விவாகமே. ஒரு மார்க்கத்தின் விவாகம் வேறொரு மார்க்கத்திலும் விவாகமே. விவாக சம்பந்தம் பிள்ளைகளையும், குடும்பத்தையும், சன்மார்க்கத்தையும் பற்றினது; இவை சகலத்திராளுக்கு முரியவை. ஆகையால், விவாகமும் சகல சமயங்களுக்கும் சகல தேசங்களுக்கும் செல்லும் சம்பந்தம். விவாகச் சடங்கு எந்த மதத்தில் நிறைவேற்றப் பெறினும், விவாகம் விவாகமே. இதினால்தான் ஹிந்துமதத்தில் விவாகமான இருவர் கிறிஸ் தவர்களாகும்போது, அவர்கள் விவாகத்தைக் கலைந்துவிட லாது என்கிறோம்.

இயேசுபெருமான் பூலோகத்திலிருந்தபோது, விவாகத் தைப்பற்றிய புதுக் கட்டளையொன்றும் கொடுக்கவில்லை; இயற்கைப் பிரமாணத்தையே உறுதிப்படுத்தினார். ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேட்ட கேள்விக்கு அவரளித்த விடையில்:—"ஆதியிலே சிருஷ்டிகர்த்தா அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு நீங்குவான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இப்படியிருக்க, கடவுள் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்றார் (மத். 19: 4–6; மாற். 10: 6–9). நான் உங்களுக்குச் சொல்லு கிறேன், தள்ளிவிடக்கூடாது என்று அவர் கட்டளையிடாமல், தள்ளிவிடுதல் நியாயமல்லவென்பது ஆதியிலிருந்து வந்த தேவ நியமமென்று விடையளிக்கிறார்.

திருச்சபையின் பிரமாணமும் இதுவே. ஆதிமுதலாயுள்ள இயற்கைப் பிரமாணத்தைக் கிறிஸ்துபெருமான் எவ்வாறு

விளக்கிக் காட்டினாரோ அவ்வாறே திருச்சபையும், இயற்கைப் பிரமாணங்களை அநுசரித்துத் தன் ஆசாரங்களையும் சட்டங்களையும் உண்டாக்கியிருக்கிறது. திருச்சபையின் விவாக விதிகள் ஏதாமொரு காலத்துக்குமாத்திரமுரிய விதிகளல்ல, சகல தேசத்துக்கும் சகல ஜாதிக்கும் எக்காலத்துக்குமுரிய விதிகள். இவற்றை யாதாமொரு தேசத்தார் அல்லது ஜாதியார் அவமதிக்கத் தொடங்கும்போது, அத்தேசத்துக்கும், ஜாதிக்கும், சன்மார்க்கத்துக்கும் அதனால் நஷ்டம் வராமல் தீராது.

மேலேகண்ட இயற்கை விதிவிலக்குகளைச் சகல ஜாதிகளும் சரிவர நிறைவேற்றி வருகிறதில்லை. இது காரணத்தாலேயே, ஏதாமொரு தேசத்தின் வழக்கத்தைச் சர்வ லோகப் பிரமாணமாகவாவது திருச்சபைச் சட்டமாகவாவது ஏற்றுக்கொள்வது கூடாத காரியம். அநேக மனைவிகளை விவாகஞ் செய்ய ஆப்பிரிக்கர் இடங்கொடுக்கலாம். மலைஜாதி ஸ்திரீ ஒருத்தி பல புருஷரை வைத்துக்கொள்ளலாம். தன் கணவனிடம் பெற்ற வஸ்திரத்தைத் திரும்பக் கொடுத்து விடுவது விவாகத்தை ரத்துச் செய்வதற்குப் போதும் என்று ஓர் குலத்தார் சாதிக்கலாம். பரீட்சார்த்தமாய் விவாகம் செய்து, அப்பால் நீங்கிக்கொள்ளும் வழக்கமுள்ள தேசத்தாரும் இருக்கலாம். இவற்றில் எதுவும் கிறிஸ்தவப் பிரமாணமாகமாட்டாது.

கடவுள் மானிடர் உள்ளத்தில் நாட்டியதும், சுவிசேஷத்தினால் ஸ்திரீகளுக்கு வந்திருக்கும் சுயாதீனத்துக்கு ஒத்ததும், கிறிஸ்துவின் சன்மார்க்க போதனைக்கு ஏற்றதுமாகிய விதியே கிறிஸ்து சபையின் விதியாயிருக்கவேண்டியது நியாயம். இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம், விவாக சம்பந்தத்தை இவ்வுன்னத ஸ்திதியில் காத்துக்கொள்ளாவிடில், நமது தேசத்துக்கும் சபைக்கும் குடும்பத்துக்கும் நிலையான நஷ்டம் விளையும்.

2

யூதர் பிரமாணம்

மானிடரின் இயற்கை அமைப்பைப் பரீட்சித்து, மானிட ஜாதியின் விவாக விதிகள் எவையென்று முந்தின அதிகாரத்தில் பார்த்தோம்.

இனி, பற்பல காலத்தில் பற்பல ஜாதியார் இவ்விதிகளை எம்மட்டும் அநுசரித்திருக்கிறார்களென்றும், எவ்வாறு மீறி நஷ்டமடைந்திருக்கிறார்களென்றும் பார்ப்போம். முக்கியமாய், தேவ நடத்துதலையும் ஆட்சியையும் விசேஷித்துப் பெற்ற யூதர் காரியம் எப்படியென்று விசாரிப்பது நலம்.

1. இந்து தேச மக்கள்

சர்வலோகத்துக்கும் சகல மானிட ஜாதிகளுக்கும் பொதுவாயுள்ள இவ்விதிகளைப் பலவிதமாய் நம் நாட்டார் அலக்ஷியம் பண்ணுகிறார்களென்பது தெளிவு. எவ்வாறெனில்,

பாலியவிவாகத்தில் சம்மதப்பிரமாணம் அலைக்கழிக்கப் படுகிறது. பத்து, பன்னிரண்டு பிராயப் பெண்ணுக்கு மணவாளனைப்பற்றி என்ன அறிவிருக்கக்கூடும்? அறிவில்லாவிடில், சம்மதம் பலவந்தச் சம்மதமன்றோ?

பெற்றோரே விவாக ஒழுங்குசெய்யுமிடத்து, பரிசம், நகை, ஸ்திரீதனம் முதலியவற்றை மாத்திரம் கவனித்து, மனோவாக்குக் காயம் ஆத்மம் இவற்றின் பொருத்தத்தை அலட்சியம் செய்வது கூடியது.

தம்பதிகள் ஒருவரையொருவர் தள்ளிவிட்டு வேறு மணம் புரிந்துகொள்ள எங்கே இடமிருக்குமோ அங்கே விவாகமானது ஆயுள்கால சம்பந்தம் என்ற பிரமாணம் பாழாய்ப் போய்விட்டதன்றோ! இஸ்லாமியர் இவ்விஷயத்தில் தவறிப் போனார்கள்.

இவ்வாறு, நம் தேசத்து ஹிந்துக்கள் மகம்மதியர் விவாக வழக்கங்களில் பலவிதமாய் சர்வஜன விதிகளென்று முந்தின அத்தியாயத்தில் குறிப்பிட்ட பிரமாணங்கள் சிலவற்றிலிருந்து விலகிப்போயினரென்பது பிரத்தியட்சம்.

2. பூர்வ ஜாதிகள்

பழைய ஏற்பாட்டு ஆகமங்களைக் கவனித்தால், பூர்வ காலத்துப் புறஜாதிகள் சர்வலோகப் பொதுஜன விவாக

விதிகளில் பலவாறு தவறிப்போனார்களென்று தெரியவரும். மானிடர் பாவமும், புருஷர் சயாயமும், ஸ்திரீ ஜாதியின் பணிவுமே இதற்குக் காரணம்.

(i) விவாகமின்றி புருஷர்—ஸ்திரீகள் கூடுவதைப் பழைய உலகத்தார் அத்தனை பெரிய குற்றமாகப் பாவிக்கவில்லை.

லோத்து சோதோம் மனுஷரிடம் சொன்ன வார்த்தைகளும் அவன் குமாரத்திகளின் முறைகேடும் சோதோமின் துன்மார்க்கத்துக்குச் சாட்சி (ஆதி. 19). யூதா (ஆதி. 38), சிம்சோன் (நியா. 16), எப்பிராயீம் மலைநாட்டு லேவியன் (நியா. 19)—சரிதைகளை நினைவுகூர்ந்தால், இவ்வித வேசித்தனம் சகஜமென்று நிதானிக்கலாம். கிபியா ஊரார் கொடுமை (நியா. 19), பிலேயாம் மோவாபிய ஸ்திரீகளைக்கொண்டு இஸ்ரவேலருக்கிட்ட சோதனை (எண். 25)—முதலியன அக்காலத்துச் சீர்கேட்டைக் காட்டும் திருஷ்டாந்தங்கள். சாராள், ரெபெக்காள்—இவர்களைப்போன்ற சவுந்தரிய மனைவிகளாயினும், தீனாளைப்போன்ற ஓர் கன்னிகையாயினும் அந்நிய இடங்களுக்குப் போய்க் கற்பு நிலையைக் காப்பது கஷ்டம் (ஆதி. 12: 12; 26: 7; 34: 2). இவ்வித தாறுமாறுகள் யூதருக்குள்ளுங்கூட காணப்பட்டதுண்டு. ஓசியா, ஆமோஸ், எரேமியா, மல்கியா தீர்க்கர் ஆகமங்களில் இதற்குப் போந்த திருஷ்டாந்தங்களுள.

(ii) முறைகேடான சம்பந்தம் சாதாரணம்.

இன்னின்ன இனவழியில் ஜனங்கள் விவாகமாடலாகாதென்று கட்டளையிடும் இடத்தில் (லேவி. 18: 6–23), "இவைகள் ஒன்றினாலும் உங்களை அசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டாம்; நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள் இவைகள் எல்லாவற்றினாலும் தங்களை அசுத்தப்படுத்தியிருக்கிறார்கள்" (லேவி. 18: 24–28) என்று கண்டிருக்கிறது. எவைகளினாலெனில்: தாய், சகோதரி, மருமகள்—முதலிய சமீப இரத்தக்கலப்புள்ள இனவழி சம்பந்தங்களினாலும், மற்றும் சீர்கேடான துன்மார்க்கங்களினாலுமே. பூர்வகாலத்தில் ஆபிரகாம் தன் தகப்பனுடைய குமாரத்தியைத் தனக்கு மனைவியாக்கியிருந்தான் (ஆதி. 20: 12). தாமார் தன் சகோதரனை விவாகம் செய்வது குற்றமென்று எண்ணவில்லை (2 சாமு. 13: 13). யாக்கோபு இரு சகோதரிகளை மணம் புரிந்தவன்.

இவ்வித சம்பந்தங்கள் அக்காலத்து ஜாதியாருக்கு சகஜம். இஸ்ரவேல் ஜனங்களும் இதில் தவறிப்போனவர்கள். இவ்விஷயத்தில் இந்திய மக்கள் சிரேஷ்டமானவர்களெனத் தகும்.

(iii) புருஷன் மனைவியைத் தள்ளிவிடுதலும், மனைவி புருஷனைவிட்டுப் போவதும், ஒரு விவாகத்தைத் தவிர்த்து வேறு சம்பந்தம் செய்வதும் பலதாரம் படைப்பதும் குற்றமாக எண்ணப்படவில்லை.

விவாக சம்பந்தம் ஆயுள்கால சம்பந்தம் என்று பூர்வத்தார் உணரவில்லை. சிம்சோனுடைய மனைவியை அவள் தகப்பன் வேறொருவனுக்குக் கொடுத்துவிட்டு, நீ அவள் தங்கையை மனைவியாக்கிக்கொள் என்று சொன்னான் (நியா. 15: 2). சவுல் தன் குமாரத்தியை முதலாவது தாவீதுக்கும், பின்பு வேறொருவனுக்கும் கொடுத்தான் (1 சாமு. 25: 44). தள்ளுதற்சீட்டைக் கொடுத்து ஒரு மனைவியைப் புருஷன் தள்ளிவிடலாமென்று யூதருக்கும் இடங்கொடுத்திருந்தது. முற்பிதாக்களும் நியாயாதிபதிகளும் ராஜாக்களும் பலதாரம் படைத்தவர்கள்.

(iv) விவாக சம்பந்தத்துக்குத் துரோகஞ்செய்வதும் பெரிதாய் எண்ணப்படவில்லை.

போத்திப்பார் மனைவி, பத்சேபாள், கோமேர் (ஓசி. 1: 3) இதற்குத் திருஷ்டாந்தங்கள். தன் காலத்துப் புருஷர் ஸ்திரீகளில் இப்பாவம் சாதாரணமென்று ஓசியா புலம்புகிறான் (ஓசி. 5: 13, 14).

3. யூதர்

இவ்வித தாறுமாறுகள் நிறைந்திருந்த ஜாதிகள் நடுவிலேயே யூத மக்கள் வசித்தனர். விவாக சம்பந்தத்தைப் பற்றிய பல திட்டமான விதிகள் இவர்களுக்கு ஏற்பட்டன. காலஞ்செல்லச்செல்ல, ஸ்திரீ–புருஷர் சம்பந்தத்தில் இவர்கள் வெகுதூரம் முன்னேறிச் சென்றனர்.

(1) விபசாரம் கொலைபாதகத்துக்குச் சரியென்று விதிக்கப்பட்டது. ஆறும் கற்பனையைப்போல ஏழாம் கற்பனையும் பாவம்.

(2) பிறனுடைய மனைவியை இச்சிப்பது பத்தாம் கற்பனையினால் விலக்கப்பட்டது.

(3) ஒருவன் பிறனுடைய மனைவியோடு விபசாரஞ்செய்தால் இருவரும் சாகவேண்டுமென்பது விதி (உபா. 22: 22).

(4) விவாகமாகுமுன் கன்னிமை ஒழிந்த பெண் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும் (உபா. 22: 21). ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை வேறொருவன் கற்பழித்தால், அப்பெண் கூக்குரலிடவில்லையானால் இருவரும் கல்லெறியப்படவேண்டும். பெண் கூக்கிரலிட்டும் காப்பாற்றுவோரில்லாததால் அவள் பலவந்தப்படுத்தப்பட்டால், அந்த மனுஷன் சாகவேண்டும் (உபா. 22: 25–27).

மேலே விதிக்கப்பட்ட மரணதண்டனை எப்போதாவது நிறைவேற்றப்பட்டதோ அறியோம். ஆதி. 38: 24; 2 சாமு. 11; ஓசி. 3; பரி. யோவான் 8—முதலிய அதிகாரங்களைப் பார்வையிட்டால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாகக் காணோம். அப்படியாயினும், விபசாரம் கொடிய பாவம் என்ற சத்தியம் இக்கண்டிப்பான ஏற்பாட்டினால் யூதருக்குப் பலமாய்ப் போதிக்கப்பட்டது. விவாகஞ்செய்த இருவர் ஒருவரிடம் ஒருவர் உண்மையாயிருக்காவிடில், சமுதாய ஒற்றுமை கெடும், சந்தானத்தைப்பற்றிய சந்தேகம் தலைப்படும். புருஷன்—மனைவி இருவருக்கும் பரஸ்பர அன்பு அற்றுப்போம், பிராணபகையும் கொலைபாதகங்களும் பலிக்கும்.

(5) இன்னின்ன இனமுறையார் ஒருவரையொருவர் விவாகஞ்செய்யலாகாதென்றும் தெளிவாய் விதிக்கப்பட்டது. பூர்வகாலத்தில் ஆபிரகாம் தன் தகப்பன் குமாரத்தியை விவாகம் பண்ணியிருந்தான். மோசேயின் தகப்பன் தன் அத்தையை விவாகம்பண்ணினவன் (யாத். 6: 20). விவாகச் சட்டங்கள் ஏற்பட்ட காலத்திலேயோ இவைபோன்ற சம்பந்தங்கள் விலக்கப்பட்டன. இன்னின்ன சம்பந்தம் தகாதென்று சொல்லிய அட்டவணையை ஒவ்வொன்றாய்க் கவனித்தால் இது தெரியவரும். லேவி. 18: 6–23; 20: 11–21 பார்க்கவும்.

பின்கண்ட இனவழியாரை ஒருவன் விவாகஞ் செய்யக் கூடாது:

(1) 18: 7. "தன் தாயை." இது இரத்த சம்பந்தம்.

(2) 18: 8. "தன் தகப்பனுடைய மனைவியை." அதாவது, தன் தகப்பன் இரண்டாம்தாரமாக விவாகஞ்செய்திருந்த மாற்றாந்தாயை. இது இரத்த சம்பந்தமல்ல; தகப்பனுடைய விவாகத்தினாலுண்டான சம்பந்தம்.

(3) 18: 9 "தன் தகப்பன் குமாரத்தியை." உடன் பிறந்த சகோதரியை; இது இரத்த சம்பந்தம்.

(4) 18: 9. "தன் தாயின் குமாரத்தியை." இது உடன் சகோதரியாயாவது, மாற்ருந்தகப்பனுல் பிறந்த சகோதரியா யாவது இருக்கலாம். இரத்த சம்பந்தம்.

(5) 18: 10. "தன் குமாரன் மகளை." இது மகன் பிள்ளை பேத்தி. இரத்த சம்பந்தம்.

(6) 18: 10. "தன் குமாரத்தி மகளை." இது மகள் பிள்ளை பேத்தி. இரத்தச் சம்பந்தம்; இரண்டு தலைமுறைத் தூரம்.

(7) 18: 11. "தன் தகப்பனுடைய மனைவியிடத்தில் தன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தியை." அதாவது, மாற்ருந் தாயினிடத்தில் பிறந்த சகோதரியை. இது இரத்த சம்பந்தம்.

(8) 18: 12. "தன் தகப்பன் சகோதரியை." அதாவது, அத்தையை. இது இரத்த சம்பந்தம்.

(9) 18: 13. "தன் தாயின் சகோதரியை." அதாவது, சிறிய தாயாரை. இதுவும் இரத்த சம்பந்தம்.

(10) 18: 14. "தன் தகப்பனுடைய சகோதரன் மனை வியை." அதாவது, சின்னையா மனைவி, சிறிய தாயை. இது விவாக சம்பந்தத்தினுல் வந்த இனமுறை.

(11) 18: 15. "தன் குமாரன் மனைவியை." அதாவது, மருமகளை. இதுவும் விவாக சம்பந்தத்தினுலுண்டான இன முறை.

(12) 18: 16. "தன் சகோதரன் மனைவியை." அதாவது, கொழுந்தி அல்லது மதனியை. இது விவாகத்தினுலுண்டான இனமுறை.

(13) 18: 17. "தன் மனைவியின் மகளை." மாற்ருங் குமா ரத்தியை. விவாக சம்பந்தம்.

(14) 18: 17. "தன் மனைவியின் குமாரன் மகளை." மாற் ருன் குமாரன் மகள், மாற்ருன் பேத்தியை. விவாக சம்பந் தம்.

(15) 18: 17. "தன் மனைவியின் குமாரத்தி மகளை." மாற் ருன் குமாரத்தி மகள், மாற்ருன் பேத்தியை. விவாக சம் பந்தம்.

மேற்கண்ட அட்டவணையில் ஒருவன் இன்னுரை விவாகம் பண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறதே யொழிய, ஒருத்தி இன்னுரை விவாகம்பண்ணக்கூடாதென்று சொல்லப் படவில்லை. ஆகிலும், இது எளிதில் தீர்மானிக்கக்கூடியதே.

மேற்கண்ட முறை ஒவ்வொன்றையும் கவனித்தால், ஒருத்தியார் யாரை விவாகம் பண்ணலாகாதெனத் தெரியவரும்:—

(1) தகப்பனை.
(2) தாயின் புருஷனை.
(3) தாயின் குமாரனை.
(4) தகப்பன் குமாரனை.
(5) குமாரன் மகனை.
(6) குமாரத்தியின் மகனை.
(7) தன் தாயின் புருஷனுடைய குமாரனை, அதாவது மாற்றுஞ் சகோதரனை.
(8) தாயின் சகோதரனை (=மாமன்).
(9) தகப்பன் சகோதரனை (=சின்னையா).
(10) தகப்பனுடைய சகோதரியின் புருஷனை (=மாமன்).
(11) குமாரத்தியினுடைய புருஷனை (=மருமகன்).
(12) சகோதரியினுடைய புருஷனை (=அத்தான்).
(13) புருஷன் மகனை.
(14) புருஷனுடைய குமாரன் மகனை.
(15) புருஷனுடைய குமாரத்தி மகனை.

மேற்கண்ட இன விலக்குகளில் (8), (12) தவிர மற்ற யாவும் சகல தேசத்தாராலும் சகல மதஸ்தாராலும் ஒப்புக்கொள்ளப்படுபவை. இவ்வித நெருங்கிய முறைகளில் சம்பந்தப்பட்டோர் யாரென்றால், இவர்களே ஒருவரையொருவர் ஆதரிக்கவேண்டியவர்கள், ஓரே வீட்டில் வசிக்கிறவர்கள். ஆதலின் இவர்கள் ஒருவரையொருவர் விவாகஞ்செய்வது முறைகேடு என்றும் அருவருப்பு என்றும் எண்ணப்படுவது நியாயம். (8), (12)–ல் கண்ட இன முறைகளைப்பற்றி 7-ம் அத்தியாயத்தில் காண்க.

இஸ்ரவேல் ஜனங்கள் மேற்கண்ட விஷயங்களில் இவ்வளவு உன்னத தெளிவான விதிகளைப் பெற்றிருந்தபோதிலும், வேறு சில விஷயங்களில் விதியின்றி விடப்பட்டார்கள்.

(1) விவாகம் ஆயுள்கால சம்பந்தமாக விதிக்கப்படவில்லை. ஒரு புருஷன் தள்ளுதற்சீட்டைக் கொடுத்துத் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடும் (உபா. 24: 1); அவளும் திரும்ப விவாகஞ்செய்துகொள்ளலாம்.

(2) புறஜாதியாரோடு செய்யும் விவாகம் விவாகமாக எண்ணப்படவில்லை. "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" என்று கர்த்தர் சொல்லுவதாக மல்கியா சொன்னபோதிலும், எஸ்றா, நெகேமியாவோ யூத புருஷர் விவாகம்பண்ணியிருந்த புறஜாதி ஸ்திரீகளை அனுப்பிவிடும்படி கட்டாயம்பண்ணினார்கள். (எஸ்றா 10: 11, 19; நெகே. 13: 23–27).

(3) பலதாரம் படைத்தல் சகஜமாயிருந்தது. ஆபிரகாம், யாக்கோபு, கிதியோன் (நியா. 8: 30), எல்கானா, தாவீது, சாலொமோன்—முதலியவர்கள் அவ்வாறு செய்ததாக வாசிக்கிறோம். உபா. 21: 15–17-ல் இரண்டு மனைவிகளையுடையவனுடைய ஆஸ்தி யாருக்குச் செல்லவேண்டுமென்பதைப்பற்றிய பிரமாணங்கூட கண்டிருக்கிறது.[1]

(4) சுதந்தர பாத்தியதையினிமித்தம் சிற்சில சமயங்களில் முறைகேடான விவாகமும் செய்யப்பட்டதுண்டு. உபா. 25: 5–10-ல் இதற்குரிய விதி கண்டிருக்கிறது. சகோதரர் ஒன்றாய்க் கூடியிருக்கிறவர்களாயிருந்து, ஒருவன் புத்திர சந்தானமில்லாமல் மரித்தால், இஸ்ரவேலில் அவன் பேர் அற்றுப்போகாதபடி, அவன் மனைவியை அவன் சகோதரன் விவாகம்பண்ணவேண்டுமென்பது விதி. இவ்வாறு விவாகம் பண்ண இஷ்டமில்லாவிடில், செய்யவேண்டிய முறையும் காட்டப்பட்டது.

யூதர் பிரமாணம் இவ்வித குறைகளுள்ளதாயிருப்பினும், அக்காலத்துக்கு இவை உன்னத பிரமாணங்களே. புறஜாதிகள் அக்காலத்தில் செய்துவந்த அருவருப்புகளை நினைத்தால் யூத விதிகள் எவ்வளவோ சிரேஷ்டமென்று சொல்லத்தகும். இயேசுநாதர் காலத்துக்குமுன், பூலோகத்துச் சகல ஜாதிகளைப் பார்க்கிலும் மேலான விவாக விதிகளைப் பெற்றிருந்தவர்கள் யூதரே. காலம் செல்லச் செல்ல, மேற்கண்ட விஷயங்களில் வெகுகாலம் கண்ட குறைகளை யூதர் ஒழித்துவிட்டனர். விசேஷமாய்ச் சிறையிருப்புக்குப்பின், பலதாரம் படைத்தல், மரித்துப்போன சகோதரன் மனைவியைச் சேர்த்துக்கொள்ளல்—முதலிய இழிவான வழக்கங்கள் முற்றிலுமாய் நின்றுபோயிற்றென்று யூதச் சரித்திரக்காரர் கூறுகின்றனர்.[2]

1. Marriage: Lacey, p. 112.
2. Religion and Worship of the Synagogue, p. 323.

யூதஜாதியின் விசேஷ அபிவிருத்திக்கும் மனோபலத்துக்கும் வியாபார சாமர்த்தியத்துக்கும் விவாகத்தைப்பற்றி அவர்களுக்கு இருக்கும் கண்டிப்பான விதிகளே காரணமென்பது பொது அபிப்பிராயம்.

கடவுள் நாமத்தில் யூத அதிகாரிகள் சொன்னதைத் திரும்பவும் கேட்போமாக:—

"இவைகள் ஒன்றினாலும் உங்களைத் தீட்டுப்படுத்தா
"திருங்கள். நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற
"ஜாதிகள் இவைகளெல்லாவற்றினாலும் தங்களைத் தீட்
"டுப்படுத்தியிருக்கிறார்கள்; தேசமும் தீட்டுப்படுத்தப்
"பட்டிருக்கிறது—ஆகையால் அதின் அக்கிரமத்தை
"விசாரிப்பேன்; தேசமும் தன் குடிகளைக் கக்கிப்
"போடும்—இந்த அருவருப்புகளையெல்லாம் உங்களுக்கு
"முன் இருந்த அந்தத் தேசத்தின் மனுஷர் செய்ததி
"னாலே தேசம் தீட்டாயிற்று. இப்பொழுதும் உங்க
"ளுக்குமுன் இருந்த ஜாதிகளைத் தேசம் கக்கிப்போட்
"டதுபோல, நீங்கள் அதைத் தீட்டுப்படுத்தும்போது
"அது உங்களையும் கக்கிப்போடாதபடிக்கு,—நீங்கள்
"என் கட்டளைகளையும், என் நியாயங்களையும் கைக்
"கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும், உங்கள்
"நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்பு
"களில் ஒன்றையும் செய்யவேண்டாம்" (லேவி. 18: 24, 25).

நம் தேசத்தினிமித்தமும், நம் சபையினிமித்தமும், நமது குடும்பங்களினிமித்தமும், நமது பூர்வ ஹிந்து பழக்கவொழுக்கங்களையும் முறைகளையும் ஒழித்து, கிறிஸ்து சபையின் விதிவிலக்குகளையே கிறிஸ்தவ சட்டங்களாக்கிக்கொள்வோமாக. யூதருடைய குறைவான விதிகளல்ல, அவர்களுடைய கண்டிப்பான பிரமாணங்களே நமக்கு மாதிரி; நமக்குச் சட்டம்.

3

அருள்நாதர் போதனை

விவாக சம்பந்தத்தைப்பற்றிப் புதிய ஏற்பாட்டில் காணும் போதனையை இருபங்காய்ப் பிரித்துக் கவனிக்கலாம். முதலாவது, அருள்நாதர் போதனை; இரண்டாவது, அப்போஸ்தலர் போதனை. இவ்வத்தியாயத்தில் அருள்நாதர் போதனையைப் படிப்போம்.

1. விவாகம் கடவுளால் நியமிக்கப்பட்டதென்று அருள்நாதர் விளம்பினர்.

"ஆதியிலே சிருஷ்டி கர்த்தா அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினர். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்றார் (மத். 19: 4, 5). மனுஷஜாதி விருத்தியடைவதற்கு ஆதிமுதல் கடவுள் ஏற்படுத்திய முறையே விவாகம் என்பதை ஆண்டவர் உறுதிப்படுத்தினர்.

2. விவாகம் ஒரே ஸ்திரீக்கும் ஒரே புருஷனுக்கு மிருக்கவேண்டிய சம்பந்தம் என்றார்.

ஒரு புருஷனுக்கு ஒரே ஸ்திரீ. ஒரு ஸ்திரீக்கு ஒரே புருஷன். புருஷன்–மனைவி சம்பந்தம் தகப்பன்–தாய் சம்பந்தத்தைவிட நெருங்கிய சம்பந்தம். இதை மீறி மிஞ்சுவது தேவ ஏற்பாட்டுக்கு விரோதம் என்றார்.

3. விவாக சம்பந்தம் ஆயுள்கால சம்பந்தம் என்பதையும் எடுத்து நிறுத்தினர்.

"கடவுள் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்றார். தள்ளுதற்சீட்டைக் கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டாரென்று அவர்கள்

கேட்க, அவர்: 'உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தான். ஆதிமுதல் அப்படியிருந்ததில்லை. ஆதலால், உங்களுக்குச் சொல்லுகிறேன்: எவனாகிலும் விபசாரத்தினிமித்தமேயன்றி, தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால் அவன் விபசாரஞ்செய்கிறான்" என்றார் (மத். 19: 6–9). மத். 5: 32-லும் இது கண்டிருக்கிறது. "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: விபசாரத்தினிமித்தமேயன்றி தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் அவள் விபசாரியாகும்படி செய்கிறான்; தள்ளப்பட்டவளை விவாகஞ்செய்கிறவனும் விபசாரஞ்செய்கிறவனாவான்."

பரி. மாற்கு, பரி. லூகா சுவிசேஷங்களிலும், கொரிந்தியர் முதலாம் நிருபத்திலும், இதிலும் கண்டிப்பாய் இவ்விதி வரையப்பட்டுளது. பரி. மாற்கு 10: 11:—"எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகஞ் செய்தால், தன் மனைவிக்குத் துரோகியாய் விபசாரஞ்செய்கிறான். மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு வேறொருவனை விவாகஞ்செய்தால் விபசாரஞ்செய்கிறவள்." பரி. லூக். 16: 18:—"தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் விபசாரஞ்செய்கிறான். புருஷனால் தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறான்." 1 கொரி. 7; 10, 11:—"விவாகஞ்செய்துகொண்டவர்களுக்கோ நானல்ல, ஆண்டவர் கட்டளையிடுகிறதாவது: மனைவி தன் புருஷனைவிட்டு நீங்கிப்போகக்கூடாது. நீங்கிப்போனால் அவள் விவாகமில்லாதிருக்கவேண்டும். அல்லது புருஷனோடு ஒப்புரவாகவேண்டும். புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது."

"விபசாரத்தினிமித்தம்" தள்ளிவிடலாமென்ற உத்தரவு மேலே கண்ட மூன்று இடங்களிலும் இல்லை.

இப்பேதத்தினிமித்தம் இவ்விஷயத்தில் கிறிஸ்துநாதர் சித்தம் எதுவோவென்று திட்டமாய்ச் சாதிப்பதரிது. எனினும், விவாகஞ்செய்த ஒருவரைவிட்டு ஒருவர் நீங்கக்கூடாதென்பதும், விபசாரத்தினிமித்தம் பிரிந்துபோனால் வேறு

விவாகம் செய்யக்கூடாதென்பதும், ஒருவரோடொருவர் ஒப்புரவாகித் திரும்பக் கூடி வாழுவதற்கிடமிருக்கவேண்டுமென்பதும் இரட்சகர் தீர்மானமென்பது மேற்கண்ட எல்லா இடங்களிலும் தெளிவு.

4. புருஷர்—ஸ்திரீயின் தகாத சம்பந்தம் தீட்டு என்று கண்டித்தார்.

"வேசித்தனங்களும், விபசாரங்களும், காமவிகாரமும் மனுஷருடைய இருதயத்துக்குள்ளிருந்து வெளிப்படுகிறவை; இவை மனுஷனைத் தீட்டுப்படுத்துகிறவை" என்றார் (மாற். 7: 22). இவையனைத்தும் ஒருவன் தனக்கே விரோதமாய்ச் செய்யும் பாவங்கள்; இவைகளால் மனுஷன் தீட்டுப்படுகிறான் என்கிறார்.

5. விவாக சம்பந்தத்தை மேன்மைப்படுத்தினார்.

விவாகம் கடவுளால் நியமிக்கப்பட்டதென்று அருள்நாதர் உரைத்ததுமன்றி, தாமே விவாக வீட்டுக்கு விஜயஞ் செய்ததினாலும், அங்கு கண்ட குறையை நிவிர்த்தியாக்கினதினாலும், விவாக சம்பந்தத்தைக் கனப்படுத்தினார் என்று சொல்லத்தகும்.

மேலும், மணவாளன்—மணவாட்டி சம்பந்தத்தை உவமானமாகக்கொண்டு, தமக்கும் தம் சபைக்குமுள்ள ஐக்கியத்தை நன்கு விளக்கினதினால், விவாக சம்பந்தத்தைத் தூய ஞான சம்பந்தமாக்கினார். அதினால் அது பரிசுத்த விவாகம் என்று அழைக்கப்பட ஏதுவாயிற்று. பிற்காலத்தில் அதை ஓர் இரகசியமாகவும், சாக்கிரமெந்தாகவும் பாராட்டுவதற்குக் காரணம் இதே (மாற். 2: 19; யோ. 3: 29). பரி. பவுல் இதை விஸ்தரித்து, கிறிஸ்துவாகிய மணவாளனுக்குச் சபை எவ்வாறு அடங்கியிருக்கின்றதோ அவ்வாறே மனைவிகள் புருஷருக்கு எக்காரியத்திலும் அடங்கியிருக்கவேண்டுமென்றும், கிறிஸ்து தமது மணவாட்டியை எவ்வாறு நேசித்து அதற்காகத் தம்மைத்தாமே பிராணத்தியாகஞ்செய்து அதை ஓயாமல் போஷித்துக் காப்பாற்றிப் பரிசுத்தஞ்செய்கிறாரோ, அவ்வாறேபுருஷரும் தங்கள் மனைவிகளை நேசித்து, அவர்களுக்காகத் தங்களை ஒறுத்து, அவர்களைப் போஷித்துக் காப்பாற்றிப் பரிசுத்தப்படுத்தவேண்டுமென்றும் சொல்லி, ஆண்டவரின் கருத்தைத் தெளிவுற விளக்கினார்.

6. விவாக துரோகத்துக்கும் ஸ்திரீ—புருஷர் சம்பந்தமான மற்ற துன்மார்க்க வாழ்க்கைக்கும் முதலாய் பாவமன்னிப்பு உண்டென்று கூறியறிவித்தார்.

விபசாரத்தில் பிடிபட்ட ஸ்திரீ விஷயமாய் அருள்நாதர் அளித்த விடை தெரியுமே. "நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்றார். இந்த அவரது திருமொழி அவளுக்கும் அவளைப்போன்ற பாவிகளுக்கும் பாவ மன்னிப்பையும் புது ஜீவனையும் அளிக்கிறதென்று சந்தேகமறச் சொல்லலாம். மகதலேனா மரியாள், அவரை அபிஷேகம்பண்ணின பட்டணத்துப்பாவி முதலானோர் மனந்திரும்பவும், மன்னிப்படையவும், அவருக்குப் பணிவிடைக்காரர் ஆகவும் பாவிகள் நேசர் வழிதிறந்தார்.

மொத்தமாய்ச் சொல்லின், ஸ்திரீ—புருஷர் சம்பந்தத்தை இயேசுபெருமான் பரிசுத்தப்படுத்தி, உன்னத நிலைக்கு உயர்த்தி, எக்காலும் அதை மேன்மைப்படுத்திவிட்டார்.

இவ்வித சிரேஷ்ட பிரமாணங்களையுடையவர்கள் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவ இல்லற வாழ்க்கைக்கு மூலவிதிகள் இவைகளே. விவாகம் எவ்வளவு தூயசம்பந்தமோ அதைக் கிறிஸ்துதாசர் பூலோகத்துக்கு விளங்கப்பண்ணவேண்டியவர்கள்.

4

அப்போஸ்தலர் போதனை

கிறிஸ்து சபை ஓர் பிரத்தியேக சமுதாயமாக ஏற்படவே, சபையின் ஒழுக்கத்தைக் கிரமப்படுத்துவது அப்போஸ்தலர் கடமையாயிற்று. புருஷன் ஸ்திரீ சம்பந்தமாக என்னென்ன சட்டங்கள் கிறிஸ்து சபையில் வெளியேறின வென்று இனி கவனிப்போம்.

1. விவாக சம்பந்தம் கனமுள்ள சம்பந்தம் என்று அப்போஸ்தலர் உபதேசித்தனர்.

எபிரேய நிருப ஆக்கியோன்: "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கக் கடவது" என்கிறார் (எபி. 13: 4). பரி. பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், கிறிஸ்துவுக்கும் அவர் சபைக்குமுள்ள சம்பந்தத்தை விவாக சம்பந்தத்துக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். 'வெளிப்படுத்தல்' என்ற தரிசன ஆகமத்தில்: பக்தாது முற்றான பாக்கியம் கலியாண விருந்தின் சந்தோஷத்திற்கும் (19: 9), கிறிஸ்துவுடன் அநுபவிக்கும் முற்றான சகவாசம் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்துக்கும் (19: 7), திருச்சபையின் பரிசுத்த அலங்காரம், புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியின் அலங்காரத்துக்கும் உபமானமாகப் பேசப்படுகிறது (21: 2). இது காரணத்தால், கிறிஸ்தவர்கள் விவாகம் பரிசுத்த விவாகம் என்ற சிறப்புப்பேர் பெற்றது. இது உன்னத சம்பந்தத்தைக் குறிப்பிடும் ஐக்கியம்; திவ்ய அலங்காரம் பெற்ற சம்பந்தம்.

2. கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களையே விவாகஞ்செய்யவேண்டும் என்று அப்போஸ்தலர் விதித்தனர்.

பரி. பவுல் கொரிந்தியருக்கு: "அவிசுவாசிகளோடு ஒரே நுகத்தில் விபரீதமாய் இணைக்கப்படாதிருங்கள்; நீதிக்கும், அக்கிரமத்துக்கும் சம்பந்தமேது? வெளிச்சத்துக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும்

இசைவேது? அவிசுவாசியோடு விசுவாசிக்குப் பங்கேது?" என்றெழுதுகிறார் (2 கொரி. 6: 14, 15).

விதவையானவள் விவாகஞ்செய்துகொள்ள விடுதலையடைந்திருக்கிறாள் என்று பரி. பவுல் சொல்லுமிடத்தில், "ஆண்டவருக்குள்ளேயே விவாகஞ்செய்துகொள்ளவேண்டும்" என்று விதிக்கிறார் (1 கொரி. 7: 39).

இக்கட்டளைகளை ஆதாரமாக வைத்து, காலஞ்செல்லச் செல்ல, கிறிஸ்தவர்கள் புறமதஸ்தருடன் செய்யும் விவாகத்தைத் திருச்சபை பூராவாய்க் கண்டித்தது. இதனாலேயே தற்போதும் புறமதஸ்தருடன் செய்யும் சம்பந்தங்களைக் கட்டோடே நீக்க முயற்சிக்கவேண்டியதவசியம். விவாகத்துக்காக, ஒரு புருஷன், அல்லது ஒரு ஸ்திரீ மார்க்கத்தைச் சேர்ந்து ஞானதீட்சை பெறுவது சட்டத்துக்கு இசைந்த ஒழுங்காயினும், திருச்சபைக்குப் பெலவீனத்தைத் தரும் வழக்கம் என்பதை மறந்து போகக்கூடாது. இவ்வாறு விவாகத்திற்காகச் சபையிற் சேருகிறவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திலும் அன்பிலும் விருத்தியடைவது பிரயாசம்.

ஸ்திதிபந்தரான கிறிஸ்தவக் குடும்பப் பெண்கள் தங்கள் அந்தஸ்துக்கும் நிலைமைக்குமேற்ற கிறிஸ்தவ வாலிபர் இல்லையென்று கண்டு, புறமதஸ்தரில் ஸ்திதிபந்தரான வாலிபருடன் உறவாடி, விவாகஞ்செய்யத் தலைப்படுவது துக்கமான காரியம். இவ்வாறு விவாகமாடின எவராயினும் தங்கள் புருஷரைக் கிறிஸ்தவர்களாக்கினதாகக் கேள்விப்பட்டதில்லை. இத்தகை இல்லறவாழ்க்கை செய்து தங்கள் கிறிஸ்தவ பக்தி குன்றிப் போகாதபடி காத்துக்கொண்டவர்கள் அபூர்வம். இவ்வித இல்லறவாழ்க்கையில் பிரவேசிக்காதபடி எச்சரிக்கையாயிருப்பது கடமை.

3. முறைகேடான சம்பந்தங்களை அப்போஸ்தலர் விலக்கினர்.

புறஜாதியிலிருந்துவந்த கிறிஸ்தவர்களின் ஒழுக்கத்துக்கு விதிவிலக்குகளை எருசலேம் சங்கத்தில் ஆலோசித்தபோது, அவர்கள் இனி வேசித்தனத்துக்கு விலகியிருக்கவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். 'வேசித்தனம்' என்பதில் இரு பொருள் அமைந்திருக்கக்கூடும்.

(1) புறஜாதிகளின் தேவாலயங்களிலிருந்த தேவதாசி சம்பந்தம் ஒன்று. பூர்வ புறமதங்களில் இவ்வித சீர்கேடு சகஜம். ஆலயந்தொழுகிறவர்களும், கோவில் உற்சவங்களில் பங்குபெறுகிறவர்களும் தேவதாசிகளால் கறைப்படுவது சர்வ சாதாரணம். ஆகையால், எருசலேம் சங்கத்தார் இக்கேட்டைப் பேர்சொல்லி விலக்கவேண்டியது அவசியமாயிற்று. புறஜாதிகளிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் யூதரைப்போல விருத்தசேதனம் பெற்று, நியாயப்பிரமாணத்தின் சடங்குகளை நிறைவேற்றுவது அவசியமில்லை என்று தீர்த்த சங்கத்தாரே புறமத ஆலயங்களில் காணும் துன்மார்க்க நடக்கையில் அவர்கள் சம்பந்தப்படக் கூடாதென்றும் திட்டமாய் எச்சரித்தார்கள்.

(2) 'வேசித்தனம்' என்ற பதத்தில் முறைகேடான இனவழி சம்பந்தமும் விலக்கப்பட்டிருக்கலாம். யூதருக்குக் கண்டிப்பாய் விலக்கப்பட்ட இனவழி பலவற்றில், புறஜாதியார் விவாக சம்பந்தம் செய்தார்களென்று முந்தின அத்தியாயத்தில் பார்த்தோம். அவ்வித விவாகங்கள் வேசித்தனமென்று அழைக்கப்பட்டன. ஆகவே, புறஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் யாரை விவாகஞ்செய்யலாம், யாரை விவாகஞ்செய்யலாகாது என்னும் விதிவிலக்குகளை யூதர் முறைப்படி அநுசரிக்கவேண்டுமென்று எருசலேம் சங்கத்தார் விதித்தார்கள்போலும்.

கொரிந்து சபைக்குப் பரி. பவுல் எழுதுவதைக் கவனிக்குங்கால், இவ்விரண்டு எச்சரிப்பும் அச்சபைக்கு அவசியமாயிருந்ததென்பது தெளிவு. வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்திற்கு வயிறும் இல்லாமல் தீராதது எவ்வாறோ, அவ்வாறே சரீரத்துக்கு வேசித்தனமும் இல்லாமல் தீராது என்றார்கள் கொரிந்தியர். பரி. பவுலோ கிறிஸ்தவர்களைப் பார்த்து: "சரீரம் வேசித்தனத்துக்கல்ல, ஆண்டவருக்கே உரியது", "உங்கள் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயம்" என்கிறார் (1 கொரி. 6: 13, 19). மேலும், சபையில் ஒருவன் தன் தகப்பன் மனைவியை, அதாவது, தன் தகப்பன் இரண்டாந்தாரமாகச் செய்துகொண்ட மாற்றாந்தாயை வைத்துக்கொண்டிருந்தானும். இவ்வித முறைகேடு "புறஜாதிகளுக்குள்ளும் கேள்விப்படாத விபசாரம்" என்கிறார். இவ்வித முறைகேடான விவாகம் விவாகமல்ல, விபசாரமே (1 கொரி. 5: 1).

4. கற்புள்ள தூய வாழ்க்கையில் கிறிஸ்தவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளும்படி அப்போஸ்தலர் ஆதிமுதல் கண்டிப்பாய் உபதேசித்தனர்.

கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கும் பரிசுத்த அழைப்புக்கும், சரீர இச்சையால் வரும் சீர்கேடுகளுக்கும் எள்ளளவாவது சம்பந்தமில்லையென்பது அப்போஸ்தலர் போதனை. எபேசியருக்குப் பரி. பவுல் எழுதுங்கால், புறஜாதியார் "சகலவித அசுத்தங்களையும் பேராசையோடு நடப்பிக்கும்படி தங்களைக் காமவிகாரத்துக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை"; "வேசித்தனம், சகலவித அசுத்தம் ஆகிய இவற்றின் பேர் முதலாய் உங்களுக்குள் சொல்லப்படக்கூடாது" என்கிறார் (எபே. 4: 19, 20; 5: 3). கொரிந்தியருக்கு: "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று உங்களுக்குத் தெரியாதா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை எடுத்து, வேசியின் அவயவங்களாக்கலாமா?" என்று கேட்கிறார் (1 கொரி. 6: 15). தெசலோனிக்கேயர் நிருபத்தில்: "நீங்கள் பரிசுத்தமாக வேண்டுமென்பதே கடவுளின் சித்தம். நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருக்கவும், கடவுளை அறியாத புறஜாதிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தத்திலும் கனத்திலும் ஆளவும் அறிந்துகொள்ளவும், இவ்விஷயத்தில் ஒருவனும் வரம்பு கடவாமலும், தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவும் வேண்டுமென்பதே கடவுளின் சித்தம்" என்று எச்சரித்து ஏவுகிறார் (1 தெச. 4: 3–6). பரி. பேதுரு: "நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாய், உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராகுங்கள்" என்று, சிதறப்பட்ட கிறிஸ்தவர்களுக்குக் கட்டளையிடுகிறார் (1 பேதுரு 1: 14, 15).

இப்படியாக, ஆரம்ப சபைகளனைத்தையும் ஸ்தாபித்து வளர்த்த அப்போஸ்தலர், கிறிஸ்தவர்களது அறிக்கைக்கும், வரம்புகடந்து நடக்கும் சீர்கேடான சரீர இச்சைகளுக்கும் பொருத்தமில்லையென்று திட்டமாய்ப் போதித்தார்கள். கிறிஸ்து இயேசுவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தை அதின்

ஆசை இச்சைகளோடுகூடச் சிலுவையில் அறைந்திருக்கிறவர்கள் என்பது அவர்கள் கோட்பாடு (கலா. 5: 24).

மேலும், இவ்விஷயத்தில் மீறி, முறைகேட்டைச் செய்கிறவர்களைத் திருச்சபை ஐக்கியத்தினின்று விலக்கிவைக்கவும் அப்போஸ்தலர் கட்டளையிட்டார்கள். "சகோதரனென்னப்பட்ட ஒருவன் வேசிக்கள்ளனுயிருந்தால் அவனேடு கலந்திருக்கக்கூடாது. அப்படிப்பட்டவனேடு போஜனம்பண்ணவுங்கூடாது" என்று பரி. பவுல் விதிக்கிருர். கொரிந்துவில் முறைகேடான வாழ்க்கைக்கு இடங்கொடுத்தவனைப்பற்றி: "அப்படிப்பட்டவனுடைய ஆவி ஆண்டவரின் நாளில் இரட்சிக்கப்படும்படி,........நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் அவனை மாம்சத்தின் அழிவுக்கென்று சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்பதே என் தீர்ப்பு" என்கிருர் (1 கொரி. 5: 11, 5).

பரிசுத்த ஞானஸ்நானத்தால் கிறிஸ்துவின் அவயவங்களாக அவரோடு இணைக்கப்பட்டவர்கள், பரிசுத்தஆவி தங்கள் உள்ளங்களில் வாசஞ்செய்யப் பெற்றவர்கள், தங்கள் சரீரத்திலுங்கூட கடவுளை மகிமைப்படுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பது அவர் விதி.

"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று உங்களுக்குத் தெரியாதா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை எடுத்து வேசியின் அவயவங்களாக்கலாமா? கூடவே கூடாது. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளோடு ஒரே சரீரமாயிருக்கிருனென்று உங்களுக்குத் தெரியாதா?......வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள். மனுஷன் செய்யும் எந்தப் பாவமும் சரீரத்துக்குப் புறம்பேயிருக்கும்; வேசித்தனஞ்செய்கிறவனே தன் சுய சரீரத்துக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிருன். உங்கள் சரீரம் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றதும் உங்களில் தங்கியிருக்கிறதுமான பரிசுத்த ஆவியின் ஆலயமென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் உங்களுக்குத் தெரியாதா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள். ஆதலால் உங்கள் சரீரத்தினுல் கடவுளை மகிமைப்படுத்துங்கள் (1 கொரி. 6: 15, 20).

திருச்சபையின் ஆதித்தலைவர் மொழிந்த இச்சிறந்த உபதேசத்தை நாமும் நன்கு மதித்து, நம்மையும் நமது கிறிஸ்தவர்களையும் பரிசுத்தமாக்கிக்கொள்ளுவது நமது கடமை.

5. கிறிஸ்தவர்களான ஸ்திரீ—புருஷர் ஒருவரையொருவர் பரிச்சேதம் தள்ளிவிடக்கூடாதென்றும் அப்போஸ்தலர் உபதேசித்தனர்.

"விவாகஞ்செய்துகொண்டவர்களுக்கோ நானல்ல, ஆண்டவர் கட்டளையிடுகிறதாவது: மனைவி தன் புருஷனை விட்டு நீங்கிப்போகக்கூடாது.....புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது" என்று பரி. பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறார். கிறிஸ்தவர்களாகுமுன்னே விவாக நிலைமைக்குட்பட்டவர்கள் கிறிஸ்தவர்களான காரணத்தால் முந்தின விவாக சம்பந்தத்தினின்று நீங்குவது தகாததென்கிறார். 'சகோதரன் ஒருவனுக்கு அவிசுவாசியான மனைவி இருந்து, அவள் அவனோடு கூடிவாழச் சம்மதித்தால், அவன் அவளைத் தள்ளிவிடக்கூடாது' என்பது அவர் கட்டளை (1 கொரி. 7: 10, 11, 12, 13).

ஓர் ஸ்திரீ கிறிஸ்தவளாகும்போது தன் புருஷனை விட்டுவிடவாவது, ஓர் புருஷன் கிறிஸ்தவனாகும்போது தன் மனைவியை விட்டுவிடவாவது அப்போஸ்தலன் சம்மதியார். அந்தப் புருஷன், அல்லது மனைவி, கூடிவாழ இஷ்டப்படுங்கால், முந்தின விவாக சம்பந்தத்தை ரத்துச் செய்வது தகாது என்கிறார். தள்ளிவிடுவதும், வேறு விவாகஞ்செய்வதும், கிறிஸ்து மார்க்கத்துக்கு ஏற்றதல்ல என்று பலமாய்ச் சாதிக்கிறார். புருஷன் மனைவியை விட்டுவிட்டு வேறொருத்தியைச் சேர்த்துக்கொள்ளுவதும், மனைவி தன் புருஷனைவிட்டுப் பிரிந்து வேறொருவனோடு வாழப்போவதும் கிறிஸ்துமார்க்கத்துக்கு முற்றிலும் விரோதம். இவ்வித சீர்கேட்டை நமது சபைகளிலிருந்து ஒழிக்க முயல்வது அவசியம். மேலும், அப்போஸ்தலன் இங்கு சாதிக்கும் கொள்கையினால் விவாக சம்பந்தம் சகல மதங்களுக்கும் பொதுவானதென்று ஒப்புக்கொள்ளுகிறார். கிறிஸ்துமார்க்கத்தில் சேருகிறவர்கள், இம்மார்க்கத்தில் பிரவேசித்ததினிமித்தம் ஒருவரைவிட்டு ஒருவர் நீங்கப் பார்ப்பது நன்றன்று. சபைகள் ஒருபோதும் இவ்வித ஒழுங்கீனத்துக்கு இடங்கொடுக்கலாகாது.

6. விவாகமானவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் வெகுகாலம் பிரிந்திருப்பதும் கேடுதி எனப் பரி. பவுல் விதித்தார்.

"ஜெபத்தியானத்திற்கு வசதியாயிருக்கும்படி, சிலகாலம் மாத்திரம் பிரிந்திருப்பதற்கு இருவரும் சம்மதித்தாலன்றி,

ஒருவரைவிட்டொருவர் பிரியவேண்டாம். இச்சையடக்கம் உங்களுக்கு இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடி மறுபடியும் கூடிவாழுங்கள்" என்று கொரிந்தியருக்கு எழுதுகிறார் (1 கொரி. 7: 5). இவ்விதியில் பல குறிப்புகளுள. விவாகமான கிறிஸ்தவர்கள்—(i) ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழக்கூடாது; (ii) ஜெபத்துக்கும் தியானத்துக்கும் வசதியாயிருக்கும்படி மாத்திரம் பிரிந்திருக்கவேண்டுமாகில் பிரிந்திருக்கலாம்; (iii) அதுவும் சில காலத்துக்கென்று மாத்திரம் பிரியலாம்; (iv) அதுவுங்கூட இருவரும் சம்மதித்தால் மாத்திரம் பிரியலாம்; (v) அவ்வாறு பிரிந்திருக்க நேரிட்டால், மறுபடியும் தீவிரமாய்க் கூடிவர வேண்டும் என்கிறார்.

உத்தியோகத்தினிமித்தமாவது, பிரசவத்தினிமித்தமாவது, மாசக் கணக்காய்ப் புருஷன்–மனைவி பிரிந்திருப்பது குடும்ப நல்லொழுக்கத்துக்கு அநுகூலமென்று எவரும் சொல்லார். யௌவன புருஷர்–மனைவிகள் இவ்வாறு நெடுங்காலம் பிரிந்திருப்பது இல்லறவாழ்க்கையைப் பாழாக்குமென்பதற்கு ஆக்ஷேபனை உண்டோ?

7. ஸ்திரீ–புருஷர் சம்பந்தம் உன்னத நிலைமைக்கு உயர்த்தப்பட்டது.

பழைய ஏற்பாட்டில், ஸ்திரீ–புருஷர் சம்பந்தம் ஆண்டவன்–அடிமை சம்பந்தத்துக்குச் சமம். "அவன் உன்னை ஆண்டுகொள்வான்" என்பது சிருஷ்டிப்பிலேயே சொல்லப்பட்டதாக ஆதியாகமம் விளம்புகிறது (ஆதி. 3: 16). ஒருவனுடைய வேலைக்காரன், வேலைக்காரி, எருது, கழுதை முதலான அவனது ஆஸ்தியிற் சேர்ந்த ஒரு பொருள் மனைவி என்பது பத்தாம் கற்பனையின் கருத்து. பிறனுடைய பொருளில் எதையும் ஆசிப்பது தகாது; அதில் மனைவியும் ஒரு பொருள் (யாத். 20: 17). ஒருவன் பரிசங் கொடுத்து மனைவியைச் சம்பாதிக்க வேண்டியதிருந்ததால் இவ்வாறு கொடுக்கும் பரிசம் மனைவிமேல் புருஷனுக்கு உரிமையைக் கொடுத்தது (ஆதி. 29: 20, 27; 1 சாமு. 18: 25; 2 சாமு. 3: 14). பிள்ளையில்லாத மனைவி கதி பரிதாபம் (ஆதி. 16: 4; 30: 1; 1 சாமு. 1: 6). பலதாரம் படைத்தல் சகஜம். இவ்வித அபிப்பிராயங்களையும் கட்டளைகளையும் பெற்ற சமுதாயத்தில் மனைவிக்கு என்ன மதிப்பு? விவாக சம்பந்தத்துக்கு என்ன மகிமை?

நமது ஆண்டவருடைய திரு அவதாரத்தினாலும் போதனையினாலும் திருஷ்டாந்தத்தினாலுமோ ஸ்திரீகள் உன்னத ஸ்திதிக்கு உயர்த்தப்பட்டனர். புருஷன்—ஸ்திரீ சம்பந்தம் மதிப்புப் பெற்றது.

எபேசியர், கொலோசேயருக்குப் பரி. பவுல் எழுதிய நிருபங்களிலும், பரி. பேதுரு நிருபத்திலும் கிறிஸ்தவ விவாகத்தைப்பற்றிய மதிப்பையும் அபிப்பிராயத்தையும் காணலாம்.

"புருஷர்களே, மனைவிகளில் அன்புகூருங்கள், புருஷர் தங்கள் சரீரங்களில் அன்புகூருகிறதுபோலவே தங்கள் மனைவிகளிலும் அன்புகூரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்" என்று எபே. 5: 25–33-லும், "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள்" என்று கொலோ. 3: 19-லும் பரி. பவுல் கட்டளையிடுகிறார்.

எபேசியர் நிருபம் ஐந்தாம் அதிகாரத்தில், கிறிஸ்தவ ஸ்திரீ—புருஷர் கடமையை வற்புறுத்துவதற்கு, கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள சம்பந்தத்தை உதாரணமாக அப்போஸ்தலன் எடுத்துக் காட்டுகிறார். கிறிஸ்துமார்க்கத்தினாலேயே கிறிஸ்தவ விவாக சம்பந்தம் இவ்வளவு உன்னத பதவியடைந்தது.

8. கிறிஸ்தவ புருஷர்—ஸ்திரீகள் கடமை தெளிவாய் விளக்கப் பெற்றது.

எபேசியர் நிருபத்திலும் பேதுரு நிருபத்திலும் காணும் வாசகங்களை இங்கே எடுத்தெழுதுவோம்:—

"ஆண்டவருக்கு அடங்கியிருக்கிறதுபோல மனைவிகள் தங்கள் புருஷருக்கு அடங்கியிருக்கவேண்டும். கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்துக்கு இரட்சகர். சபை கிறிஸ்துவுக்கு அடங்கியிருக்கிறதுபோல, மனைவிகளும் எக்காரியத்திலும் புருஷருக்கு அடங்கியிருக்கவேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து, அது பரிசுத்தமும் மாசற்றதுமாயிருக்கும்படி தாம் அதைத் திருவசனத்தோடுகூடிய தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குவதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் மகிமையுள்ள சபையாக

அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் அதற்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷரும் தங்கள் சரீரங்களில் அன்புகூருகிறதுபோல, தங்கள் மனைவிகளிலும் அன்புகூரக் கடமைப்பட்டவர்கள். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில் தானே அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தை ஒருவனும் ஒருக்காலும் பகைத்ததில்லையே; கிறிஸ்து திருச்சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல, ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவர் சரீரத்தின் அவயவங்கள். இதினிமித்தம், ஒருவன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு இசைந்திருப்பான், இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரிது; கிறிஸ்துவையும் திருச்சபையையும் குறித்தே நான் இதைச் சொல்லுகிறேன். எப்படியும், உங்களில் ஒவ்வொருவனும் தன்னில் அன்புகூருகிறதுபோல, தன் மனைவியிலும் அன்புகூரக்கடவன்; மனைவி புருஷனிடம் பயபக்தியாயிருக்கக்கடவள்" (எபே. 5: 22–33).

பரி. பேதுரு:

"மனைவிகளே, உங்கள் புருஷருக்கு அடங்கியிருங்கள். அப்பொழுது, அவர்களில் யாராவது திருவசனத்துக்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தாலும், பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் கண்டு, தங்கள் மனைவிகளின் நடக்கையினாலேயே, போதனையின்றி, ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். சடை பின்னுதல், பொன்னாபரணங்களை அணிதல், உயர்ந்த வஸ்திரங்களைத் தரித்தல் ஆகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிருக்கலாகாது. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய அழியாத அலங்காரத்தை உங்கள் இருதயத்திலுள்ள அந்தரங்க ஆத்துமா தரித்திருக்கக்கடவது; அதுவே கடவுளின் பார்வையில் விலையுயர்ந்தது. அந்தப்படியே பூர்வத்தில் கடவுளில் நன்னம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்கள் புருஷருக்கு அடங்கி நடந்தவர்களாய்த் தங்களை அலங்கரித்தார்கள். இப்படியே, சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். அந்தப்படி, புருஷர்களே, ஸ்திரீயானவள் பலவீன பாண்டமென்றறிந்து, விவேகமுள்ள

வர்களாய் அவர்களோடு வாழ்ந்து, அவர்களும் உங்களோடு கூட ஜீவ கிருபைக்குச் சுதந்தரரானதால் அவர்களுக்குரிய கனத்தைச் செலுத்துங்கள்'' என்கிறார். இப்படிச் செய்தால் உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராது. (1 பேது. 3: 1–7).

மேலே கண்ட வேத வாக்கியங்களினின்று கிறிஸ்தவ குடும்ப விதிகளை எடுத்துக் குறிப்பிடுவது நன்று.

(i) கிறிஸ்தவ மனைவிகள் கடமை.

கிறிஸ்தவ மனைவி எக்காரியத்திலும் புருஷனுக்கு அடங்கியிருக்கவேண்டும்;

புருஷன் தன் சிரசென்று அவனை மதிக்கவேண்டும்;

புருஷன் தன் சரீரத்துக்கு, (ஆத்துமாவுக்கல்ல), சரீரத்துக்கு இரட்சகனென்று அறியவேண்டும்;

புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கவேண்டும்;

புருஷன் தெய்வ பக்தியற்றவனாயிருப்பின், அவனை ஆதாயப்படுத்தப்பார்ப்பது அவள் கடமை;

புருஷனை மதிப்பதும் அவனுக்குக் கீழ்ப்படிவதும் அவள் மேன்மை;

கிறிஸ்தவ மனைவிக்கு ஜடை அலங்காரம், ஆபரண அலங்காரம், வஸ்திராலங்காரம் அலங்காரமல்ல, இருதய அலங்காரமே அலங்காரம்;

இருதய அலங்காரம் உள்ளான அலங்காரம்;

சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே உள்ளான அலங்காரம்.

இது அந்தரங்க அழகு, அழியாத அழகு, கடவுள் பார்வையிலும் விலையுயர்ந்த அழகு.

கிறிஸ்தவ மனைவிகளின் சௌந்தரியமும், லக்ஷணமும் எத்தனை சிறப்பு! நம் தேச கிறிஸ்தவ ஸ்திரீகள் இங்கு வர்ணிக்கப்பெற்ற மேன்மையையும், சௌந்தரியத்தையும் மெய்ப்பக்தியையும் தரித்துக்கொள்ள முயற்சிப்போமாக.

(ii) கிறிஸ்தவ புருஷர் கடமை.

கிறிஸ்தவ புருஷன் தன் மனைவியினிடம் அன்புகூரவேண்டும்; அந்த அன்புக்கு அளவு சபையின்மீது கிறிஸ்து வைத்த அன்பின் அளவே;

புருஷன் தன் மனைவியில் மரணபரியந்தம் அன்புகூர்ந்து, அவளுக்காகத் தன்னைத்தானே ஒப்புக்கொடுக்கவேண்டியவன்;

மனைவியில் கறைதிரை, குற்றங்குறை உண்டானால் அவற்றைப் பொறுத்து, தன் அன்பினால் அவற்றை நீக்கும்படி முயற்சிக்கவேண்டியவன்;

கிறிஸ்தவ புருஷன் ஒருபோதும் மனைவியைப் பகைக்கலாகாது;

கிறிஸ்தவ புருஷன் மனைவியைப் போஷித்துக் காப்பாற்றக் கடமைப்பட்டவன்;

தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பது அவன் கடமை;

ஸ்திரீ பலவீன பாண்டமானதால் அவள் பலவீன காலங்களைக் கவனிப்பதும், ஏற்ற சகாயம்புரிவதும், விவேகத்துடன் அவளுடன் வாழுவதும் அவன் கடன்;

நித்திய ஜீவ கிருபைக்கு மனைவியும் சுதந்தரவாளியானதால், அவளது ஆத்ம பக்திவிருத்திக்குப் புருஷன் சகாயம் புரியவேண்டியவன்;

அதாவது, மனைவி வேதம் வாசித்துத் தியானஞ்செய்யவும், ஆலய ஆராதனைகளுக்கேகவும், மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியம் கூறவும் உதவிசெய்யவேண்டும்;

இருவரும் கூடி ஜெபம்செய்வது அவர்கள் கடமை;

இந்த ஜெபத்துக்குத் தடை வராதபடி அவர்கள் எப்பொழுதும் சமாதானமாய் வாழவேண்டியவர்கள்;

கிறிஸ்தவ மனைவி புருஷனுடைய அடிமையல்ல, வேலைக்காரியல்ல, பொருளல்ல—கிறிஸ்துவுக்குள் புருஷனோடுகூட உடன் பாத்தியதை உடையவள்;

ஆகையால் மனைவிக்குரிய கனத்தைக் கிறிஸ்தவ புருஷன் அவளுக்குச் செலுத்தவேண்டியவன்.

கிறிஸ்தவ விவாகம் எத்தனை மாட்சிமை நிறைந்த சம்பந்தம்! இங்கே விவரிக்கப்பெற்றவாறு நம் தேசத்துக் கிறிஸ்தவ இல்வாழ்க்கை இருக்கும்படி முயற்சிப்போமாக.

5

திருச்சபைச் சட்டம்

ஆரம்பமுதலே திருச்சபையானது கிறிஸ்தவ விவாகத்தைப்பற்றி விதிவிலக்குகளை ஏற்படுத்தத் தொடங்கினது. கிறிஸ்து சபை யூத சபையின் நிழலில் முளைத்து வளர்ந்ததினாலும், விவாகத்தைப்பற்றிய அநேக விதிவிலக்குகள் யூதச் சபைக்கு அருளப்பட்டிருந்தபடியாலும், அவ்விதி விலக்குகளிற் சிலவற்றை இயேசுநாதர் தாமே வேறுவிதமாய் வியாக்கியானப்படுத்தியிருந்ததாலும்—பரிசுத்த விவாகத்தின் சம்பந்தமாய்க் கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளவேண்டிய சட்டங்களைத் திருச்சபை உண்டாக்குவது அவசியமாயிற்று. விவாக விதிகள் சம்பந்தமாய்க் கண்டிப்பில்லாத ஜனசமுதாயத்தில் சன்மார்க்கம் மிகத் தாழ்ந்த நிலைமையிலிருக்குமென்பதற்கையமில்லை. எப்பேர்ப்பட்ட மிலேச்ச ஜாதியும் விவாகத்தை நன்கு மதித்து, இன்னது தகும் இன்னது தகாதென்று தங்கள் யுக்திப்பிரகாரம் விவாகச் சட்டங்களை ஏற்படுத்தியிருக்க, சன்மார்க்கத்தையும் தேவ பக்தியையும் சிரேஷ்டஸ்தானத்தில் வைத்து நன்குமதித்த கிறிஸ்து சபை விவாகத்தைப்பற்றித் திட்டவட்ட விதிகளை ஏற்படுத்தினது ஆச்சரியமல்ல.

அருள்நாதரும் அவருடைய அப்போஸ்தலரும் இவ்விஷயத்தில் விதித்த பிரமாணங்களைப் புதிய ஏற்பாட்டில் ஆய்ந்தறிந்தோம். அக்காலத்துக்குப்பின் உண்டான விதிகளை இனி படிப்போம்.

பரி. இக்ஞேஷியஸ் (கி. பி. 120) போலிகார்ப்புக்கு எழுதும் நிருபத்தில், "விவாகமானது சுய இச்சைக்கேற்றதாகவல்ல, கர்த்தருக்கேற்றதாயிருக்கத்தக்கதாக, அத்தியக்ஷரின் அநுமதி பெற்றே புருஷரும் ஸ்திரீகளும் விவாக சம்பந்தத்தில் பிரவேசிப்பார்களாக" என்கிறார். திருச்சபையின் சட்டம் இன்னதென்று அத்தியக்ஷர் சொல்லக்கூடியவராதலால், விவாகஞ்செய்யப்போகிறவர்கள் அவர் அநுமதியையும், ஆசீர்வாதத்தையும் தேடவேண்டுமென்பது இவ்வாலோசனையின் கருத்து.

தேர்த்துல்லியான் (கி. பி. 200) தன் மனைவிக்கு எழுதிய பிரபந்தத்தில், "திருச்சபையினுல் இணைக்கப்பட்டு, நற்கருணையில் ஸ்திரப்படுத்தப்பட்டு, ஆசீர்வாதத்தினுல் முத்திரிக்கப்பட்ட விவாகத்தின் பாக்கியத்தைச் சொல்ல யாரால் ஆகும்? வேறுவிதமாய் விவாகஞ்செய்வது விசுவாசிகளுக்கு நியாயமுமல்ல தகுதியுமல்ல" என்கிறுர். வேறொரு பிரபந்தத்தில்: இரகசிய விவாகம், அதாவது சபை முன்னிலையில் செய்யப்படாத விவாகம், வேசித்தனமாகவும் விபசாரமாகவும் எண்ணப்படும்" என்று எழுதுகிறுர்.

ஆகவே, சபைகளுக்கு முன்பாக பகிரங்கமாய் விவாகஞ் செய்வதும், திருச்சபைத் தலைவரின் ஆலோசனையை நன்கு மதித்து அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெறுவதும் பூர்வத்திலேயே வழக்கமாகிவிட்டது. திருச்சபையின் ஆசீர்வாதம் பெறவேண்டுமாகில், எவ்வித விவாகம் சபையின் ஆசீர்வாதம் பெறத்தக்கதென்று விதிப்பது திருச்சபையின் கடமையாயிற்று.

கிறிஸ்து சபையை ஆரம்பத்தில் சேர்ந்தவர்களில் மிகுதியானவர்கள் யூதராயிருந்தபடியால், அவர்கள் அனைவரும் பழைய ஏற்பாட்டு யூதப் பிரமாணத்துக்கு உட்பட்டவர்கள். கிறிஸ்துநாதர் எதைதை மாற்றினுரோ, அதை மாத்திரம் கிறிஸ்தவர்கள் மாற்றிக்கொண்டார்கள். உதாரணமாக, தள்ளுதல் சீட்டைக் கொடுத்து புருஷன் மனைவியைத் தள்ளிவிடலாம் என்பது யூதர் பிரமாணம்; தள்ளிவிடுதல் தகாதென்பது இயேசுநாதர் போதனை. ஆகையால், தள்ளிவிடுதலைப்பற்றிய விதிகள் கண்டிப்பாயிற்று. புறஜாதியாருடன் சம்பந்தம் கலக்கக்கூடாதென்பது பழைய ஏற்பாட்டின் விதி; புறமதஸ்தரோடு விவாகஞ்செய்யக்கூடாதென்பது கிறிஸ்தவர்கள் விதியாயிற்று.

புறஜாதியாரோ ரோம ராஜ்யத்தின் சட்டத்திற்குட்பட்டிருந்தவர்கள். அவர்கள் கிறிஸ்தவர்களானபோது, ரோம ராஜ்யத்தின் குடிகளாக தேசச் சட்டத்துக்கும், கிறிஸ்தவர்களாக திருச்சபைச் சட்டத்துக்கும் உள்ளானுர்கள். இப்படியாக, கிறிஸ்தவர்கள் அனைவரும் இரு சட்டத்துக்கும் கீழ்ப்படியவேண்டியதாயிற்று.

ரோம ராஜ்யம் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்தபோது, திருச்சபையின் விவாகச் சட்டமே தேசச் சட்ட

மாகுங் காலம் வந்தது. கிரேக்கச் சபைகளில் இந்நாள்வரைக்கும் இதுவே பிரமாணம். கான்ஸ்தாந்திநோபுரியில் கிறிஸ்தவ அரசன் செங்கோல் செலுத்தினாலுஞ் சரி, துருக்கிய சுல்தான் அரசாட்சி செய்தாலுஞ் சரி, கிரேக்கு சபைக் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் விவாக சட்டம் திருச்சபைச் சட்டமே. ரோம, ஆங்கிலேய சபைகளிலும் திருச்சபைச் சட்டம் தவிர வேறே சட்டம் வெகுகாலம் கிடையாது.

கிறிஸ்து சபைச் சட்டங்கள் என்று பேர் கொண்ட விதிகள் பல வழியாய் வந்தன. அநேகம், திருச்சபையின் பொதுச் சங்கங்களில் தீர்மானிக்கப்பட்டவை. சில, பற்பல பூர்வ பாப்புகள் ஏற்படுத்தினவை. சபைப் பிதாக்கள் கிரந்தங்களிலிருந்து வந்தவைகளும் பலவுள. யூதச்சபை வழக்கத்திலிருந்தும், ரோம ராஜ்யச் சட்டப் புஸ்தகங்களிலிருந்தும் வந்தவைகளும் உண்டு. இவ்விதமாய் வந்த பிரமாணங்களுக்கு, கனோன் சட்டங்கள் என்று பேர். 13-ம் நூற்றாண்டில்தான் இவை சேர்த்துத் திரட்டப்பட்டன. இச்சட்டங்களனைத்தும் முக்கியமாய் மூன்று வகுப்பானவை:—

(1) தள்ளிவிடுதலைப்பற்றிய விதிகள்

கிறிஸ்தவ விவாகம் எந்தக் காரணத்தைப்பற்றியாகிலும் ரத்துச் செய்யப்படக்கூடியதா? ரத்துச்செய்யப்படக்கூடுமானால், என்னென்ன காரணங்களையிட்டு ரத்துச்செய்யப்படக்கூடும்? தள்ளிவிடுகிறவர்கள் மறுபடியும் வேறொருவரை விவாகஞ்செய்யலாமா? இவைகளைக்குறித்து முதல் நான்கு நூற்றாண்டுகளின் தீர்மானத்தையும் விசாரித்தால், மரணம் ஒன்று தவிர வேறொன்றும் கிறிஸ்தவ விவாகத்தை ரத்துச்செய்யமாட்டாதென்பதே திருச்சபையின் பிரமாணம் என்று தெரியவரும். புருஷனாவது, மனைவியாவது விபசாரக் குற்றஞ்செய்தால் பிரிந்திருக்கவேண்டுமென்றும், குற்றஞ்செய்த தம்பதி மனந்திரும்பும் பட்சத்தில், மன்னித்துத் திரும்பச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் சபை கட்டளையிட்டது. ஹேர்மா எழுதின "மேய்ப்பன்" என்ற நூலில், பின்வரும் சம்பாஷணை வரைந்துளது. ஹெர்மா இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவர் (சுமார் கி. பி. 150).

"ஐயா, தங்களிடத்தில் சில கேள்விகள் கேட்க உத்தரவாகவேண்டும் என்றேன். கேள் என்று மேய்ப்பர் சொன்

ஞர். அப்பொழுது நான்: விசுவாசியான ஒரு மனைவி விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், புருஷன் அவளோடு இன்னும் கூடி வாழ்ந்துகொண்டிருந்தால் அவன் பாவஞ்செய்கிறவனுவானே? எனக் கேட்டேன். அப்பொழுது அவர்: அவள் செய்த பாவம் அவனுக்குத் தெரியாதிருக்கும் வரையில் அவன் அவளோடு கூடிவாழ்வதினுல் அவன் குற்றவாளியாகமாட்டான். தன் மனைவி தவறிப்போனதை அவன் அறிந்தபின்பு, அவளும் மனந்திரும்பாமல் இன்னும் தன் பாவத்தில் விடாப்பிடியாய் நிலைத்திருந்தால், அவளோடு வாழ்வது அவளது பாவத்தில் பங்கு பெறுவதற்குச் சரி என்றூர். அப்பால் நான்: ஐயா! மனைவி தன் துன்மார்க்கத்தை விட்டுவிடாதிருப்பாளாகில், புருஷன் செய்யவேண்டியதென்னவென்று கேட்டேன். அவர்: புருஷன் அம்மனைவியை விட்டுப் பிரிந்து தனிமையாயிருக்கவேண்டும்; ஆனுல், தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை அவன் விவாகம் பண்ணிஞல், அவன் விபசாரஞ் செய்கிறவனுயிருப்பான் என்றூர். அப்பொழுது நான்: தள்ளிவிடப்பட்ட அந்த ஸ்திரீ மனந்திரும்பித் தன் புருஷனிடத்தில் வர விரும்பினுல் அவளுடைய புருஷன் அவளைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளக்கூடாதா என்றேன். அவர்: சேர்த்துக்கொள்ளுவதே சரி. புருஷன் அவளைத் திரும்பச் சேர்க்காதிருந்தால் அவன் குற்றவாளியாகி, தன்மேல் பெரிய பாதகத்தைக் கட்டிக்கொள்ளுகிறுன். ஆகவே, தள்ளப்பட்டவள் மனந்திரும்பத்தக்கதாக, புருஷன் வேறொருத்தியை விவாகஞ்செய்யக்கூடாது என்றூர்" என்று எழுதியிருக்கிறது.

இந்நூல் இரண்டாம், மூன்றும், நான்காம் நூற்றுண்டுகளில் வேதாகமத்துக்குச் சமமாய் எண்ணப்பட்டு, புதிய ஏற்பாட்டு ஆகமங்களோடே சேர்த்து எழுதப்பட்டிருந்தது. இதின் ஆலோசனையை ஆதித் திருச்சபை வேத சட்டமாகப் பாவித்தது என்று சொல்லலாம்.

நான்காம் நூற்றுண்டில் கான்ஸ்தாந்தீன் ராஜன் கிறிஸ்தவனுனன். வரவர, தேச வழக்கத்துக்கும் தேசப் பிரமாணத்துக்கும் திருச்சபை கீழ்ப்பட ஆரம்பித்தது. விவாகத்துக்கு இருவர் சம்மதம் போதுமானதாயிருந்ததுபோல, பிரிந்துபோவதற்கும் இருவர் சம்மதம் இருந்தால் போதுமென்று ரோம ராஜ்ய சட்டம் விதித்தது. தேசச் சட்டத்

தைக் கிறிஸ்துவின் சட்டத்துக்கிசைவாய் மாற்றும்படி திருச்சபை துவக்கத்தில் பிரயாசப்பட்டபோதிலும், சில விஷயங்களில் கிழக்குச் சபை தானும் திருச்சபைச் சட்டத்தைத் தேசச் சட்டத்துக் கிசைவாய் தாழ்த்திவிட்டது. இதில் முக்கியமான மாறுதல் தள்ளிவிடுதலைப்பற்றியது. விபசாரத்நிமித்தம் தன் மனைவியைத் தள்ளிவிட்ட புருஷனும், அதே காரணத்நிமித்தம் தன் புருஷனைத் தள்ளிவிட்ட மனைவியானலும் திரும்ப விவாகம் செய்துகொள்ளலாமென்றும், அவ்வித விவாகத்தைக் குருமார் ஒப்புக்கொண்டு ஆசிர்வதிக்கலாமென்றும், மறுவிவாகம் செய்கிறதற்காக ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனல், அப்படிப்பட்டவர்களைக் குருமார் மறுவிவாகத்தில் சேர்க்கக்கூடாதென்றும் கிழக்குச் சபை விதித்தது. ரோமான் சபையோ கூடியவரை திருச்சபைப் பிரமாணத்தை விடாது காத்துக்கொண்டது.

விவாகம் ஒருக்காலும் ரத்துச்செய்யப்படக்கூடாது என்பதே 1850 வரை இங்கிலாந்து தேசத்துப் பிரமாணம். 1857-ல் "டைவோர்ஸ் ஆக்ட்" என்ற தள்ளுதல் சட்டம் உண்டாயிற்று. விபசாரத்நிமித்தம் புருஷன் மனைவி ஒருவரையொருவர் தள்ளிவிடலாமென்பதும், அவ்வாறு பிரிந்துபோனவர்கள் மறு விவாகம் செய்துகொள்ளலாமென்பதுமே அதின் தீர்மானம். ஆகிலும், குருமார் இவ்வித விவாகத்தை நிறைவேற்றவேண்டியது கட்டாயமில்லை. தேசச் சட்டம் இவ்வாறு மாற்றப்பட்டபோதிலும், திருச்சபை விதியோ ஒரு காலத்திலும் மாற்றப்படவில்லை. விவாக ஆராதனையில் அவ்விதிகளைக் காணலாம்:—

"நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும்............இவளுக்கே புருஷனயிருப்பாயா?" "நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும்......இவனுக்கே மனைவியாயிருப்பாயா?" "நான் இன்றுமுதல் உன்னை எனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு...............மரணம் நம்மைப் பிரிக்குமளவும் உன்னை நேசிக்கவும், ஆதரிக்கவும் வாக்குக் கொடுக்கிறேன்." "நான் இன்றுமுதல், உன்னை எனக்கு விவாக புருஷனக ஏற்றுக்கொண்டு, மரணம் நம்மைப் பிரிக்குமளவும், உன்னை நேசிக்கவும், ஆதரிக்கவும், உனக்குக் கீழ்ப்படியவும் வாக்குக்கொடுக்கிறேன்." "தேவன் இணைத்தவர்களை மனுஷன் எவனும் பிரிக்காதிருக்கக்கடவன்"—"புருஷனிலிருந்து ஸ்திரீயை உரு

வாக்கி, அவர்களை நன்றாய் இணைத்து, விவாகத்தினால் ஒருமைப்படுத்தி, அவர்களை ஒருக்காலும் பிரித்துவிடக்கூடாதென்று கற்பித்திருக்கிறார்."

இவைகளை வாசித்தால், கிறிஸ்தவ விவாகமானது மரணத்தினாலொழிய வேறொன்றினாலும் பிரிக்கப்படலாகாத சம்பந்தம் என்பது தெளிவாயிருக்கிறது.

1888-ம் வருஷத்து லாம்பத் கான்பரேன்ஸில் இது விஷயத்தைப்பற்றி ஆலோசித்து, சில தீர்மானங்கள் செய்தார்கள். அவையாவன:—

(1) நமதாண்டவருடைய வார்த்தைகள் தெளிவாயிருக்கிறபடியால், விபசாரத்தினிமித்தமே தவிர வேறெந்தக் காரணத்தினிமித்தமும் விவாகம் செய்தவர்கள் பிரிந்துபோகக்கூடாது என்றும், விபசாரத்தினிமித்தம் பிரிந்துபோனவர்களுங்கூட ஒருவர் உயிரோடிருக்கும்பரியந்தம் மற்றவர் மறுவிவாகம் செய்யக்கூடாதென்றும் தீர்மானிக்கிறோம்.

(2) பிரிக்கப்பட்ட இருவரில் குற்றஞ்செய்தவர்கள் யாரோ அவர்களுக்குத் திருச்சபையின் ஆராதனை வாசித்து, குருமார் எவராயினும் ஆசீர்வாதம் கூறக்கூடாது.

(3) குற்றமற்றவர்கள் மறுவிவாகம்செய்துகொள்ளலாமாவென்ற விஷயத்தில் பற்பல அபிப்பிராயங்கள் திருச்சபையிலிருந்து வந்திருப்பதால், இப்படிப்பட்ட எவராயினும் சர்க்கார் சட்டத்துக்கேற்க விவாகம் செய்துகொள்ளும்பக்ஷத்தில், அவர்களுக்குத் திருச்சபை சாக்கிரமெந்துக்களை மறுக்கலாகாது.

(4) குற்றமற்றவர்கள் குற்றஞ்செய்தவரைக் கோர்ட்டின் மூலமாய் சட்டப்பிரகாரம் தள்ளிவிட்டபின் மறு விவாகஞ் செய்துகொள்ள விரும்பினால், அப்படிப்பட்ட விவாகத்தின் மேல் திருச்சபையின் ஆசீர்வாதங்கூறுவது ஏற்றதல்ல—என்பதே.

தேசச் சட்டத்தினிமித்தம் மூன்றாம் தீர்மானத்தை அத்தியக்ஷ மஹா சபை செய்திருக்கிறதென்பது தெளிவு. மறுவிவாகம் என்ற விஷயத்தில் குற்றமுள்ளவர்களுக்கும் குற்றமற்றவர்களுக்கும் பேதம் இல்லாதிருப்பதே உசிதம்.

தற்காலத்தில் டைவோர்ஸ் ஆக்டைத் திருத்தி, பிரிந்துபோகுதலை இன்னம் சற்று சுளுவாக்கிக்கொள்ளுவதற்குப் பல

பிரயத்தனங்கள் இங்கிலாந்து தேசத்தில் நடைபெறுகின்றன. அமெரிக்கா தேசத்தில் விபசாரத்துக்காக மட்டுமல்ல, இன்னும் அநேக காரணங்களையிட்டும் புருஷன்—மனைவி பிரிந்து போகத் தேசச்சட்டம் இடங்கொடுக்கிறது. ஜப்பானில் விவாகஞ்செய்தவர்கள் இருவர் நீங்கிக்கொள்ளச் சம்மதித்தால், உடனே பதிப்பு ஆபீசுக்குப்போய் தங்கள் விவாகத்தை ரத்துச் செய்துகொள்ளலாம். நிகழும் விவாகங்களில் மூன்றிலொன்று இவ்வாறு ரத்துச்செய்யப்படுகின்றனவாம். பிரிந்துபோவதற்குச் சுளுவான பிரமாணங்கள் இருப்பது சன்மார்க்கத்துக்கும் குடும்ப ஜீவியத்திற்கும் இடையூறுகும்.

இந்தியர் தம் இஷ்டம்போல் விவாகத்தை ரத்துச்செய்துகொள்ளுகிறவர்களல்ல. அவ்வாறு செய்கிற இரண்டொரு ஜாதியை மகா ஈனமாக எண்ணுவதே நம்மவர்கள் வழக்கம். ஆனதுபற்றி, கிறிஸ்தவ விவாக சம்பந்தம் ரத்துச்செய்யப்படத்தகாத சம்பந்தமென்று ஸ்தாபிப்பதும், நமதாண்டவர் பிரமாணத்தையே நம் இந்திய சபையின் பிரமாணமாக்குவதும், தேசச்சட்டம் எவ்வாறிருந்தபோதிலும் திருச்சபைச் சட்டத்தைக் கண்டிப்பாக்கி அதை உச்ச நிலையில் காப்பாற்றிக்கொள்ளுவதுமே நமது கடமை. அதுவே இந்துதேசச் சபைக்கு ஏற்றது; அதுவே சன்மார்க்கத்துக்கு அநுகூலம்; அதுவே வருங்காலத்தில் கிறிஸ்தவ மக்களுக்கு லாபமென விளங்கும்.

இந்து சமய விவாகமும் இவ்விதமாய் ரத்துச்செய்யப்படக்கூடாததுதானு என்ற கேள்வி இதை வாசிப்போர் மனதில் வரலாம். உதாரணமாக:—

(1) இருவர் ஹிந்து விவாகஞ்செய்திருக்க, புருஷன் அல்லது மனைவி மாத்திரம் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரிக்கும் பக்ஷத்தில், மார்க்கத்தை அநுசரித்த புருஷன் அதை அநுசரிக்காத மனைவியையாகிலும், மார்க்கத்தை அநுசரித்த மனைவி அதை அநுசரிக்காத புருஷனையாகிலும் தள்ளிவிட்டு வேறு விவாகஞ்செய்துகொள்ளலாமா?

(2) ஒருவர் மார்க்கத்தை அநுசரித்து, மற்றவர் அதை அநுசரியாதபோதிலும், அநுசரியாதவர் சம்மதித்தால், அநுசரித்தவர் அநுசரியாதவரோடுகூடி வாழலாமா?

1 கொரி. 7-ல் பரி. பவுல் இவ்விஞக்களுக்கு விடை கூறுகிறார்:—

"சகோதரன் ஒருவனுக்கு அவிசுவாசியான மனைவி இருந்து, அவள் அவனோடு கூடிவாழச் சம்மதித்தால், அவன் அவளைத் தள்ளிவிடக்கூடாது" (வா. 12).

"அப்படியே, ஒரு ஸ்திரீக்கு அவிசுவாசியான புருஷன் இருந்து, அவன் அவளோடு கூடிவாழச் சம்மதித்தால், அவள் அவனைத் தள்ளிவிடக்கூடாது" (வா. 13).

"ஏனெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவியும் அந்தச் சகோதரனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். மற்றப்படி உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருப்பார்கள். இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கிறார்கள்" (வா. 14).

"ஆயினும், அவிசுவாசி நீங்கிப்போனால் போகட்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்கள் அல்ல, சமாதானமாயிருக்கும்படி கடவுள் நம்மை அழைத்திருக்கிறார்" (வா. 15).

"மனைவியே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்?" (வா. 16).

இவ்வசனங்களே இவ்விஷயத்தில் திருச்சபைச் சட்டங்களுக்கு ஆதாரம். இவற்றை இங்கு தெளிவுற விவரிப்போம்:—

(1) கிறிஸ்து மதத்தில் சேரும் ஒருவன், மார்க்கத்தில் சேருமுன்னதாகச் செய்துகொண்ட விவாக சம்பந்தத்திலேயே நிலைத்திருப்பது நியாயம். இருவரும் ஞானஸ்நானம் பெறும்போது அந்த ஞானஸ்நானம் அவர்கள் விவாகத்தைக் கிறிஸ்தவ விவாகமாகப் பரிசுத்தமாக்குகிறது.

(2) புருஷன் கிறிஸ்தவனாகி மனைவி கிறிஸ்தவளாகாவிட்டாலும், அல்லது மனைவி கிறிஸ்தவளாகி புருஷன் கிறிஸ்தவனாகாவிட்டாலும், பழைய விவாக சம்பந்தத்தில் அவர்கள் இன்னும் நிலைத்திருப்பதே சரி.

(3) கிறிஸ்தவனாகாத புருஷன் கிறிஸ்தவளான மனைவியோடு வாழச் சம்மதிக்காதிருக்கும்பக்ஷத்தில்—அல்லது, கூடி

வாழச் சம்மதித்தபோதிலும், மனைவி தன் பக்தியை மறுதலிக்கும்படி அவன் அவளைக் கட்டாயம்பண்ணும்பக்ஷத்தில், அல்லது, கூடிவாழச் சம்மதித்தாலும் சன்மார்க்கத்துக்கு விரோதமான கிரியை செய்யும்படி அவளை அவன் கட்டாயம்பண்ணும் பக்ஷத்தில்—மனைவி பிரிந்துபோகலாம், மறுவிவாகமுஞ் செய்துகொள்ளலாம். இவ்விஷயத்தில் எவ்வித குற்றமுமில்லை. இவ்வித விவாகத்தை ஆலயத்தில் குருமார் நிறைவேற்றுவதில் தப்பிதமில்லை. ஆனால் சர்க்கார் கோர்ட் மூலமாய் விடுதலை பெற்றுக்கொள்ளவேண்டிய தவசியம் (அநுபந்தம் I, பிரிவு 10, 11 பார்க்க).

(4) கிறிஸ்தவனல்லாத புருஷன் கிறிஸ்தவளான மனைவியுடன் கூடிவாழச் சம்மதித்து, மார்க்கத்தை மறுதலிக்கும்படி அவளைக் கட்டாயம்பண்ணாமலும், சன்மார்க்க நெறி தவறும்படி அவளைப் பலவந்தம்பண்ணாமலுமிருப்பானாகில், அவனோடு கூடிவாழ்வது விசுவாசியின் கடமை.

(5) ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி, அவிசுவாசியோடு விவாகசம்பந்தத்தில் ஞானஸ்நானத்துக்குப் பின்னும் கூடிவாழ்கில், அது கிறிஸ்தவ விவாகத்துக்குச் சரியாகிவிட்டது; அதற்குப்பின் ஒருபோதும் பிரிந்துபோகக்கூடாது.

(6) இவ்வாறு, ஞானஸ்நானம் பெற்ற பின்னர் இருவர் சிறிதுகாலம் கூடிவாழ்ந்து, அப்பால் அவிசுவாசி நீங்கிவிடில், விசுவாசி மறுவிவாகஞ் செய்துகொள்ளக்கூடாது. பிரிந்துபோன அவிசுவாசி மரித்தபின்பே இவ்வைக்கியம் ரத்தாகும். ஆயினும், அந்த அவிசுவாசி வேறு விவாகஞ்செய்து பிள்ளைகள் பெற்று, புறமத ஆசாரப்பிரகாரம் வாழ்ந்தால், விசுவாசி மறுவிவாகஞ்செய்ய இடங்கொடுக்கப்படும். இதைப்பற்றி அந்தந்தக் கண்டத்து அத்தியக்ஷரிடத்தில் ஆலோசனை கேட்கவேண்டும்.

(7) ஞானஸ்நானம் பெறுவதற்குமுன் குலக்கட்டுப் பிரகாரம் இருவர் தங்கள் விவாக சம்பந்தத்திலிருந்து பிரிந்துகொண்டால், அந்நேரமுதல் இருவரும் விடுதலை பெறுகிறார்கள். இவர்கள் மறுவிவாகஞ்செய்துகொள்ளலாம். இவ்வித விடுதலை அடைந்தபின்பே ஞானஸ்நானங்கொடுப்பது நன்று. மற்றப்படி, கோர்ட்டின் மூலமாய் விடுதலை பெறவேண்டியதாகும்.

(8) கிறிஸ்து சபைக்கு வெளியே ஆரம்பித்த விவாக சம்பந்தத்தில் ஞானஸ்நானத்துக்குப் பின்னரும் ஒருவர் நிலைத்திருக்கலாம் என்ற பிரமாணம், ஒரே புருஷன்—ஒரே மனைவி என்ற பிரமாணத்துக்குட்பட்ட விவாகத்துக்கே செல்லும்; பல புருஷரை வைத்துக்கொள்ளும் ஓர் ஸ்திரீயோடு கிறிஸ்தவ புருஷன் ஒருவன் வாழலாகாது; ஆனால், பல மனைவிகள் வைத்திருக்கும் ஓர் புறமத புருஷனைவிட்டு ஸ்திரீ பிரிந்து போக விரும்பினால், பிரிந்து மறுவிவாகஞ் செய்துகொள்ளலாம். கூடி வாழவேண்டுமானாலும் வாழலாம்.

இப்பிரமாணங்கள் கடந்த ஆறு நூற்றாண்டுகளாக உலகமெங்கும் அநுசரிக்கப்பட்டு வருகிறது. இந்திய திருச்சபையின் பிரமாணமும் இதுவே.

விவாக சம்பந்தம் பரிசுத்த சம்பந்தம். ஆகையால், பால்ய சபையாகிய இந்திய திருச்சபையில் அதைப் பழுதற்றதாகக் காத்துக்கொள்ளுவது நம் கடமை. திருச்சபை தகுந்த முகாந்தரமில்லாமல், ஏதோ ஓர் தேசத்தின் பிரமாணங்களை ஆதாரமாக வைத்துத் தன் விவாகச் சட்டத்தை உண்டாக்காமல், வேதவாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு, கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு க்ஷேமமும் சன்மார்க்கத்துக்கு அநுகூலமுமாயிருப்பவைகளையே சட்டமாக ஸ்தாபித்திருக்கிறது. திருச்சபைச் சட்டங்களைப் படிப்பதும், அச்சட்டங்களுக்கு ஆதாரமென்ன என்று விசாரிப்பதும், அவைகளுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவதும் பக்தர் கடமை.

திருச்சபைச் சட்டம்

(2) விவாகச் சடங்குக்குரிய விதிகள்

விவாகஞ்செய்யும் இருவர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களோ அந்தச் சமுதாயத்தின் மதிப்பைப் பெறப் பாத்திரராக வேண்டுமாகில், விவாகம் எவ்வாறு நிறைவேற்றப் பெறவேண்டுமென்று குறிப்பிட அச்சமுதாயத்துக்கு பாத்தியதை உண்டென்று சொன்னோம் (பக்கம் 7, 8-ல் காண்க).

விவாக சம்பந்தத்தைக் கிறிஸ்துமார்க்கத்துக்கேற்றதாகக் காத்துக்கொள்ளும் நோக்கமாய், விவாகச் சடங்குக்குரிய பல விதிகளைக் கிறிஸ்து சபை காலாகாலத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. கிறிஸ்தவ விவாகத்துக்கு இவை அத்தியாவசியம்.

1. சம்மதம்.—கிறிஸ்தவ விவாகச் சடங்கில் மாப்பிள்ளை பெண் தங்கள் சம்மதத்தைப் பகிரங்கமாய்த் தெரியப்படுத்த வேண்டும் என்பது முதல் விதி. இது புதிய ஏற்பாட்டில் கண்ட விதியல்ல, இயேசுநாதர் அளித்த விதியுமல்ல, எனினும் இயற்கைப் பிரமாண விதி என்கலாம். முதலாம் அத்தியாயத்திற் கண்ட நான்காம் விதி இதுவே. ஜீவப்பிராணிகளில் ஆண் பெண் இரண்டும் சம்மதமின்றி கூடுகிறதில்லை. ஆயுள்காலமளவும் நிலைத்திருக்கவேண்டியதும், புத்தி, சித்தம், ஆத்துமா—ஆகிய திரிகரணமும் இசையவேண்டியதுமாகிய உன்னத சம்பந்தம், இருவரும் மனப்பூர்வமாய்ச் சம்மதித்தாலன்றி உண்டாவதெங்ஙனம்? கிறிஸ்துமதம் உற்பவித்த கிழக்குத் தேசங்களில் இப்பிரமாணம் கிடையாது. இது ரோமை ராஜ்யத்துச் சட்டம். ஆயினும், இயற்கைப் பிரமாணத்துக்கும் விவாகத்தின் உன்னத ஸ்திதிக்கும் இவ்விதி இசைந்திருந்தபடியால், திருச்சபையின் விவாகச் சடங்கில் இருவர் சம்மதமும் கேட்பது பூர்வமுதல் விதியாயிற்று.

இதினிமித்தமே, குருவானவர் தம்பதிகள் இருவரிடத்திலும் முதல் முதல் இக்கேள்வி கேட்கிறார்: “நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழ இந்த ஸ்திரீயை உனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு, சுகத்திலும் துக்கத்திலும் இவளை நேசித்து, ஆதரித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர் முகம் பாராமல், இவளுக்கே புருஷனாயிருப்பாயா?”

என்று கேட்க, மணவாளன்: இருப்பேன் என்று சம்மதம் கொடுக்கவேண்டியது. அவ்வாறே பெண்ணைப் பார்த்து: "நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழ, இந்த மனுஷனை உனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, இவனுக்குக் கீழ்ப்படிந்து, பணிவிடைசெய்து, சுகத்திலும் துக்கத்திலும் இவனை நேசித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர் முகம் பாராமல், இவனுக்கே மனைவியாயிருப்பாயா?" என்று கேட்கிறார். அவளும், இருப்பேன் என்று சம்மதம் கொடுக்கிறாள். அதன்பின்னரே அவர்கள் கடவுள் முன்னிலையில் குருசாட்சி, சபைசாட்சி வைத்து ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுக்கிறார்கள். அப்பால் மணவாளன் பெண்ணுக்கு திரு மங்கிலியம் தரிப்பிக்கிறான். அவளும் அதை ஏற்றுக்கொண்டு தரித்துக்கொள்ளுகிறாள். இச்சம்மதம் அவ்விருவரையும் புருஷன்–மனைவியாக்கிவிட்டதென்று குருவானவர் அதன்பின் விளம்பரம் பண்ணுகிறார்.

சிறிது காலத்துக்குமுன் தமிழ்ச் சபை ஒன்றில் விவாக ஆராதனை நடக்குங்கால், "சம்மதிக்கிறாயா?" என்ற கேள்விக்கு, பெண் "சம்மதிக்கமாட்டேன்" என்று விடையளித்ததாம். குருவானவர் உடனே ஆராதனையை நிறுத்தி, உடுப்பறைக்குச் செல்லவே, இனத்தார் கண்டிப்புச் செய்ததின்பேரில், அந்தப் பெண் அழுதழுது, "சம்மதிக்கிறேன்" என்று விம்மி விம்மிச் சொன்னதாம். அதே இரவில் வீட்டை விட்டு ஓடிப்போய் விட்டதாம். அப்பெண்ணுக்கு உள்ளான சம்மதமில்லாததே இதற்குக் காரணம். இவ்வித விவாகங்கள் கிறிஸ்து சபையில் நடப்பது அவமானம். பால்ய விவாகம் நடைபெறும் தேசங்களிலும், ஸ்திரீகளை அந்தர்ப்புறத்தில் அடைத்துவைத்திருக்கும் ஜாதிகளுக்குள்ளும், அறிவீனமே பெண்களுக்கு அணிகலமென்று சொல்லப்பட்ட அநாகரீக காலத்திலும் இவ்வித தாறுமாறுகள் நடைபெறினும், நாகரீகமும் கல்வியும் சுயாதீனமும் விருத்தியாகிவரும் இக்காலத்தில் இவ்வாறு நடப்பது பெற்றோருக்கு அவகீர்த்தி. ஓலை கூறுவதற்குமுன், பெற்றோரும் குருவானவரும் இருவர் சம்மதத்தையும் கேட்டறிவது நன்று. பாடசாலைத் தலைவரும் இவ்விஷயத்தில் உதவிபுரிய வேண்டியவர்கள். மனப்பூர்வமான சம்மதம் கிறிஸ்தவ விவாகச் சடங்கின் முதல் குறிப்பு.

2. பகிரங்கம்.—விவாகச் சடங்கு பகிரங்கமாய் நிறைவேறப் பெறவேண்டும். ஒரு ஸ்திரீயைச் சும்மா சேர்த்துக் கொள்வது விவாகமல்ல. அது வேசித்தனம். பகிரங்கமாக நாலுபேரைச் சாட்சி வைத்து, கிரமப்பிரகாரம் ஓர் ஸ்திரீயை ஒருவன் மணப்பதே விவாகம்.

பகிரங்கமாவதற்காகவே விவாக அறிக்கை கூறப்படுகிறது. இதற்குமுன் அவ்விருவர் வேறே விவாக சம்பந்தத்துக்குள்ளானவர்களோ என்றும், திருச்சபை விலக்கிய இனவழியில் சம்பந்தப்பட்டவர்களோ என்றும் பிரத்தியக்ஷமாவதற்கு இவ்விதி ஏற்பட்டது.

மேலும் ஒருவர் பேரைச்சொல்லி அறிக்கை கூறியிருக்க, பிறிதொருவர் விவாகஞ்செய்துவிடாதபடிக்கு, தம்பதிகளை இனமறிந்தவர்கள் இருக்கும் ஆலயத்திலேயே அறிக்கை வாசிக்கப்படவேண்டுமென்ற விதி பிறந்தது. தம்பதிகளின் சொந்தச் சபையில் அறிக்கை கூறப்படாவிடில், அறிக்கை கூறப்படும் சபையில் அவர்கள் மூன்று வாரம் குடியிருக்க வேண்டுமென்பது விதி.

மேலும், விவாக அறிக்கை செய்யப்பட்ட ஆலயத்திலேயே, அல்லது ஆலயங்களில் ஒன்றிலேயே, விவாகம் நடப்பிக்கவேண்டுமென்பதும் சட்டமாயிற்று. தகாத விவாகங்களையும் முறைகேடான சம்பந்தங்களையும் தடுக்க இவ்வித விதிகள் அவசியமாயின. விவாக அறிக்கையைப்பற்றிய கண்டிப்பான விதிகளுக்கு இதுவே காரணம்.

3. ஆசீர்வாதம்.—கிறிஸ்தவ விவாகத்திற்குத் தம்பதிகள் இருவருடைய சம்மதமும் வாக்கும் மாத்திரமல்ல, குருவானவரின் ஆசீர்வாதமும் அவசியமென்பது வெகுகாலத்துக் கொள்கை. விவாகத்தை நடப்பிக்கிறவர்கள் மாப்பிள்ளையும் பெண்ணுமே. குருவானவர் இதற்கு முக்கிய சாட்சியேயன்றி வேறல்ல. இதனல்தான் குருவானவரின்றி சர்க்கார் சட்டப்படி நடத்தப்படும் விவாகத்தையும் கிரமமான விவாகமாக திருச்சபை எக்காலத்திலும் ஒப்புக்கொண்டுவந்திருக்கிறது. பதிப்பு உத்தியோகஸ்தர் (ரிஜிஸ்ட்ரார்) முன்பாக செய்யப்பட்டாலும் சரி, அதிகாரப்பத்திரம் (லைசன்ஸ்) பெற்ற ஒருவர் முன்பாக நிறைவேற்றப்பட்டாலும் சரி, உப குருவினல் நடத்தப்பட்டாலும் சரி—விவாகம் விவாகமே.

ஆகிலும், திருச்சபையின் பிரார்த்தனையையும் குருவின் ஆசிர்வாதத்தையும் தேடுவது பூர்வமுதல் சபையின் வழக்கம். பரி. இக்னேஷியஸ் (கி. பி. 120) சொல்வதை ஏற்கனவே எடுத்துரைத்தோம்: "விவாகமானது அவரவர் மாம்ச இச்சைக்கேற்றதாகவல்ல, கர்த்தருக்கேற்றதாக இருக்கவேண்டுமாகில், அத்தியக்ஷர் அநுமதிபெற்றே புருஷரும் ஸ்திரீகளும் விவாக சம்பந்தத்தில் பிரவேசிப்பார்களாக" என்கிறார். தெர்த்துல்லியான் (கி. பி. 200): "திருச்சபையினால் இணைக்கப்பட்டு, ஆசிர்வாதத்தினால் முத்திரிக்கப்பட்ட விவாகத்தின் பாக்கியத்தைச் சொல்ல யாரால் ஆகும்? வேறுவிதமாய் விவாகஞ்செய்வது விசுவாசிகளுக்கு நியாயமுமல்ல, தகுதியுமல்ல" என்கிறார். திருச்சபையின் அநுமதியையும் ஆசிர்வாதத்தையும் தேடி விவாகஞ்செய்வது இரண்டாம் நூற்றாண்டிலேயே வழக்கமாயிருந்ததென்பதற்கு இவை போந்த ஆதாரங்கள்.

இந்த ஏற்பாடு இந்துதேச முறைமைக்கும் ஒத்தது. இந்து மார்க்கத்தில், எக்காலத்திலும் விவாகம் ஓர் மதாச்சாரமாகவே நடைபெறுவது விதி. மார்க்க சம்பந்தமான சடங்குகளின்றி இந்துக்களாகிலும், மகமதியராகிலும் விவாகம் நடப்பிக்கிறதில்லை. கிறிஸ்தவர்கள் எவ்வளவு அதிகமாய் இவ்வித பிரமாணத்திற்குட்பட்டவர்கள்! பதிப்பு உத்தியோகஸ்தர் முன்னிலையில் விவாகஞ்செய்வதும், குருவின்றி விவாகத்தை முடித்துக்கொள்ளப் பார்ப்பதும் இந்திய கிறிஸ்தவர்களுக்குத் தகாத வழக்கங்கள். இவைகளை நிறுத்த முயல்வது அவசியம்.

4. தகுந்த வயது.—கிறிஸ்தவ விவாகத்தில் பிரவேசிக்கக் கூடியவர்கள் வயசு வந்தவர்களே. குருமார் நடத்தும் விவாகத்துக்கு இந்திய கிறிஸ்தவ விவாக ஆக்டில் வயது வரை குறிப்பிடவில்லை. தம்பதிகள் 21 வயதுக்குக் கீழ்ப்பட்டிருந்தால் பெற்றோர் சம்மதம் அவசியம் என்பது மாத்திரம் விதி. அப்படியாயினும், சர்தா சட்டம் ஊர்ஜிதத்துக்கு வந்த நாள் தொடக்கி, புருஷனுக்கு 18 வயதும், ஸ்திரீக்கு 14 வயதும் பூர்த்தியாகாவிடில், அவ்விவாகத்தை நடத்துகிறவரும், சிறுமியை விவாகஞ்செய்யும் மாப்பிள்ளையும், அச்சிக விவாகத்துக்கு உதவிசெய்த பெற்றோரும், போஷகரும் சிட்சிக்கப்படுவார்களென்பது சட்டம். ஆகையால் குருமார் இதைக் கவனித்துக்கொள்ளுவது உத்தமம்.

இளவயதில் விவாகஞ்செய்யக்கூடாதென்பதற்கு இரண்டு முக்கிய முகாந்தரமுண்டு. (1) அவ்வளவு சிறு பிராயத்தில் தம்பதிகளுடைய சம்மதம் மனமார்ந்த சம்மதமாயிருப்பது அசாத்தியம். (2) அவ்வித பால்ய விவாகம் பையனையும் பிள்ளையையும் பலவித நோய்களுக்கும் பலவீனத்துக்கும் ஆட்களாக்கிவிடுமென்பது நிச்சயம். நமது தேசத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெறும் சிசு விவாகத்தைக் கண்டித்து, விவாக வயசை உயர்த்தும்படி இந்துதேச மக்கள் பிரயத்தனஞ்செய்யும் இக்காலத்தில், கிறிஸ்தவர்கள் இச்சீர்திருத்தலில் முன்னுக்கு நிற்பதே நியாயம்.

5. மார்க்க ஒற்றுமை.—கிறிஸ்தவ விவாகத்திற்கு மாப்பிள்ளையும் பெண்ணும் கிறிஸ்தவர்களாயிருக்கவேண்டியது அவசியம். வெகுகாலக் கிறிஸ்தவ வழக்கத்தின்படி, ஞானஸ்நானம் பெற்ற இருவர் செய்யும் விவாகத்தையே கிறிஸ்தவ விவாகமாக திருச்சபை ஒப்புக்கொள்ளுகிறது. ஓர் இந்துவும் கிறிஸ்தவனும் செய்துகொள்ளும் விவாகத்தைக் குருவானவர் நடப்பிக்கமாட்டார். பரி. பவுல் இதைப்பற்றிச் சொல்வதை முன்னே சொன்னோம். "அவிசுவாசிகளோடு ஒரே நுகத்தில் விபரீதமாய் இணைக்கப்படாதிருங்கள்; நீதிக்கும் அக்கிரமத்துக்கும் சம்பந்தமேது? வெளிச்சத்துக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியோடு விசுவாசிக்குப் பங்கேது?" என்கிறார் (2 கொரி. 6: 14). புறமத விவாகஞ்செய்வோரைச் சபை சிக்ஷைக்குட்படுத்துகிறதற்கு வேத ஆதாரம் இதுதான்.

அப்படியாகில், கிறிஸ்தவன் என்றால் யார்? மார்க்க அநுசாரி கிறிஸ்தவனல்ல, பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய்த் திருச்சபையில் சேர்ந்தவனே கிறிஸ்தவன். ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஞானஸ்நானம் பெறாதவர்களோடு விவாகத்தில் இணைக்கப்பட்டார்களாகில் அது விவாகமல்ல என்பது திருச்சபைப் பிரமாணம். ஆகிலும், கிறிஸ்து மார்க்க அநுசாரி ஒருவன் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுங்கால், இந்துதேசச் சட்டம் அவனைக் கிறிஸ்தவனாகப் பாவிக்கிறது. அப்படிப்பட்டவனுக்குக் கிறிஸ்தவ விவாகஞ்செய்வது குற்றமல்ல. ஆகிலும், குருமார் இவ்வித விவாகச் சடங்கை நடப்பியார். லைசன்ஸ் பெற்றவர்கள் இதை நடப்பிப்பார்கள்.

7

திருச்சபைச் சட்டம்

(3) இனவழி விலக்கு விதிகள்

பூலோகின்கண்ணுள்ள சகல ஜாதியாரும் சில சில இன முறையிலுள்ளோர் ஒருவரையொருவர் விவாகஞ்செய்யலாகா தென்று விதித்திருப்பதாக முதலாம் அத்தியாயத்தில் சொன் ஞேம் (பக்கம் 6). யூதர் இனவழி விலக்கை இரண்டாம் அத்தி யாயத்தில் படித்தோம் (பக்கம் 12, 13). கிறிஸ்து சபைக்கு இவ்வித விலக்கு விதி உண்டா?

அங்கிலேய சபையின் ஜெப புஸ்தக இறுதியில் ஒரு ரேபிதா உண்டு. "இன்னின்னரை விவாகஞ் செய்யக்கூடா தென்று, வேத வாக்கியங்களினாலும் தேசப்பிரமாணங்களினு லும் கட்டளையிட்டிருக்கிற இனமுறை சம்பந்த விவாக அட்ட வணை" என்பது அதின் முகப்பு மொழி. 'தேசப்பிரமாணம்' என்பது இங்கிலாந்து தேசப்பிரமாணத்தைக் குறிக்கும். இந்த அட்டவணை 1563-ம் ஆண்டில் காந்தர்புரி பிரதம அத்தியக்ஷர் பார்க்கரால் நிர்மிக்கப்பெற்று, 1604-ம் ஆண்டின் கனோன் சட்டங்களில் 99-ம் சட்டமாக விதிக்கப்பட்டது. இதுவே ஆங்கிலேய சபைப் பிரமாணம். பெரிய அக்ஷரத்தில் இதை அச்சிட்டு விளம்பரமாக ஒட்டியிருப்பதை இங்கி லாந்து தேச ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் காணலாம்.

இந்த அட்டவணைக்கு ஆதாரம் பழைய ஏற்பாட்டு ஆகமமே. பதினைந்து முறையில் விவாகம் ஆகாதென்று லேவி. 18-ம், 20-ம் அதிகாரங்களிலும், உபா. 27-ம் அதிகா ரத்திலும் விலக்கியிருக்கிறது. இதை இரண்டாம் அத்தியா யத்தில் எடுத்தெழுதினோம் (பக்கம் 12, 13). ஜெபபுஸ்தக அட் டவணையை இங்கு எடுத்தெழுதுவோம்.

ஒருவன்	ஒருத்தி
1. தன்னுடைய பாட்டியையும்,	1. தன்னுடைய பாட்டனையும்,
2. பாட்டனுடைய மனைவியையும்,	2. பாட்டியினுடைய புருஷனையும்,
3. மனைவியினுடைய பாட்டியையும்,	3. புருஷனுடைய பாட்டனையும்,
4. தகப்பனுடைய சகோதரியையும்,	4. தகப்பனுடைய சகோதரனையும்,
5. தாயினுடைய சகோதரியையும்,	5. தாயினுடைய சகோதரனையும்,

ஒருவன்	ஒருத்தி
6. தகப்பனுடைய சகோதரன் மனைவியையும்,	6. தகப்பனுடைய சகோதரி புருஷனையும்,
7. தாயின் சகோதரன் மனைவியையும்,	7. தாயின் சகோதரி புருஷனையும்,
8. மனைவியின் தகப்பன் சகோதரியையும்,	8. புருஷனின் தகப்பன் சகோதரனையும்,
9. மனைவியின் தாய்ச் சகோதரியையும்,	9. புருஷனின் தாய்ச் சகோதரனையும்,
10. தாயையும்,	10. தகப்பனையும்,
11. தகப்பனுடைய மனைவியையும்,	11. தாயினுடைய புருஷனையும்,
12. மனைவியினுடைய தாயையும்,	12. புருஷனுடைய தகப்பனையும்,
13. மகளையும்,	13. மகனையும்,
14. மனைவியினுடைய மகளையும்,	14. புருஷனுடைய மகனையும்,
15. மகனுடைய மனைவியையும்,	15. மகளுடைய புருஷனையும்,
16. சகோதரியையும்,	16. சகோதரனையும்,
17. மனைவியினுடைய சகோதரியையும்,	17. புருஷனுடைய சகோதரனையும்,
18. சகோதரனுடைய மனைவியையும்,	18. சகோதரியினுடைய புருஷனையும்,
19. மகனுடைய மகளையும்,	19. மகனுடைய மகனையும்,
20. மகளுடைய மகளையும்,	20. மகளுடைய மகனையும்,
21. மகனின் மகன் மனைவியையும்,	21. மகனின் மகள் புருஷனையும்,
22. மகளின் மகன் மனைவியையும்,	22. மகளின் மகள் புருஷனையும்,
23. மனைவியின் மகன் மகளையும்,	23. புருஷனின் மகன் மகனையும்,
24. மனைவியின் மகள் மகளையும்,	24. புருஷனின் மகள் மகனையும்,
25. சகோதரனுடைய மகளையும்,	25. சகோதரனுடைய மகனையும்,
26. சகோதரியினுடைய மகளையும்,	26. சகோதரியினுடைய மகனையும்,
27. சகோதரனின் மகன் மனைவியையும்,	27. சகோதரனின் மகள் புருஷனையும்,
28. சகோதரியின் மகன் மனைவியையும்,	28. சகோதரியின் மகள் புருஷனையும்,
29. மனைவியின் சகோதரன் மகளையும்,	29. புருஷனின் சகோதரன் மகனையும்,
30. மனைவியின் சகோதரி மகளையும்	30. புருஷனின் சகோதரி மகனையும்

விவாகஞ் செய்யக்கூடாது.

இன்னின்ன முறையில் ஒருவன் விவாகஞ்செய்யலாகாதென்று லேவியராகமத்தில்கண்டிருக்கிறதேயொழிய, ஒருத்தி இன்னாரை விவாகஞ்செய்யலாகாதென்று சொல்லப்படவில்லை. ஸ்திரீக்குரிய விதியை முந்தின ஜாபிதாவிலிருந்து கணித்து ஜெப புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. இதிற் கண்ட முப்பது இனவழி விலக்குகளுக்கும் மூலாதாரத்தை இங்கு குறிப்பிடுவோம்.

1–3. சகல இனமுறைகளிலும் மூன்று வரிசைத் தூரம் தகாத சம்பந்தமென்று காண்பதால், ஒருவனுக்கு முன்னுள்ள இரண்டு நேர் வரிசையில் விவாகமாகாதென்று விவரித்திருக்கிறது. ஒருவன் தன் தகப்

பனின், அல்லது தாயின், தாயை விவாகமாடக்கூடா தென்றால், தகப்பனின் தகப்பனுடைய (இரண்டாம்) மனைவியையும், தன் மனைவிக்கு அதே முறையுள்ள பாட்டியையும் விவாகஞ்செய்யக்கூடாதென்பது விதி.

4. லேவி. 18; 12-ல் கண்டிருக்கிறது. ஸ்திரீ பக்கத்திலும் அதே முறையை எடுத்தெழுதி, ஸ்திரீக்கு அதை விலக்கியிருக்கிறது.

5. லேவி. 18: 13.

6. லேவி. 18: 14; 20: 20.

7. இது 6-வது விலக்கை ஒத்தது.

8, 9. ஒருவனுடைய தாய் மாமன் மனைவியாகிய அத்தை லேவி. 20: 20-ல் விலக்கப்பட்டதால், அவன் மனைவியின் அத்தையும், மனைவியின் சிறிய தாயும் விலக்கப்பட்டவர்களே.

10. லேவி 18: 7.

11. லேவி. 20: 11.

12. லேவி. 20: 14.

13. மகள். இதற்கு வேத ஆதாரம் அவசியமன்று லேவி. 18; 7-ல் ஒருவன் தன் தாய்க்கு விலக்கப்பட்டவன். அதினால், ஒருத்திக்கு அவள் தகப்பன் விலக்கப்பட்டவன். அதாவது, ஒருவனுக்கு அவன் மகள் விலக்கப்பட்டவள்.

14. லேவி. 18: 17.

15. லேவி. 18: 15.

16. லேவி. 18: 9.

17, 18. லேவி. 18: 16; 20: 21-ல் ஒருவன் தன் சகோதரனுடைய மனைவியை விவாகமாடக்கூடாதென்று தெரிவித்திருக்கிறது. இதற்கிணையாக ஸ்திரீ பக்கத்து விலக்கு: ஒருத்தி தன் சகோதரியுடைய புருஷனை விவாகமாடக்கூடாதென்பது. ஒருத்தி தன் சகோதரியுடைய புருஷனை விவாகஞ்செய்யக்கூடாதென்றால், ஒருவன் தன் மனைவியின் சகோதரியை விவாகஞ்செய்யக்கூடாதென்பது தெளிவு. இதுவே 17-ம், 18-ம் விலக்குகள்.

19. லேவி. 18: 10.

20. லேவி. 18: 10.

21–24. முதல் மூன்று விலக்குகளைப்போலொத்தவை. அவை மேலுள்ள இரண்டு வரிசை; இவை கீழுள்ள இரண்டு வரிசை. 23-ம் இனமும் 24-ம் இனமும் லேவி. 18: 17-ல் விலக்கப்பட்டுள. 2-ம், 3-ம் ஸ்திரீ பக்கத்து விலக்குகளை மாற்றிக் கணித்தால், 21-ம், 22-ம் புருஷர் பக்கத்து விலக்குகள் வரும்.

25, 26. 4-ம், 5-ம் ஸ்திரீ பக்கத்து விலக்குகளும் இவையும் ஒன்றே. இவை லேவி. 18: 12, 13-லிருந்து வரும் விலக்குகள்.

27. இதுவும், ஸ்திரீ பக்கத்து 7-ம் விலக்கும் ஒன்றே. லேவி. 20: 20-லிருந்து கணிக்கப்பட்ட விலக்கு இது.

28. இதுவும், ஸ்திரீ பக்கத்தில் கண்ட 9-வது விலக்கும் ஒன்று.

29. இதுவும், ஸ்திரீ பக்கத்தில் கண்ட 6-வது விலக்கும் ஒன்று.

30. இதுவும், ஸ்திரீ பக்கத்தில் கண்ட 7-வது விலக்கும் ஒன்று.

கடைசி ஆறு விலக்குகளும் லேவியாகமத்திற் கண்ட விலக்குகளை ஸ்திரீ பக்கத்துக்குச் சரிப்படுத்தியபின், அவற்றிலிருந்து வந்த நேர் பலன்கள்.

மேற்கண்ட அட்டவணையிலிருந்து சில பிரமாணங்கள் வெளியேறுகின்றன.

(i) மூன்றுபடிக்கு உட்பட்ட இருவர் ஒருவரையொருவர் விவாகஞ்செய்யலாகாதென்பது பிரமாணம். நாலுபடி தூரமானவர்களும், அதற்கு அதிகத் தூரமானவர்களும் ஒருவரையொருவர் விவாகஞ்செய்துகொள்ளலாம்.

இனமுறையில் படி கணிக்கிறது எவ்வாறென்று இங்கு விவரிப்போம். ஒருவனுடைய பாட்டி இரண்டு படி தூரம்: ஒருவனிலிருந்து அவன் தகப்பன் ஒரு படி; அந்தத் தகப்பனுடைய தாய் இரண்டாம் படி.

சகோதரி மகள் மூன்று படி தூரமானவள். ஒருவனி லிருந்து அவன் தகப்பன் ஒரு படி; அவன் மகள், அதாவது சகோதரி இரண்டாம் படி; அவள் மகள் மூன்றும் படி தூரம்.

தாயின் சகோதரன் மூன்று படி தூரம். ஒருத்தியி லிருந்து அவள் தாய் ஒரு படி; தாயின் தகப்பன் இரண்டாம் படி; அவன் மகன் (அதாவது, அவள் தாயின் சகோதரன்) மூன்றும் படி.

மூன்று படி தூரத்துக்கு மிஞ்சிய எவரோடாவது விவாக சம்பந்தத்தை விலக்கவில்லை. உதாரணமாக: ஒருவனுடைய தாயின் சகோதரன் மகள் எத்தனை படியெனின்: ஒருவனி லிருந்து அவன் தாய் ஒரு படி; அவள் தகப்பன் இரண்டாம் படி; அத்தகப்பன் மகன், அதாவது தாயின் சகோதரன், மூன்றும் படி; அச்சகோதரன் மகள் நான்காம் படி தூரம். இவர்கள் ஒருவரையொருவர் விவாகஞ்செய்துகொள்ளலாம். இருவருக்கும் பொதுவாயுள்ள முற்பிதாவிலிருந்து, ஒவ்வோர் இனத்தையும் கணக்கிடுவதே பிரமாணம்.

(ii) இரத்த சம்பந்தமும், விவாகத்தினலுண்டான இன மும் ஒரே தூரமாகக் கணிக்கப்படும்.

ஒருவனுடைய குமாரத்தி இரத்த சம்பந்தமான முறை. ஒருவனுடைய மனைவியின் குமாரத்தி (அதாவது மனைவிக்கு முந்தின புருஷனல் பிறந்தவள்) விவாகத்தினலுண்டான இன முறை. லேவியராகம அட்டவணையில் விலக்கப்பட்ட பதி நாலு முறைகளில், ஏழு இரத்த சம்பந்த இனமுறை. மற்ற ஏழும் விவாகத்தினல் வந்த இனமுறை. "அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி. 2: 24) என்ற பூர்வ விதியை இவ்வாறு நிலைநிறுத்தியிருக்கிறது.

(iii) ஒரே வீட்டில் வளருகிறவர்களும், ஒரே வீட் டில் வசித்துப் பழகிவந்தவர்களும், ஒருவர் பாதுகாப்பி லிருக்கவேண்டியவர்களும் ஒருவரையொருவர் விவாகஞ் செய்யலாகாது. இப்பிரமாணம் இவ்வட்டவணையிற் காணும் பல விலக்குகளுக்கு மூல நியாயம். "யார் யார் சிறு பிராயமுதல் ஒரே வீட்டில் வசித்து, ஒரே அறையில் படுத்து, ஒரே முற்றத்தில் விளையாடி வளருகிறார்களோ, அவர்களுக்குள் விவாக சம்பந்தம் தகாது என்பது விதி. குடும்பத்தில் கற்பைக் காத்துக்கொள்ளுவதே இவ்விதியின்

நோக்கம். அவ்விதி இல்லாவிடில், குடும்பத்துக்குள் சீர்கே
பிரவேசியாமல் காப்பது அரிது" என்று சாஸ்திரி ஒருவ
எழுதுகிறார்.[1]

நம் தேசத்தில் சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகளை
விவாகஞ்செய்யலாகாதென்பதற்கும், அத்தை மகளை, மாம
காணலாம். ஒருவனுடைய சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளை
கள் ஒரே பண்ணைவீட்டில் வளருகிறவர்கள். அண்ணன்
தங்கை என்பதே அவர்களுக்கு முறை. தகப்பனோடு பிறந்
அத்தையோ வேறு வீட்டுக்குப் போனவள். அவள் பிள்ளை
களும் அவள் சகோதரன் பிள்ளைகளும் ஒன்றாய் வளர்பவர்க
ளல்ல; ஆனதுபற்றி, இவ்விரு சம்பந்தங்களும் நாலு படி
தூரமாயினும், ஒன்றை ஜனசமுதாயம் ஒப்புக்கொள்ளுகிறது
மற்றதை நிஷேதிக்கிறது.

மேலே எடுத்தெழுதிய அட்டவணையில் இரண்டு விலக்கு
களை நம் தேசத்தார் பலர் ஆக்ஷேபிப்பதுண்டு. அவ்விரண்டும்
ஹிந்துமக்களில் பல ஜாதிக்குள்ளும் சகஜமான விவாக
சம்பந்தம். அவை எவையெனில், (1) சகோதரி மகள்,
(2) காலஞ்சென்ற மனைவியின் சகோதரி.

1. சகோதரி மகள்

ஒருவன் தன் சகோதரியின் மகளை விவாகமாடக்கூடா
தென்பது 26-ம் விலக்கு. ஒருத்தி தன் தாயின் சகோதரனை
விவாகஞ்செய்யக்கூடாதென்பது 5-ம் விலக்கு.

இச்சம்பந்தம் மூன்று படி தூரமான சம்பந்தம் என்று
சொன்னோம். அதாவது, இது சமீப இரத்த சம்பந்தமான
இனமாதலால் தகாதென்று ஏற்பட்டது. நம் தேசத்தில்
என் ஹிந்துக்களுக்குள் இவ்விவாகம் அங்கீகாரமானதெனின்,
ஸ்திரீதனம், பரிசம் முதலிய கொடுக்கல் வாங்கல் காரணத்
தினாலேயே என்று யூகிக்கலாம். ஒரு வீட்டில் ஒரு பெண்
விவாகமாகிப் போகும்போது பல ஆபரணாதிகளை ஸ்திரீதன
மாகக் கொண்டுபோய்விடுகிறாள். அவள் புத்திரியை அவள்
சகோதரரில் ஒருவனுக்குக் கொடுத்தால், முன் அவ்வீட்டை

[1] Hastings, Art. Marriage

விட்டுப்போன தனம் திரும்பவும் வீடுவந்து சேருமாதலால் இவ்விவாகத்தை ஜனங்கள் விரும்புவதுண்டு.

எனினும், ஒருவர் யாரைப் பாதுகாத்துப் போஷிக்க வேண்டியவர்களோ அவர்களை விவாகஞ்செய்யலாகாதென்ற விதிக்கு இது விரோதம். சகோதரி மரித்தால் அவள் பிள்ளைகள் தங்கள் தாய்ப்பாட்டன் பாட்டி இருக்கும் வீட்டுக்கு, மாமன் பாதுகாப்புக்குள் வர நேரிடுவதால் இதை விலக்கியிருக்கிறது.

நமது தேசத்தில் பல வகுப்பார் இவ்விவாகத்தை ஒப்புக்கொள்ளுகிறதினால் இவ்விஷயத்தில் திருச்சபை தன் சட்டத்தை மாற்றலாகாதா என்று சிலர் கேட்பதுண்டு. தேசாசார ஒழுக்கத்துக்கிசைய, வேதப்பிரமாணத்தையும் திருச்சபைச் சட்டத்தையும் மாற்றுவது நியாயமாகாது. நியாயத்தைக் கவனித்து தேச வழக்கத்தை மாற்றுவதே உசிதம்.

முதலாம் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களுக்கு இது சற்று பாரமான விதியாய்த் தோன்றலாம். இது காரணத்தால், கிறிஸ்தவ சபைகள் சில சகோதரி மகள் சம்பந்தத்தை அங்கீகரிக்கிறார்கள். இந்தியா, பர்மா, இலங்கைச் சபையின் ஒழுங்கு என்னவெனில், முதலாம் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் எவராயினும் இவ்வித விவாகம் நிறைவேற்ற இஷ்டப்பட்டால், ஒவ்வொரு வேண்டுகோளையும் அத்தியக்ஷர் பரீட்சித்து, தன் விசேஷ உத்தரவு அளிக்கலாம். ஏனெனில், சில குலத்தோர் கிறிஸ்தவர்களாகுமுன் இவ்வித இனவழியில் விவாகஞ்செய்திருக்கலாம், இன்னுஞ் சிலர், கிறிஸ்தவர்களாகுமுன்னேயே தங்கள் பிள்ளைகளுக்கு இவ்வித விவாக ஒழுங்குசெய்திருக்கலாம்; வேறு சிலர், இவ்வித விவாக சம்பந்தத்தை நிச்சயித்து எதிர்பார்த்திருக்கலாம். இப்பேர்ப்பட்டவர்களுக்கு இப்பிரமாணத்தினிமித்தம் இடையூறு விளையாதபடி, அந்தந்த அத்தியக்ஷர் அவசரத்துக்குத்தக்கதாக உத்தரவு அளிக்கலாம் என்பது தற்கால (1940) ஏற்பாடு.

2. காலஞ்சென்ற மனைவியின் சகோதரி

மேலேகண்ட அட்டவணையில் விலக்கியிருக்கிற இனமுறைகளில் இதுவும் இந்துதேசத்தில் சாதாரணம், இதையும் இத்தேச சபை அங்கீகரிக்கவேண்டுமென்கிறார்கள்.

(i) இந்து தேச வழக்கம்:—தேச வழக்கம் என்பது ஒரு நியாயமாகமாட்டாது. இந்த நியாயத்தை ஒப்புக்கொண்டால், ஆப்பிரிக்காவில் பலதாரம் படைத்தலையும், ஐப்பானில் பரீக்ஷார்த்த விவாகஞ்செய்து இஷ்டமில்லாவிடில் நீங்கிக்கொள்வதையும் திருச்சபை அங்கீகரிக்க வேண்டியதிருக்குமே.

(ii) பிள்ளைகள் பாராமரிப்பு:—பிள்ளைகள் பாராமரிப்புக்கு இவ்விவாகம் அவசியம் என்பாருளர். முதல் மனைவியின் சகோதரியை விவாகம்பண்ணினால், அந்தப் பிள்ளைகளை அச்சகோதரி நன்றாய்ப் பார்த்துக்கொள்ளுவாளென்பார்கள். எல்லார் விஷயத்திலும் இது உண்மையல்ல. சகோதரியல்லாதவள் நன்றாய்ப் பார்க்கிறதும், சகோதரி தன் அக்காள் பிள்ளைகளைக் கண்ணீர் சிந்தப்பண்ணுகிறதுமில்லையோ? பிள்ளைகளின் பொருட்டு தகாத முறையில் கலியாணம் செய்வது நியாயமாகாது.

(iii) குடும்ப பந்தம்:—ஓர் குடும்பத்தில் ஓர் சகோதரியை விவாகஞ்செய்தபின்னர், வேறொரு குடும்பத்துடன் மறு சம்பந்தங்கொள்வதைப் பார்க்கிலும், அதே குடும்பத்தில் இன்னொரு சகோதரியை விவாகஞ்செய்தால் நல்லதென்பார்கள். விவாக சம்பந்தமாய்க் கொடுக்கல் வாங்கல் இருப்பதே இதற்குக் காரணம். ஓர் ஸ்திரீயை ஒருவன் விவாகம் செய்யும்போது, தன் மனைவியின் தாய்—தகப்பனை தன் சொந்தத் தாய்—தகப்பன் போலவும், அவளுடைய சகோதரர்—சகோதரிகளைத் தன் சொந்தச் சகோதரர்-சகோதரிகள்போலவும் பாவித்து நேசிக்கும் ஒருவன் எளிதாய் அச்சம்பந்தத்தை மறந்துவிடுவானோ? விவாகம் வியாபாரமாக இருப்பதினாலும், குடும்பப் பாசம் குறைவாயிருப்பதினாலுமே, மனைவி இறந்தவுடன் அம்மனைவியின் குடும்பத்தோடு சண்டையும் சச்சரவும் கணக்குவழக்குமாகிவிடுகிறது. இது கிறிஸ்து மார்க்கத்திற்கு அவமானம். விவாகத்தின் திவ்விய தன்மையை நினைத்து, பரிசுத்த அன்புடன் குடும்பங்கள் சம்பந்தப்படுமாகில், அவ்வன்பு ஒருநாளும் நீங்காது. குடும்பங்களின் சம்பந்தம் நீங்காதிருக்கத் தக்கதாக, சபைச் சட்டத்தை மீறுவது நியாயமன்று.

கொழுந்தி விவாகம் ஏன் தப்பிதம்?

1. பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்துக்கு இது விரோதம்.

லேவி. 18: 16-ல் ஒருவன் தன் சகோதரனுடைய மனைவியை விவாகஞ்செய்யக்கூடாதென்று விதித்திருக்கிறது. அதுபோல, ஒருத்தி தன் சகோதரியின் புருஷனையும் விவாகஞ்செய்யக்கூடாது. இதுதான் கொழுந்தி விவாகம். மேலே கண்ட அட்டவணையில் புருஷன் பக்கத்தில் பதினேழாம் விலக்கும், ஸ்திரீ பக்கத்தில் பதினெட்டாம் விலக்கும் ஒன்றே.

பழைய ஏற்பாட்டு விதிகள் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டியதில்லையென்று யாதாமொருவர் ஆக்ஷேபித்தாலும் ஆக்ஷேபிக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு இது ஓர் பெரிய நியாயமாகமாட்டாது.

2. பூர்வ திருச்சபை வழக்கத்துக்கும் சட்டத்திற்கும் இது விரோதம்.

முதல்மூன்று நூற்றாண்டுகளிலும் இதைப்பற்றியகுறிப்பு திருச்சபைச் சரித்திர நூல்களில் இல்லை. கி. பி. 305-ல் எல்வீரா என்ற இடத்தில் நடந்த ஓர் சங்கத்தில், "ஒருவன் தன் மனைவியின் சகோதரியை விவாகஞ்செய்தால் ஐந்து வருஷம் தபசு செய்யவேண்டும்" என்பது விதியாயிற்று.

கி. பி. 315-ல் நடந்த ஓர் கவுன்சலில், "ஒரு ஸ்திரீ இரண்டு சகோதரரை ஒருவர்பின் ஒருவராக விவாகஞ்செய்தால், அவள் மரணபரியந்தம் நற்கருணையிலிருந்து விலக்கப்படக்கடவள்" என்பது ஓர் தீர்மானம்.

கி. பி. 374-ல் எழுதின பரி. பேசில்: "இரண்டு சகோதரிகளை ஒருவர்பின் ஒருவராக விவாகஞ்செய்தவன் அதை விவாகமாக எண்ணக்கூடாது. அவர்கள் பிரிந்துபோகும் பரியந்தம், சபைகூடிவரும் இடத்திற்கு அவர்களை வரவிடக்கூடாது. அவர்கள் ஏழு வருஷம் தபசு செய்யவேண்டும்" என்றெழுதினர்.

இது முதல், மேற்குச் சபையிலும் கிழக்குச் சபைகளிலும் கூடின சகல சங்கங்களிலும் இவ்விவாகம் கண்டிக்கப்பட்டது. உ-ம். கி. பி. 525-ல் நடந்த கிளேர்மான்ட் கவுன்சலில், "ஒருவன் தன் மனைவியின் சகோதரியையாவது, வேறு சமீப பந்துக்களையாவது விவாகஞ்செய்தால், அவன் ஆயுள்கால பரியந்தம் சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்கப்படக்கடவன்" என்பது

12-ம் கனோன் சட்டம். இப்பூர்வ சபைச் சட்டங்களைப்பற்றி நமக்குக் காரியமில்லையென்று யாராகிலும் சொன்னாலும் சொல்லலாம். ஆகிலும், நாலாம் நூற்றாண்டு முதல் திருச்சபையின் வழக்கமும் அபிப்பிராயமும் இச்சம்பந்தத்தை விலக்கியிருக்கிறதென்பதற்கு இவை அத்தாட்சி.

3. பூலோகமெங்குமுள்ள அத்தியக்ஷ சபைகளின் வழக்கத்துக்கு இது விரோதம்.

கிழக்கத்திச் சபைகளில் இவ்விவாகம் கிடைக்கவே கிடையாது. ஆதிமுதல் இதுவரை, கிரேக்கச் சங்கங்களும் அவைகளோடு சம்பந்தப்பட்ட கீழ்ச் சபைகளனைத்தும் விவாக ஏற்பாடுகளில் வெகு கண்டிப்பாயிருக்கின்றன.

சூரியானிச் சபைகள் பிரமாணமும் இப்படியே. பத்தொன்பது நூற்றாண்டுகளாகத் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானங்களில் கிறிஸ்தவர்களாயிருக்கிற அவர்கள், மாமன்—மருமகள் விவாகமாவது, அத்தான்—கொழுந்தி விவாகமாவது அறியார்கள். இவை அருவருப்பாக அக்கிறிஸ்தவர்கள் எண்ணுவார்கள். திருவாங்கூர் அத்தியக்ஷாதீனத்திலுள்ள பூர்வ கிறிஸ்தவர்களுக்காவது, அச்சபையில் தற்காலத்தில் சேர்ந்த புதுக் கிறிஸ்தவர்களுக்காவது இவ்வழக்கமில்லை.

ரோமான் சபையிலும் இதுவே பிரமாணம். ஆனால், தனவந்தர்களும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் அத்தியக்ஷர்களிடமிருந்து விடுதலைப் பத்திரம் வாங்கிக்கொள்ளலாம். இவ்வித விடுதலைப் பத்திரத்தினால், ரோமான் சபையின் கண்டிப்பான சில விதிகள் பலிதமற்றுப்போகின்றன.

ஆங்கிலேய சபைப்பிரமாணம் இவ்விவாகத்திற்கு விரோதமாகவே இருக்கிறது.

ஜெப புஸ்தகத்தின் கடைசிப்பக்கத்திலிருக்கிற அட்டவணையானது 1604-வது வருஷக் கனோன் சட்டத்தில் 99-வது விதி. இதை ஒருநாளும் எவராகிலும் ரத்துச்செய்ததில்லை.

இங்கிலாந்து தேசச் சட்டமும் வெகுகாலம் இப்படியே இருந்தது. கொழுந்தி விவாகம் விவாகமல்ல; அதில் பிறந்த பிள்ளைகள் விவாகத்தில் பிறந்தவர்களாக எண்ணப்படக்கூடாதென்பதே 1907-ம் வருஷம் வரைக்கும் ராஜாங்கச் சட்டம். அவ்வாண்டில், ஒருவன் சர்க்கார் மேரையாய், அதாவது

ரிஜிஸ்ட்ரார் முகரூபில், தன் கொழுந்தியாரை விவாகஞ்செய்து கொள்ளலாம் என்று விதிக்கப்பட்டது. ஆயினும், திருச்சபைச் சட்டம் இதனால் மாறிப்போகவில்லை.

இங்கிலாந்து தேசச்சட்டம் இந்தியாவிலுள்ள சுதேச கிறிஸ்தவர்கள் விஷயத்தில் செல்லமாட்டாது. இந்திய கிறிஸ்தவர்கள் "இந்திய கிறிஸ்தவ விவாக ஆக்ட்" என்ற சட்டத்தின்கீழ் இருக்கிறார்கள். இனவழியைப்பற்றி அச்சட்டத்தில் ஒன்றும் சொல்லப்படாதிருந்தும், 88-ம் செக்ஷன்படி, இந்திய கிறிஸ்தவர்கள் தங்கள் தங்கள் சபைச் சட்டத்தின் கீழிருக்கிறார்கள். கொழுந்தி விவாகம் ஓர் சபையில் விலக்கப்பட்டிருக்குமானால், அச்சபையிலிருப்பவர்களுக்கு அவ்விவாகம் குற்றம். இன்னோர் சபையில் அது இடங்கொடுக்கப்படுமானால், அச்சபையிலிருப்பவர்களுக்கு அவ்விவாகம் கிரமம். இதினாலேயே சுயாதீனச் சபைகளைச் சேர்ந்த போதகர் சிலர் இவ்வித விவாகங்களைத் தாராளமாய்ச் செய்துவிடுவதுண்டு.

4. இயற்கைப் பிரமாணத்துக்கு இது விரோதம்.

கொழுந்தி விவாகம் சுதேச கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஏன் தகாதென்று இன்னும் கேட்டால், நமது கிறிஸ்தவ சமுதாயத்திற்கு அது அழகல்ல என்பதே நாம் சொல்லும் நியாயம். மேற்கண்ட சகல நியாயங்களைப்பார்க்கிலும் முக்கிய நியாயம் இதுவே.

இன்னின்னாரை விவாகஞ்செய்யக்கூடாதென்ற பிரமாணத்துக்கும் மூல நியாயம் என்னவெனில், ஒரே வீட்டில் வளருகிறவர்களும், ஒரே குடும்பத்துக்குள்ளானவர்களும் விவாகம் செய்யலாகாது என்பதே. குடும்பம், வீடு என்பது கற்புக்குக் கோட்டை. அதற்குள்பட்டவர்களுக்குள் புருஷன்-மனைவி சம்பந்தம் அருவருப்பு.

ஒருவன் தன் சகோதரியை ஏன் விவாகம் செய்யக்கூடாதென்று கேட்பின், அவன் தன் சகோதரியோடு ஒரே வீட்டானாயிருப்பதே அவ்விலக்குக்குக் காரணம். தாய், பிள்ளை, சகோதரன், சகோதரி முதலியோர் குடும்பத்துக்குள்ளானவர்களாதலால் இவர்களுக்குள் விவாகசம்பந்தம் அருவருப்பு. இது மானிட புத்தியில் நாட்டப்பட்ட சுபாவ விதி. ஒரே வீட்டில் உண்டு, உடுத்து, படுத்து எழுந்திருக்கவேண்டிய

வர்கள் ஒருவரையொருவர் விவாகம்பண்ணலாகாது; இவ்வித சம்பந்தமில்லாதவர்கள் ஒருவரையொருவர் விவாகம் பண்ணத்தகும்.

இந்து தேசத்தின் விவாக வழக்கங்களில் இவ்விதியைக் கவனிக்கலாம்:—

(1) இரு சகோதரர் பிள்ளைகள் ஒருவரையொருவர் விவாகஞ்செய்யலாகாதென்கிறார்கள். காரணமென்னவென்றால், அவர்கள் சிற்றப்பா பெரியப்பா பிள்ளைகள்; அண்ணன், தங்கை என்ற இனமுறையார்; ஒரே முற்றத்தில் வளருகிறவர்கள்.

(2) சகோதரன் பிள்ளைகள் சகோதரியின் பிள்ளைகளை விவாகஞ்செய்யலாமென்கிறார்கள். காரணமென்ன வெனின், ஓர் பெண் தன் சகோதரரை விட்டு வேறு இல்லம் செல்லுகிறாள். இவள் பிள்ளைகளும் இவள் சகோதரர் பிள்ளைகளும் ஒன்றாய் வளருகிறவர்களல்ல.

(3) ஒருவன் தன் சகோதரன் குமாரத்தியை விவாகஞ் செய்யலாகாதென்பார்கள். அவர்கள் ஒரே வீட்டார்.

(4) ஒருவன் தன் சகோதரி மகளை விவாகஞ்செய்து கொள்ளலாமென்பார்கள். ஒருவனுடைய சகோதரி வேறே வீட்டுக்குப் போய்விடுவதால், அவள் பிள்ளைகளுக்கும் அவள் தகப்பன் வீட்டிலுள்ள அவள் தம்பிக்கும் சம்பந்தமில்லாதபடியால், மாமன்—மருமகள் விவாகம் பரவாயில்லை என்பர்.

இதை வேறுவகையாயும் ரூபிக்கலாம். பிராயம் வந்த ஒரு பெண் எந்த வாலிபனோடும் தாராளமாய்ப் பேச இந்துக்கள் இடங்கொடுக்கமாட்டார்கள். இது இந்துதேச மரியாதை. எனினும், எந்தெந்த முறையிலுள்ளவர்கள் விவாகஞ்செய்து கொள்வது முற்றிலும் தகாதோ, அம்முறையிலுள்ளவர்கள் தாராளமாய்ப் பேசிக்கொள்ளலாம். முறையில், அண்ணன் தம்பி, சின்னையா பெரியையா என்ற சம்பந்தமுள்ளவர்களோடு பெண்கள் தாராளமாய்ப் பேசிக்கொள்ளுவார்கள். அவ்வாறு பேசிக்கொள்ளுவதில் தோஷமில்லை என்பார் பெரியோர். அப்படியே, எங்கே விவாக சம்பந்தம் கூடியதாகுமோ அங்கே பெண்கள் பேசக் கூச்சப்படுகிறதும் வெட்கப்படுகிறதும் முகத்தில் விழிக்காதிருக்கிறதும் ஒழுக்கம். ஓர் பெண் எப்போதாவது ஹிந்து சமுதாயத்தில் தன் அத்தானோடு அல்லது

மைத்துனன் முறையானோடு நேராகக் களங்கமற்றுப் பேசுகிற தில்லை. அவ்வாறு பேசுகிறது அவமரியாதையாக எண்ணப் படும். பிராயம் வந்த ஒரு பிள்ளையை இந்துக்கள் அதின் அக்காள் வீட்டுக்கு ஒருபோதும் அனுப்பமாட்டார்கள். அவ விதமாய் ஒரு பிள்ளை தன் அத்தானோடு பேசிப் பழகுமானால் அது எவ்வளவோ அவமானமாக எண்ணப்படுமென்றறி வோம். இவ்வித ஒழுக்க வழக்கமுள்ளவர்கள் விவாகஞ் செய்துகொண்டாலும் பரவாயில்லையென்கலாம்.

ஆனால், கிறிஸ்தவ வழக்கமோ, இதற்கு முற்றும் வேறு. இந்துக்கள் வழக்க முறைகள் கல்வி கற்றவர்களுக்குள் முற்றி லும் நின்றுபோயிற்று. பிராயமான சகோதரிகள் தங்கள் அக்காள் வீட்டுக்கு ரஜாவுக்குப் போவதும், அத்தானோடும் அக்காளோடும் களங்கமற்றுப் பேசுவதும், உலாவுவதும் சகஜம். சகோதர சகோதரிகள்போல இவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். இது சரி. ஆனால், ஒருதடவை சகோதரி என்ற முறையில் பழகின ஒரு பெண்ணை, பின்னால் மனைவி யாக்குவது தகாது. ஒன்று, மனைவியின் சகோதரி தன் சகோதரி என்றாற்போல் பாராட்டும் வழக்கம் கிறிஸ்தவர் களுக்குள் ஒழியவேண்டும்; அல்லது, கொழுந்தி விவாகம் அரு வருப்பாக எண்ணப்படவேண்டும். எம் அபிப்பிராயத்தைக் கேட்டால், கொழுந்தியைச் சகோதரியாக எண்ணுவது சரி தான். மனைவியின் சகோதரி புருஷனுக்கும் சகோதரியே. ஆனால், இவ்வித சகோதரி பாந்தமும், இதனால் உண்டாகும் அன்பும் சகாயமும் நமக்கு வேண்டுமாகில், விவாக சம்பந்தம் எள்ளளவேனும் நினைக்கத்தகாது. மற்றபடி, வீட்டுக்குள் முறை கேடுண்டாவதற் கிடமாகும்.

தமிழ்ச் சபையில் அங்கங்கே சிற்சிலர் இவ்வித விவாகம் செய்திருக்கிறார்களென்று அறிவோம். சிலர் சபைச் சட்டத் தைப்பற்றித் தகுந்த அறிவில்லாததினால் இவ்வித விவாகத் துக்குட் பிரவேசித்தார்கள். 1907-ம் வருஷம் இங்கிலாந்து தேசத்தில் இவ்வித விவாகத்துக்கு அநுமதி பிறந்ததால் அச் சட்டம் இந்தியாவிலும் செல்லுமென்ற தப்பெண்ணத்தினால் செய்தவர்களும் சிலர் உளர். அச்சட்டம் இந்தியாவில் செல்லா தென்று இப்பொழுது தீர்த்திருக்கிறது. சில சபைகள் இந்த இனவழி விவாகத்தைத் தாராளமாய் நடப்பித்த காரணத்

தினால், இவ்வித விவாகஞ்செய்தவர்களுமுண்டு. எந்தக் காரணத்தினாலுஞ் சரி, இவர்கள் தப்பிதத்துக்குள்ளாகிவிட்டார்கள். இப்படிப்பட்டவர்களைத் திருச்சபை தன் ஐக்கியத்தில் சேர்த்திருக்கிறது.

இங்கிலாந்து தேசச் சட்டம் மாறினதாலும், சுயாதீனச் சபைகள் இதை விலக்காததாலும், அங்கிலேய சபையிலும் இச்சம்பந்தத்தை விலக்கலாகாது என்று வாதிக்கிறவர்கள் உண்டு. இந்தியா, பர்மா, இலங்கைச் சபையில் இவ்விஷயம் 1932-ம் வருஷத்தில் பேசப்பட்டுத் தள்ளப்பட்டது. ஆகவே, கொழுந்தி விவாகம் தகாது என்பதே சபையின் சட்டம். காரியம் இப்படியிருப்பதால், அங்கிலேய சபையைச் சேர்ந்தவர்கள் வேறொரு சபையிலேயோ, விவாக ரிஜிஸ்ட்ரார் முன்னிலையிலேயோ கொழுந்தி விவாகஞ்செய்வார்களாகில், அவ்விவாகம் தேசச்சட்டத்துக்கு விரோதமான விவாகம். திருச்சபை சட்டத்துக்கும் அது விரோதமானதால், சபை சிக்ஷைக்குள்ளாகும் விவாகம் என்பதை மறந்துவிடலாகாது.

எனினும், கிராமக் கிறிஸ்தவர்கள் பழக்கவழக்கங்கள் இன்னும் முற்றிலும் மாறாத காரணத்தினிமித்தமும், மற்றச் சபைகள் இவ்விவாகத்தை விலக்காததாலும், எவராயினும் கொழுந்தி விவாகஞ்செய்ய நினைத்தால் சபைப் பிரதிநிதிகள் சிபார்சின்பேரில் அத்தியக்ஷர் இவ்விதியினின்று விடுதலைப் பத்திரம் கொடுக்கலாம் என்றும், அவ்வாறு விடுதலைப்பத்திரம் பெற்றவர்களுக்கு விவாகச் சடங்கு ஆலயத்தில் செய்யப்படலாமென்றும் நமது அத்தியக்ஷர் சபை விதித்திருக்கிறது. குருமார் இவ்வித விவாகத்தைச் செய்யக் கடமைப்பட்டவர்களல்ல. தங்களுக்கு இஷ்டமானால்மாத்திரம் செய்யலாம். ஆயினும், இவ்வாறு விவாகஞ்செய்பவர்கள் திருச்சபையில் எவ்வித உத்தியோகத்துக்கும் அருகரல்லவென்பதும் சட்டம்.[1]

காரியம் இவ்வாறிருப்பதால், இந்தச் சம்பந்தத்திலும் திருச்சபை விலக்கியிருக்கும் மற்றச் சம்பந்தங்களிலும் நமது ஜனங்கள் விவாகஞ்செய்ய இடங்கொடுக்காதிருப்பது நன்று. இவ்வித சீர்கேடுகள் குடும்ப ஜீவியத்தையும் நல்லொழுக்கத்தையும் கெடுக்கும். இவை தகாதென்று போதிப்பதும், நாளடைவில் இவற்றை முற்றிலும் ஒழிப்பதும் நமது கடமை.

1 அநுபந்தம் 5 பார்க்கவும்.

8

கிறிஸ்தவ இல்வாழ்க்கை ஒழுக்கம்

விவாகத்துக்குரிய இயற்கை விதிகளையும், கிறிஸ்தவ விவாகப் பிரமாணங்களையும், திருச்சபையின் விவாகச் சட்டங்களையும் அநுசரிப்பது அவசியமேயாயினும், இவை அனைத்தையும் அநுசரித்ததினுல்மட்டும் இல்வாழ்க்கையில் மெய்பாக்கியம் பிறக்கமாட்டாது. மேலே கண்ட சகல விதிவிலக்குகளையும் சரிவரக் கைக்கொண்டபின்பும், நிர்ப்பாக்கிய வாழ்க்கை மனுஷரைத் துன்புறுத்துவது கூடும். ஆனதுபற்றி, கிறிஸ்தவ இல்லறம் மெய்ப்பாக்கியம் நிறைந்து இலங்குவதற்கு ஏதுக்களையும், அது நிர்ப்பாக்கியம் நிறைந்து மங்குவதற்குக் காரணங்களையும் இவ்வத்தியாயத்தில் விளக்குவோம்.

இல்வாழ்க்கை சிறந்து விளங்கவேண்டுமாகில்,

1. விவாகஞ்செய்யும் இருவரும் கிறிஸ்தவர்களாயிருத்தல் அவசியம்.

பந்தத்துவத்தினிமித்தமோ, அந்தஸ்தினிமித்தமோ, பணத்தினிமித்தமோ புறமதஸ்த குடும்பங்களில் செய்யும் சம்பந்தங்கள் பெரும்பாலும் நிர்ப்பாக்கியத்தில் முடிவாகும் சம்பந்தங்களே. இவ்வித சம்பந்தங்கள் பூராவாய் நின்றுபோக முயற்சிப்பதவசியம். விவாகத்தின் பொருட்டு ஒரு பிள்ளைக்கு ஞானஸ்நானங்கொடுத்து, சபையில் சேர்த்து, உடனே அறிக்கை வாசித்து விவாகச் சடங்கு நிறைவேற்றும் வழக்கம் அற்றுப்போகவேண்டும்.

2. கிறிஸ்தவ இல்வாழ்க்கையில் மெய்ப்பாக்கியம் விளங்கவேண்டுமாகில், மாப்பிள்ளை—பெண் இருவருடைய மனப்பூர்வமான சம்மதம் இருப்பதவசியம்.

காலஞ் செல்லச் செல்ல, கல்விகற்ற கிறிஸ்தவ வாலிபரும் வாலிபப் பெண்களும் தாங்களே தங்கள் பங்காளிகளைத் தெரிந்துகொள்வது சகஜம். இது நியாயம், உத்தமம். எனினும், நமது தேசவழக்கத்தின்படி, விவாக சம்பந்தமானது அதில் பிரவேசிக்கப்போகிற இருவரையும் மாத்திரமல்ல, இரு

குடும்பங்களையும் நன்றாக இணைக்கும் சம்பந்தமாகையால், வாலிபர், வாலிபப் பெண்கள் இருவரும் சம்மதிக்க, இரகசியமாய் ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுக்க, கல்யாணக் கட்டுக்குட்படுத்துவது பிற்கால இல்வாழ்க்கையில் பெரும்பாக்கியம் விளைவதற்கு அநுகூல முறையன்று. அங்கங்கே வாலிபர் இவ்வாறு செய்யத் தலைப்பட்டு, ஆறாத் துக்கத்துக்காளாகியிருக்கின்றனர். ஒரு வாலிபனுக்கு ஒரு பெண்மீது விருப்பமாகில், அதைத் தன் பெற்றோருக்கு அறிவித்து, அவர்கள் அப்பெண்ணின் பெற்றோரின் இஷ்டத்தையும் பெண்ணின் விருப்பத்தையும் அறிந்து, இவ்வாறு பகிரங்கமான விவாக ஏற்பாடு செய்துகொள்வதே உசித முறை.

சிற்சில பெற்றோரும் இவ்விஷயத்தில் மனம் மாறவேண்டியதவசியம். தங்கள் பிள்ளைகள் தகுந்த வயதும் கல்வியறிவும் தன்னடக்கமுமுள்ளவர்களாகில், அவர்கள் விருப்பங்களை மனப்பூர்வமாய் அங்கீகரித்து, ஏற்ற சம்பந்தமாகக் காணும் பக்ஷத்தில் அதற்குச் சந்தோஷமாய்ச் சம்மதிப்பது அவர்கள் கடன். குடும்பம் பக்தியுள்ள குடும்பந்தானா, வளர்ப்பு நல் வளர்ப்பா, சரீரசுகம் குணம் தகுதியுள்ளவைதானாவென்று கூடியமட்டும் விசாரித்துப் பரீட்சிக்கவேண்டியது அவர்கள் கடமை. வாலிபர் சாதாரணமாக இவற்றைக் கண்டுகொள்வார். ஆனால் குடும்பம் அந்தஸ்து சரியல்லவென்றாவது, குலம் வேறு குலமென்றாவது, ஜாதி விபரீதமென்றாவது, நகை, பணம், கிடைக்காதென்றாவது போதாதென்றாவது தங்கள் பிள்ளைகள் விரும்பும் சம்பந்தத்தைத் தடுப்பது நன்றன்று. இவ்வாறு தடுப்பதினால் துக்கத்துக்குள்ளான பெற்றோரையும் அறிவோம்.

தற்காலத்து அறிவுக்கும் நாகரீகத்துக்குந்தக்கதாக, வாலிபரும் வாலிபப் பெண்களும் சாதாரணமாய், சன்மார்க்கத்துக்கு அநுகூலமான சந்தர்ப்பங்களில் ஒருவரோடொருவர் பழகிக்கொள்வதற்கு அவகாசம் ஏற்படுவது அவசியம். பையன்களும் பெண்களும் ஒன்றாய்க் கல்வி கற்பது நன்று. சிறு பிராயமுதல் இவ்வாறு பழகுவார்களாகில், தற்காலம் அங்கங்கே பாடசாலைகளில் தலைகாட்டும் பல தீமைகள் ஒழிவது நிச்சயம். நமது மிஷன் பாடசாலைகள் பலவற்றில் பெண்களையும் பையன்களையும் பிரத்தியேகமாய் வளர்ப்பதினால்,

இப்பாடசாலைகளில் சிற்சில கேடுகள் மூளைப்பதாகப் பலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஒரே இடத்தில் இவ்வித இரு பாடசாலைகள் இருப்பின், ஏக கல்வி நடைபெறாவிடினும், விளையாட்டுப் போட்டிகள், வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள், தியானக் கூட்டங்கள்—இவைகளை வாலிபருக்கும் பெண்களுக்கும் கூடியவரை ஏகமாய் நடத்துவது நன்று. இவ்விதத் தூய சந்தர்ப்பங்களில் ஒருவரோடொருவர் பழகும் வாலிபரும் பெண்களும், ஒருவரையொருவர் அறிந்துகொள்ளவும் ஒருவரையொருவர் மதிக்கவும் தொடங்குவார்கள். இவ்வித தூய சகவாசத்திலிருந்து சிறப்பான விவாக சம்பந்தங்கள் ஏற்படுவது கூடியது.

3. கிறிஸ்தவ இல்வாழ்க்கை மெய்ப்பாக்கிய வாழ்க்கையாக ஜோலிக்க வேண்டுமாகில், பணத்திற்காக சம்பந்தங்கோள்வது ஒழிய வேண்டும்.

தமிழ், மலையாள தேசங்களில் நாளடைவில் வளரும் ஓர் தீமை இது. ஓர் பெண்ணின் பெற்றார் செயலுள்ளவர்களாகில், தங்கள் ஆஸ்தியில் தகுந்த பாகத்தைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது நியாயம். ஆனால், ஓர் பெண்ணின் பெற்றாருக்கிருக்கும் பணத்தினிமித்தம் பெண்ணை விவாகஞ்செய்வது குற்றம். பெண் பேசும்போதே நகை எவ்வளவு, ரொக்கம் எவ்வளவு என்று கேட்பதும், அதற்காகப் போராடுவதும், ரொக்கத் தொகை கைவந்து சேர்ந்தாலன்றி அறிக்கை வாசிக்கச் சம்மதியோம் என்று வாதிப்பதும் எவ்வளவு பெரிய இழிவு! இவ்வித வாக்குவாதத்தினால் உண்டாகும் சண்டைகள் எத்தனை அனந்தம்! வாக்குச்செய்த தொகையிலாவது ஆபரணதிகளிலாவது குறைவு காண்கில், விவாகமாகி வீட்டுக்கு வந்த பெண்ணோடு அதினிமித்தம் கோபங்கொண்டு, பெண்ணை பெற்றார் வீட்டுக்கு அனுப்பிவிடுவதையும் அறிவோம். தன் பெண்ணை நல்ல இடத்தில் கொடுக்கவேண்டுமென்றே, குமரைக் கரையேற்றிவிடவேண்டும் என்றே கருத்துக்கொண்டு, கடன் பட்டுக் கஷ்டப்படுவோரும் நமக்குத் தெரியும். "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்ற பழமொழி இதைப்பற்றித்தான் உண்டாயிற்றோ? இக்கேடுகள் நிறுத்தப்பட்டாலன்றி, தமிழ்க்கிறிஸ்தவ விவாகங்கள் கிறிஸ்தவ சம்பந்தங்களெனத்தகுமோ? இக்கேட்டை எவ்வாறு தடுக்கலாம்?

(i) பெண்கள் தடுக்கக்கூடும்.

தங்கள் விவாக விஷயமாய்த் தங்கள் பெற்றோர் கடனில் விழும்படி கிறிஸ்தவப் பெண்கள் எள்ளளவேனும் சம்மதிக்கலாகாது. தங்களைக் கேட்கும் வாலிபனுடைய வீட்டார் தங்கள் பெற்றோரிடம் நகையையும் ரொக்கத்தையும் கேட்குங்கால், விருப்பம் மெய் விருப்பமல்லவென்று பெண்கள் திடமாய்ச் சொல்லப் படிக்கவேண்டும். கடன் பட்டாவது தகுந்த நகையும் ரொக்கமும் பெற்றோர் கொடுக்காவிடில், பெண்ணை ஒருவரும் கேட்கமாட்டார்களே என்று எவராயினும் ஆக்ஷேபித்தால், விவாகத்துக்கு ஆத்திரப்படாமல், அவசியமானால் விவாகமின்றி சுயசம்பாத்தியம் செய்து பிழைப்பதும், அதற்கேற்ற கல்வியைக் கற்றுக்கொள்வதும் பெண்கள் கடமை. பெண்கள் இவ்வாறு திடச்சித்தத்துடன் சாதிப்பார்களாகில், இத்தீய வழக்கம் சிறிது காலத்தில் நின்றுவிடும். விவாகஞ்செய்வதே நன்றென்று காணும்பட்சத்தில், தங்கள் ஸ்திதிக்கேற்ற நற்குண வாலிபரைத் தெரிந்து மணம் புரியச் சம்மதிக்கவேண்டும்.

(ii) வாலிபர் தடுக்கக்கூடும்.

தங்கள் விவாக விஷயமாய்ப் பெற்றோர் நகை-ரொக்கம் கேட்கிறார்களென்று தெரிந்தவுடனே, அவ்வித விவாக சம்பந்தத்தைத் திடச்சித்தத்தோடு தவிர்க்க வாலிபர் தைரியங் கொள்ளவேண்டும். யாதாமொரு பெண்ணின் பெற்றோர் திரண்ட திரவியம் வாக்களித்துப் பெண் கொடுக்க விரும்புகிறார்களெனில், அப்பெண்ணை விட்டுவிலகுவது நன்று. கல்விக்காகக் கடன்படுவதையும், கடனிருக்கும்போதோ வேலையில்லாதிருக்கும்போதோ விவாக ஏற்பாடு செய்வதையும் வாலிபர் முற்றிலும் தடுக்கவேண்டும். கிறிஸ்தவ வாலிபர் இதை இழிவென்று எண்ணினால், சீர்திருத்தம் தீவிரிக்கும். தேச சுவாதீனத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பேராவல் கொள்ளும் கிறிஸ்தவ வாலிபர் இச்சீர்த்திருத்தத்தைத் தங்கள் சொந்த விஷயத்தில் நிறைவேற்ற முடியாதவர்களா?

(iii) பெற்றோர் தடுக்கக்கூடும்.

கல்வியும், நாகரீகமும், சுயமதிப்பும் அதிகரிக்கும் இக்காலத்தில், தங்கள் ஆண் மக்களையாவது, பெண் மக்களை

யாவது மேற்கண்டபிரகாரம் அவமானத்துக்குட்படுத்துவது கிறிஸ்தவ பெற்ருருக்கு எவ்விதத்திலும் தகாது. பணத்துக்கென்று ஓர் பெண்ணை விவாகஞ்செய்த வாலிபன் அப்பெண்ணுக்கும் அப்பெண்ணின் வீட்டாருக்கும் அடிமையாகக்கூடுமன்ரோ? பணம், நகை, அதிகம் கொடுப்போமென்று வாக்களித்துத் தங்கள் பெண்ணைக் கடத்துவோர் பின்பு எக்காலத்திலும் தங்கள் மருமகன்மீது அதிகாரஞ்செலுத்த முயலாரோ? அப்பெண் குறையற்றது என்று எவ்வாறு நிச்சயங்கொள்ளலாகும்? இக்காரணங்கள்பற்றி, விவாக சம்பந்தம் ஆலோசிக்கும் சமயத்தில், நகை, ரொக்கம் என்ற பேச்சை முற்றிலும் தவிர்த்து, நமது பிள்ளைகளின் கல்வி, பக்தி, திறமைக்கு ஏற்ற சம்பந்தம் ஏதோ அதையே நிறைவேற்றும்படி நிர்ணயித்துக்கொள்வோமாக.

4. கிறிஸ்தவ இல்வாழ்க்கையில் மேய்ப்பாக்கியம் விளங்க இடையூருயிருக்கும் சகலத்தையும் ஒழிக்கவேண்டிய தவசியம்.

(i) விவாகஞ்செய்த இருவர் ஒரே மாம்சமாயிருக்கிருர்களென்பதையும், இதுகாரணத்திஞல் அவர்களிருவரும் தம்தம் தகப்பனையும் தாயையும் விட்டுப்பிரிந்து, பிரத்தியேகமாய் வாழுவதவசியமென்பதையும் மறக்கலாகாது. தன் மாமஞர் மாமியாருடன் ஓர் பெண் குடியிருக்க நேர்ந்தபோதிலும், பெண் தன் புருஷனுடன் பிரத்தியேகமாக ஓர் அறையில் வாழ வசதியிருப்பது நல்லது. இவ்வித ஒழுங்கில்லாத காரணத்தினிமித்தம் புருஷனைவிட்டு ஓடிப்போன பெண்கள் உண்டு.

(ii) புருஷனுடைய பெற்ருர் மாத்திரமல்ல, பெண்ணின் பெற்ருரும் மேலே கண்ட சத்தியத்தை நினைத்துக்கொள்ளவேண்டும், நினைக்கும்போதெல்லாம் பெண் தன் தாயின் வீட்டுக்கு ஓட பெண்ணின் பெற்ருர் இடங்கொடுக்கலாகாது. பெற்ருரைத் தரிசிப்பதற்குத் தாய் வீட்டுக்கு ஒவ்வோர் வேளைகளில் பெண் போனலும் தன் புருஷனிடம் சீக்கிரம் திரும்பிவர வழி செய்வது நன்று. புருஷன் வந்தால்தான் பெண்ணை அனுப்புவோம் என்று சொல்லி மாசக்கணக்காய்த் தங்களிடம் பிள்ளையை வைத்துக்கொள்ளும் பெற்ருர் உண்டு. இவ்விதபிடிவாதம் வாலிபப் புருஷன்—மனைவியை நிலையாய்ப் பிரித்துவிட்டதையும் அறிவோம். விவாகமான இரு பிள்ளைகள் ஒரு

வரோடொருவர் பாக்கியமாய்க் கூடி வாழுவதற்கு இருபட்சத்துப் பெற்றூரும் சகாயம் புரிவதே கிறிஸ்துமதப் போதனைக் கேற்றது. அவர்கள் பிரிந்து போவதற்குப் பெற்றூர் ஏதுவாயிருப்பது நமதாண்டவரின் போதனைக்கும் அப்போஸ்தலன் போதனைக்கும் விரோதம். மெய்ப்பாக்கிய சம்பந்தங்களாயிருக்கக்கூடிய எத்தனையோ விவாகங்கள் பெற்றூரின் தலையிடுதலினுலும், பிடிவாதத்தினுலும் நிர்ப்பாக்கிய சம்பந்தங்களாயிருப்பதைக் கண்டிருக்கிறேம்.

(iii) கிறிஸ்தவ இல்லற வாழ்க்கையின் இன்பத்துக்கு இன்னெரு இடையூறு புருஷன்–மனைவி இருவரும் நெடுங்காலம் பிரிந்து வாழ்வது. மனைவியை இந்தியாவில் விட்டு, பிழைப்புக்காக வருஷக்கணக்காய்ப் புறதேசமேகும் வழக்கம் சில பாகங்களில் உண்டு. இவ்வாறு போகும் வாலிபருக்காவது, விடப்படும் மனைவிகளுக்காவது இது நல்ல வழக்கமன்று. சர்க்கார் உத்தியோகத்தில் பெண் நுழைந்ததினுல், புருஷன் ஓரிடம், மனைவி ஓரிடம் வாழ்ந்து, வருஷத்துக்கோர்முறை இருமுறை சந்திக்கும் வழக்கமும் நாளடைவில் அதிகரிக்கிறது. புருஷன்–மனைவி அன்னியோன்னியத்துக்காவது பிள்ளைகளின் நல்வளர்ப்புக்காவது இது அநுகூலமான வழக்கமன்று. பணம் லாபந்தான்; இல்லற வாழ்க்கையோ பெரும்பாலும் நஷ்டமே. இவற்றை அநுபவ சித்தாந்தமாயறிந்த கிறிஸ்தவர்கள், பணத்தினிமித்தம் இல்லறவாழ்க்கையைப் பாழாக்காதிருக்கக் கோருகிறேம்.

(iv) கிறிஸ்தவ இல்வாழ்க்கைக்கு இன்னெரு இடையூறு புருஷன்–மனைவிக்குள் உண்டாகும் அவநம்பிக்கை.

ஓர் மனைவி சற்று கல்விகற்றவளாயாவது, சவுந்தரியவதியாயாவது இருப்பின், புருஷன் அவள்மேல் சமுசயங்கொண்டு துன்பப்படுத்துவதை அறிந்திருக்கிறேம். தன் மனைவி மற்றெரு வீட்டுக்குப் போகாதபடித் தடுக்கும் புருஷர் உண்டு. யாதாமொரு புருஷன் தன் மனைவியோடு பேசினுலும் சரி, இவள் புன்னகையுடன் மறுமொழி அளித்தாலும் சரி, மூர்க்கங்கொண்டு மனைவியின் வாழ்க்கையைக் கசப்பாக்கும் வாலிபப் புருஷர் உண்டு. இவர்கள் தாங்களே வாலிபர்களாயிருந்த காலத்தில் ஸ்திரீகளுடன் தப்பிதமான சிநேகஞ்செய்தவர்களாயிருப்பது இதற்குக் காரணமாகுமோ? இரண்டொரு கெட்ட ஸ்திரீகளை அல்லது கெட்ட வாலிபரை அறிந்திரு

பதினுல் சகல ஸ்திரீகள்மீதும், சகல வாலிபர்மீதும் அநுமானங்கொள்ள ஆரம்பித்தனரோ? எப்படியாயினுஞ்சரி; அநுமானம் அரிபுழு; நம்பிக்கையோ நன்மை பயக்கும்; அன்பு அன்பைப் பெருக்கும். ஒருவேளை ஓர் மனைவி அவிவேகமாய் யாதாமொரு புருஷனுடன் மிதமிஞ்சிப் பழகினுல், அவ்விஷயத்தை மனைவியுடன் நேரில் பேசித் திருத்திக்கொள்ளுவதே தகுதி.

பெண்களும் சற்று விவேகமாய் நடந்துகொள்ளுவது நன்று. வேறு ஆண்களுடன் தூய சிநேகம் இருப்பது கூடியதாயினும், ஏதாவதொரு ஆணுடன் அவ்வித சிநேகம் வைத்துக்கொள்ளுவது கணவனுக்கு இஷ்டமில்லையென்று மனைவி காண்கில், அக்ஷணமே அச்சிநேகத்தைத் தவிர்ப்பது ஞானம். சொந்தக் கணவனின் நம்பிக்கையே மெய்ப்பாக்கியம்.

5. கிறிஸ்தவ விவாக சம்பந்தம் பாக்கியம் நிறைந்ததாயிருக்க இருவர் ஆசித்தால், புருஷன்—மனைவியின் சரீர சம்பந்தத்தைப்பற்றிய அறிவு ஏற்கனவே இருப்பதவசியம்.

இவ்விஷயத்தைத் தெளிவாய் விளக்கும் கிரந்தங்கள் ஆங்கிலத்தில் பலவுள. ஆங்கிலம் கற்றிருப்போர் இவற்றைப் பரிசீலனம்பண்ணுவது நன்று. தமிழிலும் இரண்டொரு சிறு பிரதிகளுண்டு. இவற்றில் கற்பிக்கப்படும் பொருளனைத்தையும் இங்கு விவரிப்பதற்கு இடமில்லை. சில குறிப்புகளை மட்டும் பொதுவாகக் கூறுவோம்.

பிள்ளைகளைப் பெற்று, மனுகுலம் விருத்தியடையச் செய்வது விவாகத்தின் நோக்கங்களிலொன்று. சர்வ சிருஷ்டியும் எவ்வாறு விருத்தியடைகின்றதோ, அவ்வாறே ஆண் பெண் இருவர் கூடுவதினுல்மட்டும் மனுகுலமும் விருத்தியடைவது கடவுள் அமைப்பு. இவ்வித கூடுதலினுலேயே அவர்களிருவரும் ஒரே மாம்சமாகிருர்கள். இச்சரீர சம்பந்தம் விவாக நிலைமைக்குள் ஏற்படும்போது, அதைப் பரிசுத்த சம்பந்தமென்கிறோம். ஏனெனில், இதுவே சந்தான விருத்திக்குக் கடவுள் விதித்த ஏற்பாடு. கடவுளின் ஏற்பாடு யாவும் பரிசுத்த ஏற்பாடே. விவாகமான இருவருக்குள் சரீர சம்பந்தம் முற்றுப்பெற்றுலன்றி, விவாகம் விவாகமல்லவென்பது சர்வ லோக பொதுவிதி.

புருஷனுக்கும் மனைவிக்குமுள்ள சரீர சம்பந்தம் அவர்களது பரஸ்பர அன்பை வளர்க்கும் சாதனங்களில் ஒன்று.

புருஷனையும் மனைவியையும் பாவத்துக்குள் விழாது காப்பாற்றும் கிருபையின் யத்தனம் அது. புருஷன்—ஸ்திரீ இருவர் இச்சம்பந்தத்தினால் ஒருவரையொருவர் சம்பூரணமாய் அறிகிறார்கள். ஆண் ஜாதிக்கும் பெண் ஜாதிக்குமிடையில் நிற்கும் இரகசிய திரை நீங்கவே, ஓர் புருஷனும் மனைவியும் வேறெந்த ஸ்திரீயோடும் புருஷனோடும் இருக்கமுடியாத நெருங்கிய சம்பந்தத்தினால் ஐக்கியப்படுகிறார்கள். இவ்வைக்கியம் திருப்திகரமாயில்லாதபோது, பலவிதச் சிக்குகளும், மனமாச்சரியங்களும் நேரிடுவது இயல்பு. இவ்வைக்கியம் இருவருக்கும் திருப்திகரமாயிருப்பின், இல்லற ஒழுக்கத்துக்குரிய அநேக இடையூறுகளை அது ஜெயிக்கக்கூடும். ஆனதுபற்றி, இச்சம்பந்தம் இன்னதென்பதும், இருவரும் குறைகூற வழியில்லாதவிதமாய் இவ்விஷயத்தில் ஒழுகும் முறை இன்னதென்பதும், புதிதாய் விவாகமாகும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும் தெரிந்திருப்பது அவசியம்.

விவாகமான முதல் இராவிலேயே தன்னைச் சமீபித்த புருஷனிடம் பெண் மூர்க்கங்காட்டி, இவ்வித சரீர சம்பந்தமிருக்குமென்று தெரிந்திருந்தால் விவாகத்துக்குச் சம்மதித்திருக்கமாட்டேனென்று சொன்னதையும், மற்றோர் பெண் தன் புருஷனிடம் போக இஷ்டப்படாமல் தாயினிடம் ஒளித்துக்கொண்டதையும் கேள்வியுற்றிருக்கிறோம். இவை யாவும் அறிவீனத்தின் பலன் அன்றோ? மேலும், புருஷனுடைய அவிவேகத்தினாலும் மூர்க்கத்தினாலும் பலவந்தத்தினாலும் திகிலடைந்து தாய் வீட்டுக்குப்போய், புருஷன் வீட்டுக்கு வரப் பயப்பட்டு, நிலையாய்ப் பிரிந்துபோனவர்களையும் அறிவோம். இதுவும் அறிவில்லாமையின் பலனே. தங்கள் சபையாரின் இல்லற வாழ்க்கை பாக்கியமுள்ளதாயிருக்க விரும்பும் தேவ ஊழியர் தம்பதிகளுக்கு இவ்விஷயத்தில் ஏற்ற ஆலோசனை சொல்ல ஆயத்தமாயிருப்பதவசியம். குருவானவர் மணவாளனுக்கும், குருவானவர் மனைவி பெண்ணுக்கும் தனிமையாய்ப் புத்தி சொல்வது நன்று. விசேஷமாய் இது கிராமச் சபைகளிலும், பெற்றோர் கல்லாதவர்களாயிருக்கும் குடும்பங்களிலும் மிக்க அவசியம். பக்தியுள்ள ஆக்கியோன்கள் எழுதின நூல்களிலிருந்து குருமார் இதற்கு வேண்டிய அறிவை அடைந்துகொள்ளக்கூடும்.

மற்றெல்லா விஷயத்திலும்போல, சரீர சம்பந்தத்திலும் மிகுந்த தன்னடக்கமும் பொறுமையும் மெய்ப்பாக்கியத்துக்கு அவசியம் என்றும், பலவந்தம் தகாதென்றும், ஸ்திரீ—புருஷர் இருவரும் ஒரே மனதாய் இஷ்டப்பட்டாலன்றி கூடுவது தப்பிதமென்றும், தன் ஆசையைப்போலவே ஸ்திரீயின் விருப்பத்தையும் திருப்திசெய்யப் புருஷன் முயலுவது அவன் கடமையென்றும், எந்தெந்தக்காலத்தில் இருவரும் கூடக்கூடாதென்றும், எந்தெந்த நாட்களில் கூடின் குழந்தை உண்டாகும், எந்தெந்த நாட்களில் கூடினால் குழந்தை உண்டாகாதென்றும், சரீரத்தின் மர்ம உறுப்புகளில் பூரண சுத்தம் எவ்வளவு அவசியமென்றும் விவாகஞ்செய்யப்போகிறவர்களுக்குத் தெரிந்திருப்பது நல்லது. மனைவியானவள் தான் அசௌக்கியமாயிருக்கத் தொடங்கின நாளைப் பதிவு செய்வதும், குழந்தை உண்டாயிருப்பதற்குரிய குறிகளைத் தெரிந்தறிவதும், குழந்தை உண்டாயிருக்கும் காலத்தில் தன் சுகத்தைப் பேணிக்கொள்ளவேண்டிய முறைகளைத் தெரிந்திருப்பதும், குழந்தை ஜனனமாகும் காலத்தைக் கணக்கிட்டறிவதும், பிரசவத்துக்காக ஏற்கனவே ஆயத்தப்படும் விதத்தைக் கற்றுக்கொள்ளுவதும் பிரயோஜனமாயிருக்கும். இங்கிலாந்து தேச குருமார் பலர் தங்கள் சபைகளில் விவாகஞ்செய்யப்போகிறவர்களுக்கு முதல் அறிக்கை கூறினபின் இவ்வித ஆலோசனைகளைச் சொல்லுவது வழக்கமாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, புருஷன்--மனைவி இருவருக்குமுள்ள சரீர சம்பந்தம் பரிசுத்த சம்பந்தம் என்றும், இதைப் பக்திவிநயத்தோடு கொண்டுசெலுத்துவது கிறிஸ்தவக் கடமைகளிலொன்று என்றும், இதைத் தூய்மையோடும் கற்போடும் காத்துக்கொள்ளுவதற்கு அவசியமான தேவகிருபை அருளப்படுவது நிச்சயம் என்றும் புருஷரும் ஸ்திரீகளும் அறிந்துகொள்வது அவசியம்.

6. கிறிஸ்தவ விவாகம் மெய்ப்பாக்கியம் விளைவிக்கவேண்டுமோகில், புருஷன்—மனைவி இருவரும் ஆரம்ப முதலே சில உறுதியான தீர்மானங்கள் செய்துகொள்வது தகுதி.

(i) ஒருவர்பேரில் ஒருவர் அன்பைப் பெருக்க முயலவேண்டும்.

கிறிஸ்தவ இல்வாழ்க்கை ஏதேன் நந்தவனம்; முள் நிறைந்த இவ்வுலகின் மத்தியில் விளங்கும் ரோஜாப்புஷ்பம்; சேரும் சகதியும் நிறைந்துள்ள மானிடர் தடாகத்தில் இலங்கும் தாமரை மலர். இதன் அலங்காரத்துக்கும் இன்ப வாசனைக்கும் மூல இரகசியம் பரஸ்பர அன்பு. அன்போ தானாய்த் தழைக்காது. பரி. பவுல் வர்ணித்தபடி: “அன்பு நீடிய சாந்தமுள்ளது, அன்பு தயாளமுள்ளது, பொறாமை கொள்ளாது; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தனக்கானதை நாடாது, கடுங்கோபங் கொள்ளாது, குற்றத்தைப் பாராட்டாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தோடு சந்தோஷப்படும். சகலத்தையும் சகிக்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்திலும் நம்பிக்கை கொள்ளும், சகலத்தையும் பொறுக்கும்.” பால்ய புருஷனும் மனைவியும் அன்பின் சட்டத்தைத் தங்கள் குறியாக வைத்து ஒழுகுவார்களாகில், இல்லறம் நல்லறமாய் விளங்கும்.

(ii) சுய இஷ்டத்தையும் விருப்பத்தையும் தவிர்க்கப் பழகவேண்டும்.

சகல விஷயத்திலும்—புருஷனுனுஞ் சரி, மனைவியானுலுஞ் சரி—தன் இஷ்டத்தையும் விருப்பத்தையும் போங்கையுமல்ல, மற்றவர் இஷ்டத்தையும் விருப்பத்தையும் போங்கையும் அநுசரித்து ஒழுகவேண்டும். விக்றோரியா ராணிக்கும், அவர் பர்த்தாவுக்குமிருந்த மங்கா அன்புக்குக் காரணம், ராணியார் பர்த்தாவின் விருப்பத்தையும் அல்பர்ட் பிரபு ராணியாரின் விருப்பத்தையும் கருதி சகலத்தையும் செய்ததே என்பர். இறைச்சி தின்று வளர்ந்த பெண் மரக்கறி பட்சணக்காரரான கணவன் நிமித்தம் இறைச்சியை வெறுத்ததையும், மரக்கறி பழக்கமுள்ள பர்த்தா இறைச்சி பழக்கமுள்ள மனைவியினிமித்தம் இறைச்சி புசிக்கப் பழகினதையும் அறிவோம். புருஷன் இஷ்டத்தைக் கவனித்துத் தன் விருப்பத்தைக் கைவிடும் மனைவியும், மனைவியின் போங்கைக் கவனித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் புருஷனும் மெய்ப்பாக்கிய இரகசியத்தைக் கண்டுகொண்டவர்கள்.

(iii) மன்னிக்கவும் பொறுக்கவும் சகிக்கவும் படிக்கவேண்டும். புருஷன்—மனைவி இருவருக்கும் உண்டாகும் பேதங்

களில், இருவரும் ஒருவருக்கொருவர் மன்னிக்கவும், பேதாபேதங்களைச் சகிக்கவும், குற்றங் குறைகளை மறக்கவும் படிக்க வேண்டும். வெவ்வேறு வீடுகளில் வளர்ந்து, வெவ்வேறு பழக்க வழக்கங்களில் முதிர்ந்து, வெவ்வேறு குணலக்ஷணம் அமைந்த இருவர் ஒரே இல்லத்தில் கூடிவாழ ஆரம்பிக்குங்கால், முன் நினைத்திராத வண்ணம் பேதங்கள் வெளியாவது இயல்பு. எப்பேர்ப்பட்ட பரஸ்பர காதலுடன் விவாக சம்பந்தத்தை இருவர் ஆரம்பித்தபோதிலும், ஒன்றாய் வாழ வாழ, அற்ப விஷயங்கள் பலவற்றில் அபிப்பிராய பேதங்கள் தென்படாமற்போகா. ஒருவர் மற்றவரில் முன் நினைக்காத பலவீனங்களை இப்பொழுது கண்டாலும் காணலாம். இவையனைத்திலும் பொறுமையும் சகிப்பினையும் இருவருக்கும் அவசியம். என்ன பேதமிருப்பினும், நாங்கள் பொறுத்துச் சகித்து மன்னித்து மறந்துபோகத் தீர்மானித்திருக்கிறோமென்று சொல்லக்கூடியவர்கள் குன்றாத மெய்யன்பை அநுபவிப்பவர்கள்.

(iv) வீட்டுப்பேச்சு வெளியேறாதபடி இருவரும் கவனமாயிருக்கவேண்டும்.

மனைவியின் குறைகளையாவது புருஷனின் குற்றங்களையாவது தம்தம் தாய் தகப்பனிடத்தில் சொல்ல ஆரம்பிக்கிறவர்கள் ஒருவரோடொருவர் களங்கமற்ற அன்பில் பெருகுவது கூடாதகாரியம். தம்தம் தாய் தகப்பனிடத்தில் சொல்லுவதே குற்றமெனின், அயலகத்தாரிடத்திலும் சிநேகிதரிடத்திலும் முறையிடுவது சரியாகுமோ? இவ்விஷயத்திலும் கண்டிப்பான தீர்மானம் தேவை.

(v) வருமானத்துக்குத் தகுந்த வாழ்க்கை அவசியம்.

பணம் கையிலிராவிடில் எதையும் வாங்கமாட்டோமென்றும், எவ்விதத்திலும் கடனுக்குள்ளாகோமென்றும் விரதம் பூண்டுகொள்ளுவது இல்லற இன்பத்துக்கு உத்தம சாதனமாகும். புருஷனுக்குத் தெரியாமல் மனைவி செலவு செய்வதும், மனைவிக்குத் தெரியாமல் புருஷன் செலவு செய்வதும் அன்பை வளர்க்கமாட்டாது. புருஷன் குடும்பத்துக்குச் செய்யவேண்டிய சகாயத்துக்கு மனைவி இடையூறுபண்ணாதிருப்பதும், மனைவியின் குடும்பத்துக்குப் புரியத்தக்க உதவி விஷயமாய்ப் புருஷன் மனங்கோணாதிருப்பதும் யுக்தி. ஆயி

னும், சகலமும் வருமானத்துக்குட்பட்டிருப்பது நியாயம். விருந்து வகையறுக்களிலாவது, வீட்டு ஜோடிப்புகளிலாவது, புடவை வஸ்திரங்களிலாவது, ஸ்திதிக்கு மிஞ்சின வாழ்க்கை வறுமைக்கு மூலம். புருஷன்—மனைவிக்கு இருக்கவேண்டிய பரஸ்பர பாசம் குன்றாது வளர்ந்தோங்கவேண்டுமாகில், கடன் என்ற பேச்சு இல்லறத்தில் வரத்தகாது.

விவாகமான ஆரம்ப முதலே தங்கள் வயோதிபகால ஆதரவுக்கானாலுஞ் சரி, புருஷன் காலத்துக்குப்பின் மனைவி பிள்ளைகள் ஆதரவுக்கானாலுஞ் சரி, ஏற்பாடு செய்வது பரஸ்பர அன்பைப் பெருக்கும் சாதனங்களிலொன்று. இவ்வித நிதிகள் பல இக்காலத்திலுண்டு. இளவயதில் இவ்வித சகாய நிதியில் சேருவது லாபம். கட்டவேண்டிய சந்தா சுருங்கும்.

7. கிறிஸ்தவ இல்லறம் தேவ அருள் பொருந்தியதாயிருக்க விரும்பினால், புருஷன்—மனைவி இருவரும் தங்கள் இல்வாழ்க்கையின் மூலமாய்க் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் விளங்கத் தீர்மானஞ் செய்துகொள்ளுவது அவசியம்.

விவாகம் ஏதேன் தோட்டமென்றோம். பரலோக மெய்ப் பாக்கியத்தை மானிடர் யாவரும் ஒருவாறு ருசி பார்ப்பது ஒழுக்கமுள்ள இல்லறத்தில் என்று கூறினோம். கிறிஸ்தவ விவாகமோ, கிறிஸ்துபெருமானால் வந்த மீட்பின் பலிதத்தைப் பூலோகத்துக்கு விளங்கச்செய்யும் கருவிகளிலொன்று. கிறிஸ்தவர்களது விவாக சம்பந்தம் குறையற்றதும் பிழையற்றதுமாயிருக்கவேண்டுமென்று இந்தக் காரணத்தினாலேயே வற்புறுத்துகிறோம். இந்நூலை நாம் எழுதப் புகுந்த நோக்கம் இதுவே.

கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கை பாக்கியமுள்ளதாகமட்டுமல்ல, கிறிஸ்துவுக்குச் சாட்சியாகவும் இலங்கவேண்டுமோகில், வேண்டியதென்ன?

(i) கிறிஸ்தவ வாலிபர் வாலிப ஸ்திரீகளுக்குள் கற்பு பேரலங்காரமாய் விளங்கவேண்டும். விவாகத்துக்கு முன்னும், விவாகத்துக்குப் பின்னும் கிறிஸ்தவ புருஷரும் ஸ்திரீகளும் ஒருவர் விஷயமாய் ஒருவர் கற்பைக் காத்துக்கொண்டவர்களென்று பேர் பெறவேண்டும்.

(ii) விவாக சம்பந்தத்தில் ஒன்றுபடும் இரு கிறிஸ்தவ குடும்பங்களும் விவாகத்தினுல் எவ்விதமான சண்டையும், கூக்குரலும் பிறக்காதபடி பார்த்துக்கொள்ளுவது கடமை. நகை, ரொக்கம் முதலியவற்றைப்பற்றிய முறுமுறுப்பு எள்ளளவேனும் இருப்பது தகாது. பெற்ருர் தங்கள் பிள்ளைக்கு அன்போடு போட்டதும் கொடுத்ததுமே போதும் என்று திருப்திகொள்ளக் கிறிஸ்தவர்கள் படிக்கவேண்டும். அற்ப சொற்ப ஆசாரங்களில் குறைகூறும் வழக்கம் நிற்கவேண்டும். மாமனுர் மாலையிடவில்லை; மாமியார் மோதிரம் போடவில்லை; அது இல்லை, இது இல்லை என்று குறைகூறும் வழக்கம் இழிவு. அப்படியே, விருந்துகளைப்பற்றிய குறைகளும் அநேக சண்டைகளுக்குக் காரணம். விருந்தினர் ஜாஸ்தியாயிருக்குங்கால் போஜனுதிகள் சம்பந்தமாக ஏதோ குறை இல்லாத வீடு கிடையாது. காணுவூர் விவாக வீட்டிலுங்கூட குறைவுபட்டதுண்டே. குறைகளைப் பொறுப்பது பெருந்தன்மை. குறைவைக் கவனித்துக் குறைகூறுவது அற்பத்தன்மை. கிறிஸ்தவ கலியாண வீடுகளில் சண்டை சச்சரவு தலைகாட்டாதிருக்குமட்டும் நமது பக்தி என்ன பக்தி!

(iii) பக்திவிருத்திக்குப் பிரதிகூலமான புராதனச் சடங்குகள் ஓயவேண்டும். மொய், மறுவீடு, அரிசிப் பெட்டி— முதலிய அநேக வழக்கங்கள், விவாகத்தினுல் சம்பந்தப்படும் பிள்ளைகளும், குடும்பங்களும், ஒருவரையொருவர் நன்ருயறிந்திராத காலத்து மாமூல்கள். கிறிஸ்தவர்கள் இந்தப் படியை விட்டு வெகுதூரம் முன்னேறிவிட்டார்களன்ருே? ஆகையால், மேற்கண்ட புராதன வழக்கங்களை நிலைநிறுத்துவதும், இவற்றை மாப்பிள்ளை வீட்டாரோ பெண் வீட்டாரோ பாக்கியின்றி நிறைவேற்ருவிடில் சச்சரவு செய்வதும், கிறிஸ்தவர்களைவிட்டு ஓயவேண்டும். புறமதஸ்தரால் எப்பக்கமும் சூழப்பெற்ற கிறிஸ்தவக் குடும்பங்கள் இவ்வித கொடுக்கல் வாங்கலின்றியே பரஸ்பர மதிப்பும் சிநேகமும் பொருந்தினவர்களாயிருப்பது நமதாண்டவருக்கு மாட்சிமையான சாட்சியாகுமன்ருே?

(iv) பெண்கள் தாய்மார் வீட்டுக்கு அடிக்கடி போவதும், என்ன காரணத்தையிட்டாயினும் தாய் வீட்டிலேயே வாரக்கணக்காய், மாசக்கணக்காய், வருஷக்கணக்காயுங்கூட தாம

திப்பதும் பெரிய அவமானமென்று கிறிஸ்தவப் பெற்று உணரவேண்டும். கிறிஸ்துமதம் ஹிந்துக்களால் பழிக்கப்ப வதற்கு இது காரணமாயிருப்பதை அறிவோம். இப்ப வேறுபட்டவர்களைச் சிலவேளைகளில் திரும்பச் சேர்ப்பதற்கு குருமாரும் சபை மூப்பரும் படும்பாடு மெத்த! இவ்வி முறைபாட்டுக்கு அநேக சமயங்களில் காரணர் பெண்ணி பெற்றோர் என்று அறியலானேம். புருஷனும் மனைவியும் கூடி வாழும் ஆரம்பகாலத்தில், அற்ப சொற்ப விஷயங்களைவிட் பின்னபேதங்கள் வெளியேறுவது இயற்கை. இவற்றை பொறுத்து, மனைவி புருஷனைத் தன் அன்பினுல் ஆதாயம்பண் ணும்படி பெண்ணின் பெற்றோர் ஆலோசனை சொல்லி, புருஷன் வீட்டுக்கு மனைவியை அனுப்பிவிடுவதற்குப் பதிலாக, அற்ப தைப் பெரிதாக்கி, சண்டையை வளர்த்துப் பிடிவாதம்பண்ணு வது வழக்கமாகிவிட்டது. "புருஷன் தன் தகப்பனையும் தாயையும்விட்டு நீங்குவான், இருவரும் ஒரே மாம்சமாயிருப் பார்கள்; கடவுள் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்" என்ற அருள்நாதர் திருவாக்கை அறிந்த கிறிஸ்தவப் பெற்றோர், புருஷனும் மனைவியும் பிரிந்திருக்கக் காரணராவது எவ்வளவு பரிதாபம்!

8. கிறிஸ்தவ விவாகம் பரம பாக்கியம் நிறைந்ததாயிருக்கவேண்டு மாகில், கடவுள், கிறிஸ்து, திருச்சபை முதலியன பிரதம ஸ்தானத்தில் நிற்கவேண்டும்.

"கிறிஸ்துவே இவ்வீட்டுக்குத் தலைவர்" என்ற வாச கத்தை ஆங்கிலத்தில் பல கிறிஸ்தவ வீடுகளில் காணலாம்; உள்ளபடி கிறிஸ்துவை இல்வாழ்க்கைக்குத் தலைவராக்குவதே சகல பரம பாக்கியத்துக்கும் இரகசியம். கிறிஸ்துவைத் தலைவராக்குகிறவர்கள் என்ன செய்வார்கள்?

(i) கடவுளை முதலாவது தேடுவர். அதிகாலை வேத வாசிப்பு, தனித் தியானம், ஆலயந்தொழுதல், கர்த்தருடைய நாள் ஆசரிப்பு, ஞானஅனுமானங்களில் கிரமமாய்ப் பங்கு பெறுதல் —இவைபோன்ற கிருபையின் யத்தனங்களைக் கையாடுவதில் பின்வாங்கார்.

(ii) கடவுளைத் தங்கள் வருமானத்தினுல் கனம்பண்ணுவர். ஜீவனையும், சுகத்தையும், சம்பாதிக்கும் திறமையையும் அரு

ளின ஆண்டவருக்கு நன்றிபாராட்டாத மனுஷன் என்ன மனுஷன்? தன்னை மீட்ட ரட்சகரை அன்புடன் நினைத்து, அநு தினம் அவரைத் தொழாதார் என்ன கிறிஸ்தவர்கள்? கிறிஸ்து தமது சுய ரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த திருச்சபையை யும் அதன் ஊழியரையும் ஆதரிப்பதற்காகவும், அதை எங்கும் வியாபிக்கச் செய்வதற்காகவும், அதன் வயோதிபரைப் பாது காப்பதற்காகவும்—தன் பொருளில் ஒரு திட்டமான பாகத் தைப் பிரத்தியேகப்படுத்திப் படைக்காதவன் கிறிஸ்தவன் கடமையை நிறைவேற்றுகிறவனுவானு? குடும்ப வாழ்க்கையில் புதிதாய்ப் புகும் புருஷனும் மனைவியும் இவற்றை உள்ளத்தில் கொண்டவர்களாய், தங்கள் சகல வருமானத்திலும் திட்ட மான ஓர் பாகத்தை ஆரம்பமுதலே பிரதிஷ்டைபண்ணி, அந்தந்த அவ்சியங்களுக்கென்று மனப்பூர்வமாய்ப் படைப் பது அவர்கள் கடமை. இது பலவந்தமாயுமல்ல கட்டாய மாயுமல்ல, தேசிகர் கேட்பதற்காகவுமல்ல சந்தாப் புஸ்தகம் நீட்டப்படுவதற்காகவுமல்ல, கடவுள் நிமித்தமாகவே செலுத் தித் தீர்க்கப்படவேண்டும். கிறிஸ்தவக் குடும்பங்களின் பொருளுதவியால் போஷிப்புப் பெறவேண்டிய திக்கற்றோர் ஒவ்வொரு சபையிலும் உளர்; ஆதரிக்கப்படவேண்டிய பணி விடைக்காரர் உளர்; சுவிசேஷ அறிவிப்புப் பெறவேண்டிய புறமதஸ்தர் உளர்; கட்டப்படவேண்டிய தேவாலயங்கள் உள; அவ்வாலயங்களில் நடைபெறும் தேவாராதனைகள் சாக்கிர மெந்துகள் உள. பொருளுதவி பெறவேண்டிய பல நல்முயற்சி கள் உள. இவை யாவும் சும்மா நடக்குமா? இவற்றை நினைத்து, பண விஷயத்தில் தங்கள் கடமையைக் கிறிஸ்தவக் குடும்பத்தார் நிறைவேற்றுவார்களாக.

(iii) கடவுளைத் தங்கள் குடும்ப ஜெபத்தினுல் மகிமைப் படுத்துவர். குடும்பம் என்பதில், பிதா—மாதா—பிள்ளைகள்—வேலைக்காரர் அனைவரும் அடங்கியுளர். கிறிஸ்தவ இல்லறத் தில் தேவபக்தி சிறந்திலங்கவேண்டுமெனில், இவர்கள் அனை வரும் கடவுள் முன்னிலையில் ஒன்றுபோலப் பணிந்து வணங்கு வது நன்று. இவ்வித பக்தி விளங்கும் குடும்பம் பரமபாக்கியம் பெற்று வாழும் என்பதற்கையமில்லை.

(iv) கடவுளைத் தங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிமைப் படுத்துவர். குடும்பத்தில் சேர்ந்துள்ள பல வகுப்பாரும்,

கிறிஸ்துக்குள்ளான தங்கள் தங்கள் சுவாதீனத்தை அநு பவிக்க இடம் கொடுப்பது அவசியம். புருஷனும் மனைவியும் கிறிஸ்துவுக்காகச் செய்யவேண்டிய ஊழியம் உண்டு. அதை நிறைவேற்றுவதற்கு இருவரும் ஒருவரையொருவர் எவி எழுப்பவேண்டும். பக்தி சகிதமான பணிவிடைகளில் பிள்ளை கள் சிறுபிராயமுதல் பங்கெடுக்கப் படிக்கவேண்டும். தங்க ளுக்கென்றல்ல, தங்களுக்காக உயிர்துறந்த இரட்சாபெரு மானுக்கென்றும் தங்கள் அயலகத்தாருக்கென்றும் பிழைக்க பால்ய வயதிலிருந்தே அவர்களைப் பழக்குவது கிறிஸ்தவ கடமை. வேலைக்காரர் வேத அறிவடையவும், ஜெபாராதனை களுக்குச் செல்லவும், பரிசுத்த சாக்கிரமெந்துக்களில் பங்கு பெறவும் சமயம் கொடுக்கவேண்டும். சம்பளம், கூலி முதலிய விஷயத்திலும் கிறிஸ்தவ எஜமான்கள் எஜமாட்டிகள் தங்கள் பணிவிடைக்காரருக்கு நியாயமும் தயாளமும் பாராட்ட வேண்டியவர்கள். வேலைக்காரர் கடனின்றி பிழைக்கவும், தங் களுக்கேற்ற உடை உடுத்து ஆராதனைகளுக்கேகவுந்தக்கதாக ஏற்ற சம்பளம் கொடுக்கவேண்டியது நியாயம். இவையனைத் தையும் ஆலோசித்து, கிறிஸ்தவ இல்லற வாழ்க்கையை நடத்துவது கிறிஸ்தவர்கள் கடமை.

கிறிஸ்தவ இல்வாழ்க்கை இவ்வளவு உன்னதமானதாகில், "இவைகளுக்குத் தகுதியானவன் யார்?" என்று இந்நூலை இவ்வளவுதூரம் படித்தவர்கள் கேட்கலாம். தள்ளிவிடுதலைப் பற்றி இரட்சாபெருமான் திருவாய்மலர்ந்து பேசின சந்தர்ப் பத்திலேயே, சீஷர்: "கணவன் மனைவி காரியம் இப்படியிருந் தால், விவாகம்பண்ணுகிறது நல்லதல்ல" என்று முறையிட் டார்கள் (மத். 19: 10). அப்பொழுது ஆண்டவர் அளித்த விடை விசேஷமானது: "வரம்பெற்றவர்களே தவிர, மற்ற எவரும் இந்த வசனத்தை அங்கீகரிப்பதில்லை" என்றார். கிறிஸ் தவர்களது குடும்ப ஜீவியம் கிறிஸ்துவுக்குப் பாத்திரமான தாக விளங்கவேண்டுமாகில், வரம்பெறல் அவசியம். வரம் அருளப்படுவதும் நிச்சயம்.

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமுள்ள சம்பந்தம் உன் னத இரகசியம் அடங்கியுள்ளது (எபே. 5: 32). அது போலவே, அந்தப் பரிசுத்த திவ்ய சம்பந்தத்துக்கு ஒப்பாக உயர்த்தப்பட்ட கிறிஸ்தவ விவாகமும் உன்னத இரகசியம்

அடங்கியுள்ளது. திருச்சபையினுல் இணைக்கப்பட்டு, நற் கருணையில் உறுதிப்படுத்தப்பெற்று, ஆசிர்வாதத்தினுல் முத்திரிக்கப்பட்ட விவாகமானது, நிச்சயமாகவே ஓர் கிருபையின் யத்தனமென்று ஐயமறச் சொல்லலாம். கர்த்தரை முன்னிட்டு இச்சம்பந்தத்தில் பிரவேசித்து, கிறிஸ்துவின் சட்டத்தை அசலாக முன்னிறுத்தி, அருள்நாதர் திருநாம மகிமைக்கென்று அதைக் கொண்டுசெலுத்தத் தீர்மானித்துக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் சகாயம் கிடையாமல் போகாது. அந்த திவ்ய ஆவியின் அருளைத் தினம் தினம் தேடி, பாம வரம்பெற்று, கிறிஸ்துவின் சித்தத்துக் கேற்க நமது இல்லற வாழ்க்கையை நடத்துவோமாகில் அது கிறிஸ்துநாதருக்கு உத்தம சாட்சியாய் விளங்காதிராது.

"ஆகையால், நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளின் மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரி. 10: 31).

அநுபந்தம் 1

அத்தியக்ஷர் மஹா சபைத் தீர்மானங்கள்

இந்தியா பர்மா இலங்கைச் சபையின் அத்தியக்ஷர் சினட் விவாக சம்பந்தமாய்க் காலாகாலத்தில் ஆற்றிய விதிகளை இங்கே சுருக்கிச் சொல்லுவோம்.

1. கிறிஸ்தவ புருஷன் புறமதஸ்தரான ஸ்திரீயையாவது, கிறிஸ்தவ ஸ்திரீ புறமதஸ்தனான புருஷனையாவது விவாகஞ் செய்வது பரிசுத்த வேதாகமத்துக்கும் திருச்சபைச் சட்டத் துக்கும் விரோதம். இவ்வித விவாகத்தை இச்சபையைச் சேர்ந்த எந்த ஆலயத்திலும் நிறைவேற்றலாகாது.

2. கிறிஸ்தவ புருஷனாவது ஸ்திரீயாவது கிறிஸ்தவரல்லாத தம்பதியை விக்கிரகாராதனைச் சம்பந்தமான சடங்குகளுடன், அல்லது வேறு புறமதச் சடங்குகளுடன் விவாகஞ் செய்கில், அப்படிப்பட்டவர்கள் கண்டிப்பான சபை சிட்சைக் குள்ளாவார்கள். இவ்விஷயத்தில் சபை ஸ்திரமாய் நிற்காவிடில், திருச்சபையின் நல்வாழ்வுக்குப் பங்கம் நேரிடுமென் பது அத்தியக்ஷர் மகாசபையின் உறுதியான அபிப்பிராயம்.

3. ஞானஸ்நானம் பெற்ற ஒரு ஆள், ஞானஸ்நானம் பெறாத ஒரு ஆளைச் சர்க்கார் சட்டப்பிரகாரம் விவாகஞ்செய் தால், கண்டத்து அத்தியக்ஷருக்கு அதைத் தெரிவிக்கவேண் டும். ஒவ்வொரு விவாகத்தையும் அவர் விசாரித்து, அததன் விஷயமாய், சபை சிக்ஷைத் தீர்ப்பிடவேண்டுமோ அல்லவோ என்பதைத் தீர்மானிப்பார்.

4. ஜெப புஸ்தக இறுதியில் அச்சிட்டிருக்கும் இனவழி விலக்கே இந்தியா பர்மா இலங்கைச் சபையின் சட்டம். அந்த ஜாபிதாவில் விலக்கியிருக்கும் எந்த இனவழியிலும் இச் சபையின் அங்கங்கள் விவாகம் செய்யலாகாது. இவ்வித இன வழியில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் குருமார் விவாகச் சடங்கு நிறைவேற்றக்கூடாது.

5. அந்த ஜாபிதாவில் விலக்கப்பட்டிருக்கும் எந்த இன வழியிலாவது விவாகம்செய்துகொண்டவர்களுக்கு இச்சபை யின் அத்தியக்ஷர்கள் பட்டங்கொடுக்கமாட்டார்கள். லே ரீட

ராயிருக்க அதிகாரங்கொடுக்கமாட்டார்கள். சபையின் எவ்வித உத்தியோகத்துக்காவது ஆவிக்குரிய பணிவிடைக்காவது அவர்களை நியமிக்கவும் மாட்டார்கள்.

6. மூன்று ஞாயிறுகளில் அறிக்கை கூறவேண்டுமென்று ஜெப புஸ்தக ரூபிரிக்கில் கண்டவிதி ஐரோப்பியருக்குக் கட்டாயம் செல்லும். இந்துதேசக் கிறிஸ்தவர்களுக்கோ, மூன்று ஞாயிறுகளிலாகிலும் திருநாட்களிலாகிலும் அறிக்கை வாசிக்கலாம். ஆகிலும், முதல் அறிக்கை கூறி, 96 மணிநேரம் கடருமுன் விவாகம் நடத்தக்கூடாது. திருநாள் என்றால், விசேஷித்த சுருக்க ஜெபம், நிருப சுவிசேஷ வாக்கியங்கள் ஜெப புஸ்தகத்தில் நியமிக்கப்பட்டு, ஆராதனை நடக்கும் நாட்கள்.

7. அறிக்கை வாசிக்கப்பட்ட இரண்டு ஆலயங்களில் ஒன்றிலேயே விவாக ஆராதனை நடைபெறவேண்டுமென்பது சட்டம். எனினும், ஒரே அத்தியக்ஷ கண்டத்துக்குள் உள்ள இரு ஆலயங்களில் கிரமமாய் அறிக்கை கூறப்பட்டபின், மூன்றாவது ஆலயத்தில் விவாகம் நடப்பிக்க நேரிட்டால், அல்லது இஷ்டப்பட்டால், அதற்கு அத்தியக்ஷர் அநுமதி பெறவேண்டும். அவசரமென்று கண்டால், இவ்வித அநுமதி கொடுப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு. மாப்பிள்ளை பெண் இருக்கும் இரு ஸ்தலங்களிலும், விவாகம் நடப்பிக்கப்படும் ஸ்தலத்திலும்—ஆக மூன்று ஸ்தலங்களிலும் அறிக்கை வாசித்தாலும் சரிதான்.

8. பெண்கள் பிராயமாகுமுன் விவாகம் செய்யும் வழக்கத்தை முற்றிலும் நிறுத்தப்பார்ப்பது நன்று. பிரிட்டிஷ் இந்தியாவெங்கும் சர்க்கார் சட்டம் (சர்தா ஆக்டில் கண்டபடி) மாப்பிள்ளை குறைந்தபட்சம் 18 வயது முற்றுப்பெற்றவனும், பெண் 14 வயது முற்றுப்பெற்றவளாயும் இருக்கவேண்டும் என்பது. விவாகச் சடங்கு நிறைவேறவே, புருஷனும் மனைவியும் கூடிவாழக் கூடியவர்களாயிருக்கவேண்டும்.

9. டீக்கன் பட்டம்மாத்திரம் பெற்றவர்களும் விவாக ஆராதனை நடத்தலாம். எனினும், ஜெப புஸ்தக ஆராதனையிற் காணும் இரு ஆசீர்வாதங்களையும் பின்வருமாறு அவர்கள் மாற்றி வாசிக்கவேண்டும்:—

(1) தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்த ஆவி, தமது அடியாராகிய இவர்களை ஆசீர்வதித்து, காத்து, ஆதரிக்கக்கடவர். கர்த்தர் கிருபைகூர்ந்து இவர்களை

இரக்கமாய்க் கண்ணோக்கக்கடவர். இவர்கள் மறுமையிலே நித்திய ஜீவனை அடையத்தக்கதாக, இம்மையிலே ஒருவருக்கொருவர் ஆதரவாய் வாழும்படி, கர்த்தர் இவர்களைச் சகல ஆசீர்வாதத்தினாலும் கிருபையினாலும் நிரப்பக்கடவர். ஆமென்.

(2) ஜெபம்பண்ணக்கடவோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், தம்முடைய அடியாராகிய இவர்கள் சரீரத்திலும் ஆத்துமத்திலும் தமக்குப் பிரியமாய் நடந்து, தங்கள் ஜீவகாலபரியந்தம் பரிசுத்த அன்புடையவர்களாய் ஒருமித்து வாழ, தம்முடைய அருள் செல்வத்தை இவர்கள்மேல் பொழிந்து, இவர்களைப் பரிசுத்தமாக்கி, ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

10. மகம்மது சமயானுசாரிகளானவர்கள் எவராயினும் இதர மார்க்கத்தை அங்கீகரித்தால், அவ்வாறு அங்கீகரிக்கும் அக்ஷணமே அவரது முஸ்லிம் விவாகம் ரத்தாகிவிட்டது என்பது இஸ்லாமியச் சட்டம். ஆகவே, மகமதியராயிருந்த புருஷன்—மனைவி இருவர் ஏகமாய்க் கிறிஸ்தவர்களாகும் போது, அவர்கள் முந்தின விவாகம் விவாகமாக இனிமேலும் சட்டப்பிரகாரம் செல்லவேண்டுமாகில், அவர்கள் இருவருக்கும் ஏகசமயத்தில், அதாவது ஒரு நிமிஷம் முதலாய் முன்பின் இல்லாது, ஞானஸ்நானம் கொடுப்பது நலம். ஞானஸ்நானத்தின் மூலமாய் அவர்கள் விவாகம் கிறிஸ்தவ விவாகமாகிறது. புருஷன்—மனைவி இருவரில் ஒருவரே கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்தால், அக்ஷணமே முந்தின விவாகம் ரத்தாகிறது. கிறிஸ்தவரான தம்பதி வேறு கிறிஸ்தவ விவாகஞ்செய்து கொள்ள விரும்பினால் அதற்கு ஆக்ஷேபனையில்லை.[1]

11. ஹிந்து சமயத்திலிருந்து புருஷன்—மனைவி இருவருமாவது, இருவரில் ஒருவராவது கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்தால், பழைய விவாகம் அதனால் ரத்துச்செய்யப்படுகிறதில்லை. இருவரில் ஒருவர் மாத்திரம் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்து, மற்றவர் அவ்வாறு அநுசரித்தவரோடு கூடிவாழச்

[1] மகம்மதியரான இருவரில் ஒருவர் மாத்திரம் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்தால், முந்தின இஸ்லாமிய விவாகம் ரத்தாகிறதல்லவென்றும், இஸ்லாமிய முறைப்படி விடுதலையடைந்தாலன்றி ஒருஸ்திரீ மறுவிவாகஞ் செய்யலாகாதென்றும் 1938-ம் வருஷத்தில் ஓர் ஆக்ட் அமலுக்கு வந்திருக்கிறது.

சம்மதித்தால், அதற்கு உடன்படுவதே கிறிஸ்தவ தம்பதியின் கடமை. கிறிஸ்து மார்க்கத்தை அநுசரியாத தம்பதி சம்மதியாவிட்டால், 1866-ம் வருஷத்து XXI-வது ஆக்ட் பிரகாரம் கோர்ட்டின் மூலமாய் விடுதலைபெற்றபின்னரே மறுவிவாகஞ் செய்யலாம்.

12. கும்பல் கும்பலாக ஜனங்கள் கிறிஸ்தவர்களாகும் பிரதேசங்களில், புருஷனோ மனைவியோ ஞானஸ்நானம் பெற்றபின் மார்க்கத்தை மறுதலித்து, கிறிஸ்தவ தம்பதியை விட்டுப் பிரிந்து, வேறொரு ஹிந்து தம்பதியை விவாகஞ் செய்து, அல்லது சேர்த்துக்கொண்டு வாழுவது தெரிந்த விஷயம். ஹிந்து முறையாகவாவது, கிறிஸ்தவ முறையாகவாவது புருஷன்—மனைவியாக இணைக்கப்பட்டவர்களில், புருஷனோ, மனைவியோ மேற்கண்டபடி பிரிந்துபோனதினிமித்தம், விடப்பட்ட கிறிஸ்தவ தம்பதி வேறு விவாகஞ்செய்ய விரும்பினால், அவ்விஷயத்தைக் கண்டத்து அத்தியக்ஷருக்குத் தெரியப்படுத்தவேண்டும். மார்க்கத்தை மறுதலித்துபோன தம்பதி இருக்கும் ஸ்தலம் எதுவென்றும், வேறொரு விவாகஞ் செய்து எவ்வளவு காலமாயிற்றென்றும், விவாகச்சடங்கு நிறைவேற்றப்பட்டதோ, அல்லது விவாகமின்றியே கூடிவாழுகிறார்களோ என்றும், இப்புதுச் சம்பந்தத்தினால் குழந்தைகள் உண்டோவென்றும் தகுந்த ஆதாரத்துடன் கண்டத்து அத்தியக்ஷருக்குத் தெரிவிக்கவேண்டும். இவற்றை அவர் பார்வையிட்டு, இந்திய சபை அத்தியக்ஷர்கள் ஆலோசனைக்கிசைய தீர்ப்பளிப்பார்.

அநுபந்தம் 2

கிறிஸ்தவ விவாகத்தைப்பற்றிய ராஜாங்கச் சட்டங்கள்

கிறிஸ்தவ விவாகம் ஒரே மனைவி விவாகம், ஒரே புருஷன் விவாகம், ஆயுள்கால சம்பந்தம், கிறிஸ்துமார்க்க விதிகளை அநுசரித்துச் செய்யும் விவாகம்.

இதை அந்தந்த ராஜாங்கங்கள் எக்காலும் அங்கீகரித்திருக்கின்றன. கிறிஸ்தவ விவாகத்தைப்பற்றிய சட்டங்கள் இந்தியா தேசத்திலும் உள. இவற்றில் முக்கியமானது 1872-ம் வருஷத்தில் விதிக்கப்பட்ட XV-வது ஆக்ட். "இந்திய கிறிஸ்தவ விவாக ஆக்ட்" என்பது அதன் பேர். அதன் முக்கிய அம்சங்களை இங்கே குறிப்பிடுவோம்.

1. விவாகஞ்செய்ய ஆலோசிக்கும் இருவர், கிறிஸ்தவர்களாயிருப்பின், அல்லது இருவரில் ஒருவர் கிறிஸ்தவராயிருப்பின், அவர்கள் விவாகம் கீழே கண்ட ஐந்து முறைகளில் ஒன்றின்படியே நடைபெறத்தகும்:—

(*a*) அத்தியக்ஷ பட்டாபிஷேகம் பெற்ற எவராயினும் நடத்தலாம். அவரோ, தமது சபையின் சட்டங்கள், சடங்குகள், முறைகள், வழக்கங்களை அநுசரித்தே அதை நடத்தவேண்டும். அறிக்கை, இனவழி, ஆராதனை முறை—முதலியவற்றில் சபைச்சட்டம் எதுவோ அதைத் திட்டவட்டமாய் அநுசரிக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(*b*) ஸ்காட்லாந்து சபை குருமார் எவராயினும் நடத்தலாம். அவரும் தமது சபையின் சட்டங்கள், சடங்குகள், முறைகள், வழக்கங்களை அநுசரித்தே நடத்தவேண்டும்.

(*c*) இதர சபைக் குருமாரில் யார் யார் இந்த ஆக்டின் ஆறுவது பிரிவின்கீழ் அதிகாரப்பத்திரம் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் நடத்தத்தகும்.

(*d*) இந்த ஆக்டின்கீழ் சர்க்காரால் நியமிக்கப்படும் விவாகப் பதிவு உத்தியோகஸ்தர் (Marriage Registrar) முன்னிலையில் விவாகம் நடைபெறத்தகும். இவ்வித உத்தியோகஸ்தர் ஜில்லாவுக்கு ஒருவர் இருப்பார்.

(*e*) சுதேச கிறிஸ்தவர்களுக்கு விவாக அத்தாட்சிப் பத்திரம் கொடுப்பதற்கு இந்த ஆக்டின் ஒன்பதாவது பிரிவின் கீழ் அதிகாரம் பெற்றிருக்கும் யாராகிலும் நடத்தத்தகும். அந்தந்த மிஷனில் பட்டம்பெறாத உபதேசியார், அல்லது ஆசிரியருக்கு, இப்பிரிவின்கீழ் அதிகாரம் வரவழைத்துக்கொள்ளத்தகும். தம்பதிகள் இருவரும் கிறிஸ்தவர்களாயிருந்தால் மாத்திரம், இப்பிரிவின்கீழ் அதிகாரம் பெற்றவர் விவாகம் நடத்தலாம்.

2. உதயம் ஆறுமணிக்கும் மாலை ஏழு மணிக்குமிடையில் மாத்திரம் கிறிஸ்தவ விவாகம் நடக்கலாம்.

3. ஓரிடத்திலிருந்து ஐந்து மைலுக்குள் அங்கிலேய சபையின் ஆராதனை வழக்கமாய் நடக்கும் இடம் இல்லாவிட்டாலன்றி, மற்றப்படி, வழக்கமாய் ஆராதனை எங்கே நடக்குமோ அங்கேயே விவாக ஆராதனை நடத்தப்படலாம்.

4. விவாகம் நடத்தும் குருமார் ஒவ்வொருவரும் ஆராதனை முடிந்த உடனே, ஸ்தலத்து விவாக ரிஜிஸ்டரில் அதின் விவரத்தைப் பதிவுசெய்து, வருஷத்துக்கு நாலுமுறை அதின் பிரதியைக் கையொப்பமிட்டு, அக்கண்டத்து ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும். இதை அவர் அந்த ராஜதானியின் ரிஜிஸ்ட்ரார் ஜெனராலுக்கு அனுப்புவார்.

5. தம்பதிகள் இருவரில்—இருவருமாவது, ஒருவராவது, தாம் உள்ளாயிருக்கும் சட்டத்துக்கு விரோதமாக விவாகஞ் செய்தால், அவ்வித தகாத விவாகம் இந்த ஆக்டின்கீழ் நிறைவேற்றப்பட்டபோதிலும் அது கிரமமான விவாகமாக எண்ணப்படமாட்டாது.

"தாம் உள்ளாயிருக்கும் சட்டம்" என்பதில், தாம் சேர்ந்திருக்கும் சபையின் சட்டம், தமது ஜனன தேசச் சட்டம் சேர்ந்திருக்கும்.

கவனம்

இந்த ஆக்டைச் சில விஷயங்களில் திருத்தும்படி பல முயற்சிகள் தற்சமயம் (1943) நடைபெறுகின்றன. அவை தேசச் சட்டமாவதற்கு இன்னம் சில வருஷங்கள் செல்லலாம்.

அநுபந்தம் 3

விவாக அறிக்கையைப்பற்றிய விதிகள்

விவாகத்துக்கு அறிக்கை வாசிப்பதைப்பற்றிப் பற்பல சமயங்களில் குருமார் திகைப்பது வழக்கமாயிருக்கிறபடியால், இது விஷயத்தில் இந்திய சபையின் விதிகளைத் தெளிவாய் இங்கே வரைகிறோம்.

1. ஒவ்வொரு பாஸ்த்றரேட்டு ஸ்தானக் கோவிலிலும் விவாக அறிக்கை ரிஜிஸ்டர் ஒன்று இருக்கவேண்டும். அந்தப் பாஸ்த்றரேட்டில் கூறப்படும் அறிக்கைகளை அப்புஸ்தகத்தில் எழுதி வைக்கவேண்டும்.

2. பாஸ்த்றரேட்டு கஸ்பா கோவிலில் அறிக்கை வாசித்து, அப்பாஸ்த்றரேட்டுக்குள்ளிருக்கும் எந்தக் கோவிலிலும் விவாகம் நடத்தலாம்.

3. விவாகஞ் செய்யப்போகிறவர்கள் ஒரே பாஸ்த்றரேட்டைச் சேர்ந்தவர்களானால், அவர்கள் இருவரும் அங்கங்களாயிருப்பது எந்தப் பாஸ்த்றரேட்டோ, அப்பாஸ்த்றரேட்டில் அவர்கள் இருவருக்கும் அறிக்கை வாசிக்கவேண்டும்;

வெவ்வேறு பாஸ்த்றரேட்டைச் சேர்ந்தவர்களானால், இரண்டு பாஸ்த்றரேட்டிலும் அறிக்கை வாசிக்கவேண்டும். மூன்று தரம் அறிக்கையாயிற்று, தடை சொல்லப்படவில்லை என்று ஒரு சேகரக் குருவானவர் அத்தாட்சிப் பத்திரம் கொடாவிட்டால், மற்றச் சேகரக் குருவானவர் விவாகத்தை நடத்தக் கூடாது (ரூபிரிக்).

4. மூன்று ஞாயிறில் அறிக்கை வாசிக்கவேண்டுமென்பது விதியேயன்றி, ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து வரும் மூன்று ஞாயிறில் கூறவேண்டுமென்பது விதியல்ல. முதல் அறிக்கை வாசித்த தேதியிலிருந்து மூன்று மாதம் பதினைந்து நாள் வரைக்கும் அவ்வறிக்கை செல்லும் (1908-ம் வருஷத்திய அத்தியக்ஷர் சினட், 14-ம் தீர்மானம்).

5. பட்டம் பெறாத எந்த ஊழியனும் தேவாராதனை நேரத்தில் அறிக்கை வாசிப்பதற்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால், அவ்வாறு கூறும் ஒவ்வொரு அறிக்கைக்கும் அப்பாஸ்த்றரேட்டு குருவானவருடைய அனுமதி இருக்கவேண்டும் (1908-ம் வருஷத்திய அத்தியக்ஷர் சினட் 14: 2-ம் தீர்மானம்).

6. விவாகம் செய்யப்போகிறவர்கள் குடியிருக்கும் இடங்களிலேயே அறிக்கை வாசிப்பது சரி. ஓலைகூறும் சமயத்தில் அவர்கள் அவ்வூரிலிருக்கவேண்டுமென்பது கட்டாயமல்ல. அப்பாஸ்த்றரேட்டில் அவர்கள் கிரமமான சபை அங்கங்கள் என்று யாவருக்கும் தெரிந்திருந்தால் போதும்.

7. மூன்று ஞாயிறுகளிலாவது, திருநாட்களிலாவது இந்திய கிறிஸ்தவர்களுக்கு அறிக்கை வாசிக்கலாம். எந்த நாளுக்காக ஜெப புஸ்தகத்தில் சுருக்க ஜெபம், நிருப வாக்கியம், சுவிசேஷ வாக்கியம் குறித்திருக்கிறதோ, அதுவே திருநாள் என்று எண்ணப்படும். இவ்வித திருநாட்களில் எங்கெங்கே விசேஷ ஆராதனை வைக்கிறது வழக்கமோ, அங்கே அத்திருநாட்களில் அறிக்கையும் வாசிக்கலாம். (1918-ம் வருஷத்திய அ. சினட் 12-ம் தீர்மானம்).

விவாகஞ்செய்யப்போகிறவர்கள் இன்னாரென்று பாஸ்த்றரேட்டு குருவுக்கு தெரியாதிருக்குமானால், ஞாயிறில் தவிர மற்ற நாட்களில் அறிக்கை வாசிக்க அவசியமில்லை.

8. அறிக்கை வாசித்த ஆலயத்தில், அல்லது அறிக்கை வாசிக்கப்பட்ட ஆலயங்களில் ஒன்றில் மாத்திரம் சாதாரண

மாக விவாகம் நிறைவேற்றப்படவேண்டும். ஆகவே, எங்கே விவாகம் வைக்கப்படவேண்டுமென்று கலியாணக்காரர் தீர்மானிக்கிறார்களோ அங்கே அறிக்கை வாசிப்பது உசிதம். ஆகிலும், ஏதாமொரு நியாயமான காரணத்தையிட்டு, அறிக்கை வாசிக்கப்படாத ஓர் கோவிலில் விவாக ஆராதனை நடப்பிக்க வேண்டியதானால், அவ்வாலயத்து குருவானவர் அக்காரணங்களைத் தெளிவாய் எழுதி, அறிக்கை அத்தாட்சிக் கடிதங்களையும் அனுப்பி, கண்டத்தின் அத்தியக்ஷருக்குத் தெரிவிக்கவேண்டும். அத்தியக்ஷர் ஒப்புக்கொள்ளுவாராகில், அவருடைய அதிகாரம்பெற்று, குருவானவர் தமது ஆலயத்தில் விவாகம் நிறைவேற்றலாம். அல்லது, தம்பதிகள் இருவரின் ஆலயங்களிலும், விவாகத்தை நிறைவேற்ற விரும்பும் மூன்றாவது ஆலயத்திலும், அறிக்கை வாசிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

9. அறிக்கை வாசிக்காமல் யாராவது விவாகஞ்செய்ய நினைப்பார்களாகில், அத்தியக்ஷரிடத்திலிருந்தாவது, அவரால் அதிகாரம்பெற்ற சரோகேட்டுகளில் ஒருவரிடத்திலிருந்தாவது, அறிக்கை வாசிக்காமல் விவாகஞ்செய்ய, விடுதலைப்பத்திரம் (லைசென்ஸ்) பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம் உண்டு.

10. லைசென்ஸாவது அறிக்கையாவதின்றி எந்தக் குருவும் விவாகம் நடத்தலாகாது.

அநுபந்தம் 4

விவாகம் நடத்தும் முறையில் கண்டிருக்கும் ஆரம்பப் பிரசங்கத்திற்குப் பதிலாக உபயோகிக்கத்தக்க பிரசங்கம்

(இது 1938-ஆு ஜனுவரியில் கூடின அத்தியக்ஷர் மகா சபை அனுமதிபெற்றது)

பிரியமானவர்களே, தேவ சமுகத்திலும் இந்தச் சபைக்கு முன்பாகவும் இந்தப் புருஷனையும் இந்த ஸ்திரீயையும் பரிசுத்த விவாக நிலைமையில் சேர்க்கும்படி இவ்விடத்தில் கூடி வந்திருக்கிறோம். விவாகமானது பரிசுத்தமும் மேன்மையுமுள்ள நிலைமை. கடவுள் தாமே இதை ஏற்படுத்தினார் என்று பரிசுத்த வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. கலிலேயாவி

ுள்ள காணு ஊரில் நடந்த கலியாணத்துக்குக் கிறிஸ்துநாதர் தாமே போயிருந்து, முதலாம் அற்புதத்தைச் செய்து, இந்தப் பரிசுத்த நிலைமையை மேன்மைப்படுத்திச் சிறப்பித்தார். கடவுளின் நியமத்தின்படி சேர்க்கப்பட்டவர்களை ஒருவரும் பிரித்துவிடக்கூடாதென்றும் வேத வசனம் நமக்குப் போதிக்கிறது. விவாக சம்பந்தம் ஆயுள்கால சம்பந்தம் என்றும், மரணம் ஒன்று தவிர வேறெதுவும் இச்சம்பந்தத்தைப் பிரிக்கக்கூடாதென்றும் ஆதிமுதல் கடவுள் சித்தங்கொண்டாரென இதினுல் அறிகிறோம். மேலும், பரிசுத்த ஞானஸ்நானத்தினுல் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறவர்களுக்குப் பரிசுத்த விவாகம் ஓர் உன்னத இரகசியமடங்கிய மேன்மையான சம்பந்தம். பரிசுத்த அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில் இதை நமக்கு வெளிப்படுத்தியிருக்கின்றனர். கிறிஸ்துவுக்கும் அவர் திருச்சபைக்குமுள்ள ஞானசம்பந்தமே இந்த இரகசியம். ஆகவே, விவாக சம்பந்தத்தில் இணைக்கப்படும் கிறிஸ்தவர்கள் இருவர் இவ்வுன்னத இரகசியத்தின் புறம்பான அடையாளத்தில் இணைக்கப்படுகிறார்கள். ஆகையால், அவர்கள் மரணபரியந்தம் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்கப் பிரமாணம் செய்வதுமின்றி, அப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய கிருபையையும் வல்லமையையும் கிறிஸ்துவினிடமிருந்து பெற்றுக்கொள்வோமென்று சந்தோஷமாய் விசுவாசிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால், யோசனையின்றி, அற்பத்தனமாய், காமாதுர நோக்கத்துடன், எவராயினும் பரிசுத்த விவாக நிலைமையில் பிரவேசிக்கத் துணியாமல், பயபக்தியாய், விவேகத்தோடும், தெளிந்த புத்தியோடும், கடவுள் பயத்துடன், விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்தரங்களை உணர்ந்து, இந்நிலைமையில் பிரவேசிக்கவேண்டும். அந்த முகாந்தரங்களாவன:—

முதலாவது, கடவுளுடைய சித்தத்தின்படி மனுகுலம் விருத்தியாகவும், பிள்ளைகள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்திலும் அறிவிலும் அவர் திருநாமத்திற்கு மகிமையாக வளர்க்கப்படவும், விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

இரண்டாவது, கடவுளால் அமைக்கப்பட்டிருக்கும் சுபாவக் கோரிக்கைகளும் ஆசைகளும் பரிசுத்தமாக்கப்

பட்டுக் கிரமப்படுத்தப்படவும், இந்தப் பரிசுத்த நிலைமைக்கு தேவனாலே அழைக்கப்படுகிறவர்கள் கற்புள்ளவர்களாய் அதில் நிலைத்திருக்கவும் விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

மூன்றாவது, வாழ்விலும் தாழ்விலும் ஸ்திரீ–புருஷர் ஒருவரால் ஒருவர் பெறவேண்டிய சிநேகத்தையும் சகாயத்தையும் ஆறுதலையும் அடைய, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தப் பரிசுத்த நிலைமையில் மி ....

அநுபந்தம் 5

இனவழி விலக்கு விதிகளைப் பரீட்சிக்கும்படி காந்தர்புரி பிரதம அத்தியக்ஷர் ஏற்படுத்திய விசாரணைக் கமிற்றியின் சிபார்சுகள்

ஜெபபுஸ்தக இறுதியில் அச்சிட்டிருக்கும் ஜாபிதாவைப் பரீட்சித்து, அந்த ஜாபிதாவில் கண்ட விலக்கு விதிகளுக்கு ஆதாரம் என்னவென்றும், ஒவ்வோர் தேசத்தில் சபைச் சுயாதிபத்தியம் வஹிக்கும் மாகாணச் சபைகளுக்கு அவற்றில் எதையாவது தள்ளிவிட அதிகாரம் உண்டாவென்றும் விசாரிப்பதற்கு, பண்டிதரடங்கிய ஓர் விசாரணைக் கமிற்றியை காந்தர்புரி பிரதம அத்தியக்ஷர் 1937-ம் ஆண்டில் நியமித்தனர். அக்கமிற்றிமாரின் ரிப்போர்ட்டு இப்பொழுது வெளியாகியிருக்கிறது. அன்னவர் சிபார்சுகளை இங்கு சுருக்கமாய் எடுத்தெழுதுகிறோம்.

1. பார்க்கர் பிரதம அத்தியக்ஷரின் ஜாபிதாவைத் திருத்துவதில் கவனிக்கவேண்டிய குறிப்புகள் சிலவுள. அதில் கண்ட சில விலக்குகள் எக்காலத்துமுரிய சர்வஜன பொது விலக்குகள். வேறு சில விலக்குகளோ வெவ்வேறு சமுதாயத்துக்கேற்ற செல்லத்தக்கவை; அதாவது: என்னென்ன நியாயங்களையிட்டு சில இனவழிகள் விலக்கப்பட்டனவோ, அந்தந்த நியாயங்களை வெவ்வேறு சபைகள் எவ்வளவு முக்கியமாக எண்ணுமோ, அவ்வளவுக்குத் தக்கதாகவே அந்தந்த விலக்குகளை அச்சபைகள் மதித்து ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரும்.

விசாரணைக் கமிற்றிமார் மூன்று ஜாபிதா தயார்செய்திருக்கின்றனர். இவற்றை அடிப்படையாகக்கொண்டு, அங்கிலேய ஐக்கியத்தைச் சேர்ந்த அந்தந்த மாகாணச் சபைகள் தம்தம் இனவழி விலக்கு ஜாபிதாவை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

அட்டவணை 1. இரத்த சம்பந்தமான இனவழிகள்

சர்வஜன பொது விலக்குகளாக இவற்றைப் பாவிக்கவேண்டும்:—

தெய்வப் பிரமாணம் என்று மதித்து, எவ்விடத்திலாவது எக்காலத்திலாவது ஒருவனும் தன்:

	ஜெபபுஸ்தக இனவழி இலக்கம்:
தாயை	10
குமாரத்தியை	13
தகப்பனின் தாயை (அதாவது, பாட்டியை)	1
தாயின் தாயை (பாட்டியை)	1
குமாரனின் குமாரத்தியை (பேத்தியை)...	19
குமாரத்தியின் குமாரத்தியை (பேத்தியை)	20
சகோதரியை (கூடப் பிறந்தவளை)	16
தகப்பனின் குமாரத்தியை (மாற்றான் சகோதரியை)	16
தாயின் குமாரத்தியை (மாற்றான் சகோதரியை)	16

விவாகஞ் செய்யலாகாது.

அட்டவணை 2. இனவழி சம்பந்தமான விலக்குகள்

கிறிஸ்துசபைப் பிரமாணம் என்று மதித்து, சர்வலோகப் பொது விதியாகத் திருச்சபை பாவிக்கவேண்டிய விலக்குகள்:—ஒருவன் தன்:

மனைவியின் தாயை (மாமியார்)		12
மனைவியின் குமாரத்தியை (மாற்றான் குமாரத்தியை)		14
தகப்பனின் மனைவியை (மாற்றான் தாயை)		11
குமாரனின் மனைவியை (மறுமகளை)		15
தகப்பனின் தகப்பனுடைய மனைவியை	(மாற்றான் பாட்டியை) ...	2
தாயின் தகப்பனுடைய மனைவியை	(மாற்றான் பாட்டியை) ...	2
மனைவியின் தகப்பனுடைய தாயை	மனைவியின் பாட்டியை ...	3
மனைவியின் தாயினுடைய தாயை	மனைவியின் பாட்டியை ...	3
மனைவியினுடைய குமாரனின் குமாரத்தியை	(மனைவியின் பேத்தியை) ...	23
மனைவியினுடைய குமாரத்தியின் குமாரத்தியை	(மனைவியின் பேத்தியை) ...	24
குமாரனுடைய குமாரன் மனைவியை	(பேரன் மனைவியை) ...	21
குமாரத்தியினுடைய குமாரன் மனைவியை	(பேரன் மனைவியை) ...	22

விவாகஞ் செய்யலாகாது.

அட்டவணை 3. வேறு இரத்த சம்பந்த விலக்குகளும், இனவழி விலக்குகளும்

இவை யாவும் ஒன்றுபோல சர்வஜன பொதுச் சம்மதம் பெற்றவையன்று. பின்கண்ட இனவழிகளிலும் விவாகம் தகாதென்று ஒவ்வோர் தேசத்தில், ஒவ்வோர் காலத்தில், திருச்சபை விதித்திருப்பதுண்டு. ஒருவன் தன்:

தகப்பனின் சகோதரியை (அத்தையை)	... ...	4
தாயின் சகோதரியை (அத்தையை)	... ...	5
சகோதரன் குமாரத்தியை (மகள் வரிசை)	... ...	25
சகோதரி குமாரத்தியை (மருமகள் வரிசை)	... ...	26
மனைவியின் சகோதரியை (கொழுந்தியை)	... ...	17
மனைவியின் தகப்பன் குமாரத்தியை (மாற்றான் கொழுந்தியை)	...	17
மனைவியின் தாய் குமாரத்தியை (மாற்றான் கொழுந்தியை)	... ...	17
சகோதரன் மனைவியை (மதனியையாவது கொழுந்தியையாவது)	...	18
மனைவியின் சகோதரன் மகளை (முறைக்கு: மருமகள்)	... ...	29
மனைவியின் சகோதரி மகளை (முறைக்கு: மகள்)	... ...	30
சகோதரன் மகனின் மனைவியை (முறைக்கு: மருமகள்)	... ...	27
சகோதரி மகனின் மனைவியை (முறைக்கு: மகள்)	... ...	28
மனைவியின் தகப்பனுடைய சகோதரியை மனைவியின் தாயினுடைய சகோதரியை	(முறைக்கு: அத்தை) ...	8 9
தகப்பனுடைய சகோதரன் மனைவியை	(முறைக்கு: சின்னம்மா, பெரியம்மா ...	6
தாயினுடைய சகோதரன் மனைவியை	(முறைக்கு: அத்தை) ...	7
தகப்பனுடைய சகோதரன் குமாரத்தியை	முறைக்குச் சகோதரி ...	
தகப்பனுடைய சகோதரி குமாரத்தியை	முறைப்பெண் ...	
தாயின் சகோதரன் குமாரத்தியை	முறைப்பெண் ...	
தாயின் சகோதரி குமாரத்தியை	முறைக்குச் சகோதரி ...	

விவாகஞ் செய்யலாகாது.

2. முதலாம் அட்டவணையில் கண்ட இனவழிகளில் விவாகம் ஆகாது என்ற கட்டளை கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கும் பொது விதியாகப் பாவிக்கவேண்டுமென்று விசாரணைக் கமிற்றிமார் சிபார்சு செய்கிறார்கள். அதாவது, இந்த அட்டவணையில் கண்ட எந்த இனவழியிலும் விவாகஞ் செய்துகொண்டவர்கள் புருஷனும் மனைவியுமாகக் கூடி வாழும் பரியந்தம் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தகாது.

3. இரண்டாம் அட்டவணையில் கண்ட இனவழிகளிலும் விவாகம் ஆகாதென்பதே பொது விதியாயிருத்தல் வேண்டும். கிறிஸ்தவர்களாகுமுன் இவ்வின வழிகளில் இருவர் விவாகம்பண்ணியிருப்பின் அவர்களுக்கு

ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்ற ஒரு புறநடைக்குமட்டும், வேண்டுமானால், இடங்கொடுக்கலாம்.

4. மூன்றும் அட்டவணையிற் கண்ட முதல் நான்கு இனவழியிலும் விவாகம் ஆகாது என்பது அங்கிலேய ஐக்கியத்தைச் சேர்ந்த சகல சபைகளுக்கும் விதியாயிருக்கவேண்டுமென்று கமிற்றிமார் சிபார்சு செய்கிறார்கள்.

5. மூன்றும் அட்டவணையிற் கண்ட மற்ற விலக்குகள் விஷயமாய்க் கமிற்றிமார் செய்யும் சிபார்சு என்னவெனில்: அங்கிலேய ஐக்கியத்தைச் சேர்ந்தவைகளாய், வேறு வேறு ஜாதிகள் நடுவிலும் வேறு வேறு தேசங்களிலும் வேறு வேறு மாகாணங்களிலும் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் சபைகளின் சட்டநிரூபணச் சபையார், ஒவ்வொரு விலக்குகளையும் அந்தந்த சமுதாயங்களின் சாங்கிக நிலைமைக்குத் தக்கபடி பரீக்ஷித்து, விதி ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அந்த விதிகள் மூன்று விதமாய் இருக்கலாம்:—

i. ஏதாவதொரு இனவழியில் விவாகத்தை விலக்கவேண்டியதில்லை எனத் தீர்மானித்தால், அந்த இனவழியை இந்த அட்டவணையிலிருந்து நீக்கிவிடலாம்.

ii. அல்லது, ஏதாவதொரு இனவழியில் விவாகம் ஒருபோதும் தகாது எனத் தீர்மானித்தால், அந்த இனவழியை மூன்றும் அட்டவணையினின்று நீக்கி இரண்டாம் அட்டவணையில் சேர்க்கலாம்.

iii. அல்லது, ஏதாவதொரு இனவழியில் விவாகம் தகாது என்ற பொது விதியிருந்தபோதிலும், சில சில பிரத்தியேக ஆட்கள் விஷயத்திலோ, சில சில விசேஷ வகுப்பார் விஷயத்திலோ, அத்தியக்ஷர் விசேஷ விடுதலைப் பத்திரம் கொடுத்து, அந்த ஆட்களுக்காகிலும் அந்த வகுப்பாருக்காகிலும் அவ்விதியை சற்று நீக்கிவைக்கலாம்.

6. அங்கிலேய ஐக்கியத்தைச் சேர்ந்து சபாசுயாதிபத்தியமடைந்திருக்கும் மாகாணச் சபைகள் தமக்குச் சட்டமாக ஏற்படுத்திக்கொள்ளும் அட்டவணைகள், இக்கமிற்றிமார் இங்கிலாந்து சபைக்குச் சிபார்சு செய்திருக்கும் அட்டவணைகள் மாதிரியாய் இருத்தல் நன்று. அவசியமான மாறுதல்கள் செய்துகொள்ளலாம், அத்தியக்ஷரின் விசேஷ விடுதலைப்பத்திரம் பெறத் தகுந்த இனவழிகளைப் புள்ளியிட்டுக் குறிப்பிட்டுக்கொள்ளலாம்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1943. B 327 2E 1M.

Other Tamil Books by the Bishop of Dornakal

Sabbath or Sunday? ஓய்வுநாளா, கர்த்தருடைய நாளா?

1½ annas

Studies in the Book of Job. யோபினாகம வியாக்கியானம்

6 annas

Devotional Studies in the Book of Revelation. வெளிப்படுத்தல் ஆகமத்தின்பேரில் ஆராய்ச்சிப் பாடங்கள். **4 annas**

The Church and Evangelism. திருச்சபையும் சுவிசேஷப் பிரபல்யமும்.

4 annas

Studies in the Life of Christ based on the Gospel by St. Mark. அருள்நாதர் ஜீவிய விருத்தாந்தம் பரி. மார்க்கு சுவிசேஷத்தை ஆதாரமாக வைத்தெழுதியது. **8 annas**

S.P.C.K. in India, Post Box 501, Park Town, Madras